பதிவு இலக்கம் : 105267

வார இதழ்

# தீபம்

18.08.2019 தீபம் –195

விலை ரூபா 30.00



மகிழ்ச்சி உணவகம்

கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி. தொ. இல 076 533 1798




## செஞ்சோலை நினைவுகள்...



## இந்தச் சைக்கிள் எப்போது ஓடும்?



## இவரா ஜனாதிபதி ?



## ஓநாய்களின் அழுகையும் முதலைகளின் கண்ணீரும்

"முறையான பயிற்சியே உயிர் காக்கும்"

சீபன் பாஸ்கர் லேணர்ஸ்

SEEBAN BASKAR LEARNERS



அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சி போதனாசிரியர்களைக் கொண்ட பாடசாலை



கண்டி வீதி, கைதடிச்சந்தி. 021 223 2050 | 076 713 6304

மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி. 021 226 0459 | 076 015 3375 | 077 057 0459

seebanbaskar

daseepan@gmail.com

இது தமிழ்பேசும் மக்களுக்கான தனித்துவமான பத்திரிகை




# அப்பாவும் பிள்ளையும்



நாம் இருக்கும் இடம் வேண்டுமானால் கீழே இருக்கலாம். ஆனால் இருக்கப் போகும் இடம் மிக உயர்ந்ததாக இருக்க நாம்தான் முயல வேண்டும்.

● ஆங்கில அகராசியின் ஆசிரியரான சாமுவேல் ஜான்சனின் தந்தை மிகுந்த வறுமையில் வாழ்ந்து வந்த புத்தக வியாபாரியாவார்.

● மொழிகளைத் தாண்டி உலக மக்களையே சிரிப்பில் ஆழ்த்திய சார்லி சாப்ளின் தந்தை வீட்டு வேலைக்காரராக இருந்துள்ளார்.




## அறியவேண்டிய சில ஐந்துகள்

**பஞ்சாமிர்தம்**
வாழைப்பழம், சர்க்கரை, தேன், நெய், பேரிச்சம் பழம்

**பஞ்சாங்கம்**
நாள், நிதி, யோகம், கரணம் ,நட்சத்திரம்

**பஞ்ச பூதங்கள்**
நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்


**பஞ்ச இந்திரியம்**
மெய்,வாய்,கண்,மூக்கு,செவி

## ஆத்திசூடி அறிவோம்




- கண்டொன்று சொல்லேல்
  பார்க்காததை பார்க்காதவற்றைப் பார்த்ததாகப் பேசாதே
- ஞயம்பட உரை
  கேட்பவருக்கு இன்பம் உண்டாகும் படி இனிமையாகப் பேசு.
- இயல்பு அலாதன செய்யேல்
  நல் லொழுக்கத்துக்கு மாறான செயல்களைச் செய்யாதே.
- அனந்தல் ஆடேல்
  மிகுதியாக தூங்காதே

# ஆப்பும் குரங்கும்



பக்கத்தில் உள்ள காட்டுக்குச் சென்று, சிறிய மரங்களை வெட்டி, அவற்றை துண்டு போட்டு, விறகாகச் சுமந்து வருவது அவனது அன்றாடப் பணி. விறகை விற்று வரும் பணத்தில் அவன்குடும்பம் நடாத்திக் கொண்டிருந்தான். வழமைபோல ஒருநாள், ஒரு பெரிய அடிமரத் துண்டை கோடரியால் பிளக்கத் தொடங்கினான். பாதியளவு பிளந்த நிலையில், மரக்குத்தியின் பிளவுக்குள் ஓர் ஆப்பை வைத்து விட்டு, ஓய்வெடுக்கச் சென்றான். இதற்காகவே காத்திருந்த ஒரு குரங்கு, மரத்திலிருந்து கீழ் இறங்கியது. குத்தியின் மேல் உட்கார்ந்து ஆப்பை இழுக்க முற்பட்டது.பல தடவை இழுக்க, ஆப்பு சட்டென அதன் கையோடு வந்தது. அதே சமயம் வால், பிளவுக்குள் சிக்கிக் கொண்டது. வலி தாங்க முடியாமல் வீல் வீல் என்று கத்தியது. குரங்கின் அலறல் கேட்டு ஓடிவந்த விறகுவெட்டி, வாலை அறுத்து குரங்கை விடுவித்தான். வேதனையில் கத்திக் கொண்டு ஓடி மறைந்தது குரங்கு..

நீதி- அசட்டுச் செயல் என்றுமே ஆபத்தானது.






## பாப்பா! பாப்பா! பாரம்மா!

பாப்பா! பாப்பா! பாரம்மா!
பச்சைப் பசுங்கொடி பாரம்மா.

ஆடும் மயிலை பாரம்மா - நீ
அழகு தமிழில் பாடம்மா.

கூவும் குயிலை பாரம்மா - தினம்
பூப்போல் நீயும் சிரித்திடம்மா.

அழகு அன்னம் பாரம்மா - நீ
அன்பாய் என்றும் பழகிடம்மா.

பச்சை பசுங்கிளி பாரம்மா - அது
பிள்ளை மொழி பேசுதம்மா.

# அறிவோம் தெளிவோம்



நிலவில் முதன்முதலில் கால்தடம் பதித்து, மனித இனத்திற்கு பெருமை தேடித்தந்தவர் அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ரோங். 1930 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ம் திகதி அமெரிக்காவின் ஒஹியோ நகரில் நீல்ஆம்ஸ்ரோங் பிறந்தார்.முதன் முறையாக ஜெமினி 8 எனும் விண்வெளிவிமானத்தின் கட்டளை விமானியாக பணியாற்றினார். தனது 82 வயதில் நீல்ஆம்ஸ்ரோங் இவ்வுலகை விட்டு விடைபெற்றார்



# அறிவோம் நம் வளம்

## அதென்ன பனாட்டு?

பனம்பழக்களியை பாயில் ஊற்றி வெய்யிலில் காயவைத்து தட்டுத்தட்டாக வெட்டி மடித்து ஓலை உமலில் கட்டி அடுப்படிப் பறனில் புகைபடக்கட்டி வருடக்கணக்கில் பாதுகாத்து உண்ணும் பனம் பண்டம். தேங்காய்ச் சொட்டுடன் மிக அருமையாக இருக்கும். இது காலை, மாலை உணவாக ஒரு காலத்தில் இருந்திருக்கின்றது.

வார இதழ்
தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
18.08.2019 இதழ் -195
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# நிலம் காக்க, காவாக்கால்....!?

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் அந்த இனத்தின் கலாசாரத் தனித்துவத்தை இல்லாமல் அழித்துவிட்டால் போதும். அந்த இனம் மந்தபுத்தியுள்ள இனமாகி நாளடைவில் அழிந்து போய்விடும். இதுவல்லாதிக்கமேலாதிக்கபேரினவாதச்சிந்தனை யாளர்களின் மனிதநேயத்திற்கு முரண்பாடான கோட்பாடாகும்.

இந்தக் கருத்தியலின் அடிப்படையிலேயே இலங்கையின் பௌத்த – சிங்கள பேரினவாத அரசியல்வாதிகளும், மதவாதி களும் செயற்பட்டு வருகிறார்கள். கடந்த அரைநூற்றாண்டுக்கும் மேலாக தமிழ்பேசும் சிறுபான்மை சமூகத்தவரின் வாழ்வியல் இருப்பின் தனித்துவத்தை, பன்முகப்பட்ட வகையில் இல்லா தொழிக்கும் திட்டமிட்ட நகர்வுகளை ஜனநாயகத்தின் பெயரால் அவர்கள் முன்னெடுத்துச் செல்வதென்பது ஒன்றும் ரகசியமான விடயமல்ல.

தமிழ் பேசும் மக்களின் தேசியத்தன்மையானது அதன் பாரம்பரிய மரபுசார்ந்த, கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை யும், செழுமைமிக்க வாழ்விட தளத்தையும் ஆட்சி உரிமையையும் கொண்டது என்பதற்கான வரலாற்று ஆதாரங்கள் பல உண்டு. இது அனைவரும் அறிந்த உண்மையே!

புராண, இதிகாச, மற்றும் சரித்திரகால சான்றுகளை ஆதார மாக கொண்ட தமிழர்களின் பாரம்பரிய, பண்பாட்டு முதுசங்கள் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமான இருப்பியல் தொன்மையை உறுதிசெய்வதாக உள்ளன. இத்தகைய தொன்மைமிகு பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் செம்மொழியான தமிழ்மொழியை தாய் மொழியாகக்கொண்டசிறப்புஇயல்பும்பேரினவாதசிந்தனையாளர் களின் மன நமைச்சலுக்கும் உளப் புகைச்சலுக்கும் காரணங் களானதில் வியப்பில்லை.

இலங்கையைத் தனிப் பௌத்த சிங்கள நாடாக உருவாக்கத் துடிக்கும் பேராசைக் கனவில் மூழ்கிக் கிடக்கும் பௌத்தமத அடிப்படை வாதத்தில் ஊறிப்போன சிங்கள அரசியல்வாதிகளின் வெறித்தனம் உச்ச நிலையை எட்டும் வேளைகளில் தமிழ் மக் களும், தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்வுரிமைப் பிரதேசங்களும் சந்தித்த அவலங்கள் பௌத்த தர்ம கோட்பாடுகளையே அவமதிப் பவையாகும்.

பௌத்தத்தின் பெயரால் பேரினவாதிகள் மேற்கொண்டு வரும் அண்மைக்கால இன அழிப்பு நடவழக்கைகளின் தீவிரமானது தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டுத் தளங்களைக் குறி வைத்து வேகம் கொள்ளத்தொடங்கியுள்ளதே அச்சீட்டுவதாகவே உள்ளது.

தமிழர் தாயக நிலப்பரப்புகளைப் பல்வேறு காரணங்களைக் கூறி, அத்துமீறிக் கையகப்படுத்தி ஆக்கிரமிப்பதுடன், அவற்றைப் பௌத்த சிங்கள முதுசங்களாக அடையாளப்படுத்த முயல்வதும் அப்பட்டமான அயோக்கியத்தனமே!

கிண்ணியாவில், முல்லைத்தீவில், மலையகத்தில் எனத் தொடரும் கலாசார ரீதியிலான ஆக்கிரமிப்பு நடவழக்கைகள் தமிழ் மக்களை இந்த நாட்டிலிருந்தே விரட்டியடிக்கும் பைத்தியக்கார சிந்தனையின் வெளிப்பாடென்றால் அதுவே உண்மை.

இதனடிப்படையிலான மற்றொரு நகர்வு முயற்சியாகத் தமிழர் களின் ராஜதானியாக விளங்கிய நல்லூரில் அமைந்துள்ளவரலாற் றுத் தொன்மைச்சின்னமான மந்திரிமனையை பெரும்பான்மை சமூகத்தவர் ஒருவர் உரிமைகோரி அதனை அபகரிக்கும் திட்டத்து டன் நகர்வொன்றை மேற்கொண்டுள்ளதாகச் செய்தி வெளியாகி யுள்ளது.

இவை பேசித் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளாக உணரமுடிய வில்லை.

ஆக்கிரமிப்பாளர்கள் தாமாகவே உணர்ந்து தாம் கையகப்படுத் திய நிலப்பரப்பை விட்டு வெளியேறியதாக வரலாறு கிடையாது.

ஆக்கிரமிப்புக்குள்ளானவரால் விரட்டி அடிக்கப்பட்டதாகவே சரித்திர சான்றுகள் உள்ளன.

தமிழ் மக்கள் இதனைப் புரிந்து கொண்டு விழித்துக் கொண் டால் சரி.

# உயிர்ப்புறும் தருணம்....

கனப் பொழுதில் அதிர்வலைகள்
காற்றோடு கலந்த நம் உயிர்மூச்சின்
மானுடத்தின் இறுதி மூச்சும் இணைய
போதிமரம் தன் இலைகளை உதிர்த்து
மோன தியானத்தில் அஞ்சலித்தது

இயந்திரப் பறவைகள்
தம்மை ஏவியவரை இரைந்து சபித்தபடி
வலி சுமந்து நிற்போரின்
பழி சுமந்து மறைந்தன

கருகிய அரும்புகளையும்
சிதறிய மலர்களையும்
அந்த பகவானுக்கே காணிக்கையாக்கினீர்

வெட்கம் !

ஜீவனற்றுப் போன
செஞ்சோலையின் மேலாக
பாடித்திரிந்த பறவைகள்
எங்கே போயின !

அச்சமூட்டும் மௌனத்தின் பின்னால்
உறைந்திருக்கும் ஆழமான அர்த்தம்
உலகிற்கு எதனை உணர்த்துகிறது?
மெழுகுவர்த்திகளை அணைத்துவிட்டால்
அஞ்சாதீர்கள்
அடுத்துவரும் ஒளிப்பிழம்பு
சூரியனுடையதாக இருக்கும் என்றா?
தசாப்தத்திற்கு பின்னும்
ஒரு சகாப்தம் தோன்றுமென்றா?
சிதறிப்போன செஞ்சோலைப் பூக்களை
ஏந்தி சிலிர்த்த புனித மண்ணுக்கு
இன்னமும் வலிக்கிறது
எத்தனை காலத்திற்கு அந்நியச் சுவடுகள்
எங்களை மிதிப்பதை
தாங்கிக் கொள்வதாம்?
அந்த பூச்சுவடுகளின்
மிதித்தலுக்காக
எத்தனை காலம்
காத்திருப்பதாம்?
விடியல் நிச்சயமெனில்
விடியும் வரைக்கும்
காத்திருப்பு தொடரும்
வரலாற்றுக்கு முற்றுப் புள்ளி ஏது..?
உலகெங்கும்
சுடர்கள் ஏற்றப்படுகின்றன...
உண்மைகள் உயிர்த்தெழும் தருணம் அதுதான்!




- அனஜித்

வலிமையற்ற தோளினாய் போ போ போ
மார்பிலேஒ டுங்கினாய் போ போ போ
பொலி விலாழு கத்தினாய் போ போ போ
பொறி யிழந்த விழியினாய் போ போ போ
ஒலியி ழந்த குரலினாய் போ போ போ
ஒளியி ழந்த மேனியாய் போ போ போ
கிலிபி டித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மை யென்றும் வேண்டுவாய் போ போ போ

இன்று பார தத்திடை நாய் போலே போ போ போ
ஏற்ற மின்றி வாழுவாய் போ போ போ
நன்று கூறி லஞ்சுவாய் போ போ போ
நாணி லாது கெஞ்சுவாய்
சென்று போன் பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தை கொண்டு போற்றுவாய் போ போ போ
வென்று நின்கு மெய்யெலாம் பொய்யாக
விழிம யங்கி நோக்குவாய் போ போ போ



பாரதீ...



# கோத்தாபய ராஜபக்ஷ அமெரிக்க ஆதரவாளரா?

-கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்

2020ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவுகள் தென் இலங்கையில், அரசியலில் பிரதான பேசு பொருளாகியுள்ளது. பொதுஜனப் பெரமுன ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தாபய ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் வேட்பாளரை அறிவிக்காது விட்டாலும் ஏறக்குறைய சஜித் பிறேமதாஸ என்பதில் அதிக குழப்பம் ஏற்படாது என்றே தோன்றுகிறது. எதுவாயினும் இருவருமே பிரதான வேட்பாளராக நிறுத்தப்படப் போகிறார்கள் என்பது முடிவாகியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் இலங்கையின் மீதான பிராந்திய சர்வதேச அரசியலின் தாக்கம் முதன்மை பெறக் கூடிய விதத்தில் அமையவுள்ளது என்பதனை விளங்குவதாகவே இக்கட்டுரையும் அமையவுள்ளது.


பொதுஜன பெரமுனவின் வேட்பாளரை அறிவிக்க முன்னர் அதன் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்ட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷவை, அமெரிக்காவுக்கான தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் சந்தித்துள்ளார். அன்றைய தினம் காலை தெற்காசியாவுக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்த அலிஸ் வெல்ஸ் கொழும்பை வந்தடைந்ததாகவும், வேட்பாளர் அறிவிப்புக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷவை சந்திக்க திட்டமிடப்பட்டதாகவும் தெரியவருகிறது. அலிஸ் வெல்ஸ் உடன் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி. ரெப்லிஸ்ட் கூட இருந்தார். இது பற்றி கூர்மை இணையத்தளம் தனது கட்டுரையில் "கோத்தாபய ராஜபக்ஷ அமெரிக்காவின் ஆதரவுடன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்" எனக் குறிப்பிட்டுள்ளது. அதற்கான ஆதாரங்கள் பலவற்றை அது முன்வைத்துள்ளது.

இங்கு பிரதான விடயம் அமெரிக்காவுக்கு எதுவென்பதாகும். இலங்கையை மையப்படுத்தி அமெரிக்கா அதிக தந்திரோபாயங்களை வகுத்துள்ளது. குறிப்பாக இந்தோ-பசுபிக் தந்திரோபாயம் மிகப்பிரதான கடல் மற்றும் ஆகாயம் சார் உபாயமாக உள்ளதுடன் அதன் இராணுவ நலன்களுக் கூடாக அரசியல், பொருளாதார இலாபங்களை அடைவதற்கான உத்தியாக அமைந்துள்ளது. அதனால் சீனாவின் ஆதிக்கத்தினை பிரதான இரு கடல் பகுதியில் கண்காணிக்கவும், தனது செல்வாக்கை தக்கவைக்கவும் இத்திட்டமிடல் வாய்ப்பானதாக அமைந்துள்ளது. அவ்வாறே எதிர்கால இந்தியாவின் இருப்பினைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் இந்தோ-பசுபிக் தந்திரோபாயம் அவசியமானது. அதில் இலங்கை பிரதான புள்ளியாக இனங்காணப்பட்டுள்ளது. அதனால் இலங்கை அமெரிக்க நலன்களுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளது.


அதற்காக கோத்தாபய ராஜபக்ஷவை மட்டும் தான் ஆதரிக்க வேண்டும் என்ற நிலையில் அமெரிக்கா செயல்படுகிறதா? என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். 1979 ஆம் ஆண்டு ஈரானில் நிகழ்ந்த கலாசாரப் புரட்சியை அடுத்து அமெரிக்காவை ஈரான் வெளியேற்றியது. அத்தகைய வெளியேற்றத்திற்கு பின்பு ஒரு தரப்பை மட்டும் அமெரிக்கா ஆதரிப்பதில்லை என்ற கொள்கையை எடுத்திருந்தது. அதன் பின்பு உலக நாடுகளில் ஆளும் தரப்பையும், எதிர்த்தரப்பையும் ஒரே சமதளத்தில் வைத்துக்கொள்ளும் மரபை அமெரிக்கா கொண்டுள்ளது. எந்தத் தரப்பு வெற்றி ஈட்டுகிறதோ அந்தத் தரப்புடன் பயணிப்பதுவும், தோற்ற தரப்பை முற்றாகக் கைவிடாது செயல்பட்டதையும் காணக்கூடியதாக அமைந்திருந்தது. அதனையே இலங்கையிலும் அமெரிக்கா கடைப்பிடித்து வருகிறது. தெற்கு மற்றும் மத்திய ஆசிய உதவிச் செயலாளர் எதிர்கட்சி தலைவருடன் என்ன விடயம் உரையாடினார் என்பதில் வெளிவராத நிலை காணப்படுகிற வரையும் அதிக சந்தேககங்களே நிலவும். ஆனால் அந்தச் சந்திப்புத் திட்டமிடப்பட்ட விதத்தை பார்க்கும் போது ஏதோ முக்கிய விடயம் பரிமாற்றப்பட்டது என்பது தெளிவாகிறது. அது அமெரிக்க நலன் சார்ந்த விடயமாகவே அமைந்திருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துமிருக்காது. அப்படியாயின் அந்த அமெரிக்கா சார்ந்த நலன் எதுவாக அமைந்திருக்கும். ஒன்று சோபா உடன்படிக்கையை வலியுறுத்துவதாக அமைந்திருக்கும். அல்லது வேட்பாளர் மீதான நெருக்கடிகளைப் பற்றியதாக அமைந்திருக்கும். இதில் அமெரிக்கா தனது வேட்பாளர் என ஆதரவு தெரிவிக்கவேண்டுமாயின் அமெரிக்காவிலிருந்து வருகை தந்த உதவிச் செயலாளர் தேவைப்பட்டிருக்க மாட்டார். அதனைத் தனது தூதுவரைக் கொண்டே சாத்தியமாக்கியிருக்க முடியும். அப்படியாயின் இது பேரம்பேசலாக அமைந்திருக்க வாய்ப்பு அதிகம். அல்லது எச்சரிக்கையாக அமைந்திருக்கலாம். தனது பாரம்பரிய நட்பு சக்தியான ஐ.தே.க வை விட்டுவிட்டு அமெரிக்கா செயல்பட முனையும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவற்றை தவறவிடாது வெளிப்படுத்தியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அதாவது ஐ.தே.க.வை விட்டுவிட்டு செயல்பட முனையும் போது வேறு ஒரு நாட்டின் அனுசரணையுடனேயே அமெரிக்கா இதுவரை செயல்பட்டிருகிறது. ஆசிய ஆபிரிக்க நாடுகளில் தான் நேரடியாக ஈடுபாடு காட்டாது செயல்பட்டிருகிறது. இலங்கையில் நேரடியாகக் களத்தில் இறங்கியதற்கு காரணம் நிச்சயமாக ஆதரவு தெரிப்பதற்காக மட்டும் இருக்காது. உலக அரசியலில் எப்போதும் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் ஆதரவும் எதிர்ப்பும் அதனை மேற்கொள்ளும் அரசுகளின் நலன் சார்ந்தது. சதாம் உசைன் குவைத் மீது ஆக்கிரமிப்பு மேற்கொள்வதற்கான ஆதரவை முதலில் வெளிப்படுத்திய நாடே அமெரிக்கா தான் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கு அமெரிக்காவுக்கு இரண்டு விடயங்களில் கவனம் கொள்ள முயலும் ஒன்று இந்தியா மற்றது ஐ.தே.க. இவை இரண்டுடனும் அமெரிக்கா ஒத்து ஓடவேண்டும். இந்தியாவை இணங்க வைத்தல் என்பது அமெரிக்காவுக்கு அவசியமானது. அதனை மிரட்டியும் அதாவது பாகிஸ்தான் பக்கம் சேர்ந்தும் செயல்பட்டு வழிக்கு கொண்டுவரலாம். அல்லது இந்தியாவை திருப்திப்படுத்தியும் வழிக்கு கொண்டுவரலாம். இது வல்லரசுகளின் உத்தியாக அமைந்திருக்கும்.

எனவே பொதுஜன பெரமுனவுடன் ஒரு பேரம்பேசலை ஏற்படுத்தும் விதத்தில் அமெரிக்கா செயல்பட்டது எனக் கருதுவது பொருத்தமானதாக அமையும். அதே நேரம் இரு வேட்பாளர்களும் தங்கள் நிலையில் இருந்து இலங்கையின் இறைமை பற்றிய உரையாடலை தேர்தல் கோசமாக வெளிப்படுத்த திட்டமிட்டுவருகின்றனர். அது எந்தளவுக்கு சரியானதாக அமையும் என்பது கேள்விக்குரியதாகும். ஏனெனில் அமெரிக்கா சீனா மற்றும் இந்தியாவின் செல்வாக்கு இலங்கைப்பரப்பில் ஆழமாக வேரூன்றியுள்ளது. 2015 ஆண்டுத் தேர்தலையும், ஆட்சியையும் தீர்மானித்த சக்திகள் அமெரிக்க இந்தியத் தரப்பு என்ப நன்கு தெரிந்த விடயம். அவ்வாறே இன்றைய சூழலும் காணப்படுகிறது. இலங்கை மட்டுமல்ல உலக நாடுகளே இறைமையற்று நிதி நிறுவனங்களிடமும் சந்தையிடமும் தேசத்தை அடமானம் வைத்துள்ளன. அத்தகைய நிலைக்குள்ளேயே இலங்கையின் இருப்பு இறைமையற்ற தன்மைக்குள் அகப்பட்டிருகிறது.

எந்த வேட்பாளரும் அமெரிக்கா சீனா இந்தியா என்கின்ற அரசுகளின் நலனுக்கு உட்பட்டே இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. எதிர்கால ஜனாதிபதியும் ஏதே ஒரு அரசின் கட்டுபபாட்டுக்குள் அகப்பட்டே இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



அதற்கான முனைப்பே தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய உதவிச் செயலாளரது விஜயமாகும். ஐ.தே.க வேட்பாளருக்கு இத்தகைய எந்த நெருக்கடியும் கொடுக்க வேண்டிய தேவையில்லை என்பது அமெரிக்காவுக்கும் அது சார்ந்த நாடுகளுக்கும் நன்கு தெரியும். காரணம் அவர்கள் மேற்கின் பிரதிநிதிகளே. ஆனதால் ராஜபக்ஷாக்கள் மட்டுமே சீனசார்பு நிலைக்குள்ளால் தம்மை அடையாளப்படுத்தியவர்கள் என்பதே அவர்கள் மீதான அதிக கரிசனையாகும்.




# ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தின் சுயநிர்ணய உரிமை பறிக்கப்பட்டமை இந்தியாவின் உள் விவகாரமா?

## மோடியைப் பாராட்டும் ரணிலும், பௌத்த பீடங்களும்

நரேந்திரமோடி அரசின் இந்தச் செயற்பாடுகளைச் சிங்கள ஆட்சியாளர்கள் பாராட்டியுள்ளனர். ஆனால் தாம் விரும்பியவாறு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை அரசை முக்கியத்துவம் உள்ளதாக மாற்ற முற்படும் சிங்கள ஆட்சியாளர்களின் முயற்சிக்கு இந்தியா இடமளிக்குமா? என்பது கேள்விதான்

ஜம்மு, காஷ்மீர் மாநிலம் இரண்டு நிர்வாக அலகுகளாகப் (Union) பிரிக்கப்பட்டு இந்திய மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளதை இலங்கையில் சிங்கள ஆட்சியாளர்களும் கண்டியை மையப்படுத்திய பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களும் வரவேற்றுள்ளனர். ஏனெனில் ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டே ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கான சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருந்தது. 1947 ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமர் நேருவினால் பரிந்துரைக்கப்பட்டு, இந்திய நாடாளுமன்றத்தில் சட்டமாக அங்கீகரிக்கப்பட்டு, 1954 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. இந்த நிலையில் நரேந்திரமோடி அரசு தன்னிச்சையாகப் பிரித்துள்ளமை ஈழத் தமிழர்களின் சுயமரியாதைக்கு விழுந்த மற்றுமொரு அடியாகவும் சிங்களத் தேசம் கருதுகின்றது.

ஜம்மு காஷ்மீர் (Jammu kashmir) மாநிலம் ஜம்மு என்றும் காஷ்மீர் எனவும் இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பௌத்த சமயத்தைப் பின்பற்றும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் லடாக் (Ladakh) பிராந்தியம், அதிகாரங்கள் இல்லாவிட்டாலும் இந்திய மத்திய அரசின் கட்டுப்பாட்டில் செயற்படுவதை மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவ சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பாராட்டியுள்ளார்.

நரேந்திர மோடி அரசின் இந்த முடிவைப் பாராட்டியுள்ள அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்தன தேரர், லடாக் பிரதேசம் விரைவில் தனி மாநிலமாக அறிவிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் லடாக் தனி நிர்வாக அலகாகப் பிரிக்கப்பட்டதை தனது ருவீற்றர் தளத்தில் பாராட்டியுள்ளார். எழுபது சதவீதம் பௌத்த மக்கள் வாழும் லடாக் பிரதேசம் என்றும் கூறியுள்ள ரணில் விக்கிரமசிங்க ஜம்மு காஷ்மீர் இரண்டு தனி நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டமை இந்தியாவின் உள் விவகாரம் என்றும் கூறுகின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்துடன் ஜம்மு காஷ்மீர் பிரதேசத்திற்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் நரேந்திர மோடி அரசு அந்த சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் 35 ஏ பிரிவு அதிகாரத்தை இந்திய அரசியலமைப்பின் 370 சரத்தைப் பயன்படுத்தி எப்படி ரத்துச் செய்ய முடியுமெனக் கேள்விகள் எழுந்துள்ளன. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க ஜம்மு காஷ்மீர் பிரிக்கப்பட்டதை எந்த அடிப்படையில் இந்தியாவின் உள்விவகாரம் எனக் கூற முடியுமென்ற கேள்விகளும் எழாமல் இல்லை.


ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நிரந்தரமாக வாழும் மக்களுக்கு வேலை மற்றும் சொத்துக்கள் வாங்குவதில் இந்திய அரசியலமைப்பின் 35ஏ சட்டவிதி சகல விதமான உரிமைகளையும் வழங்குகின்றது. இந்தச் சலுகைகளை காஷ்மீர் மக்கள் மாத்திரமே அனுபவிக்க முடியும். வெளி மாநிலத்தவர்கள் எவருக்குமே அங்கு உரிமை கிடையாது. இந்திய நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்களை மறுக்கும் உரிமை காஷ்மீர் சட்ட மன்றத்திற்கு இருந்தது. இப்படியான சலுகைகளை அரசியலமைப்பின் பிரிவு 35ஏ வழங்கியிருந்தது.

இந்த உரிமை 1947ஆம் ஆண்டு காஷ்மீர் மாநிலம் இந்தியாவுடன் இணைந்த பிறகு வழங்கப்பட்டது. ஆனால் வி த சிட்டிசென்ஸ் (We the Citizens) என்ற புதுடில்லியில் செயற்படும் இந்துத்துவா அமைப்பின் செல்வாக்குப் பெற்ற அரசசார்பற்ற நிறுவனம் 35ஏ என்ற பிரிவை ரத்துச் செய்ய வேண்டுமென வலியுறுத்தி 2014 இல் புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது.

2004 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அமெரிக்காவின் கூட்டாளியாக (Ally) அமெரிக்கக் காங்கிரஸில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் பின்னாளில் பாக்கிஸ்தான் சீனாவுடன் மேற்கொண்ட நெருக்கமான உறவுகளினால் தற்போது கூட்டாளி என்ற அந்ததஸ்த்தை அமெரிக்கா நிராகரிக்கவுள்ளது. இந்த நிலையில் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் இந்திய அரசை முக்கியப்படுத்தி இந்தியாவைக் கூட்டாளியாக்க அமெரிக்க ட்ரம் நிர்வாகம் எடுக்கும் முயற்சி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இதன் பின்னணியிலும் காஷ்மீர் பிரிக்கப்பட்டிருக்கலாம்

இந்த அரசசார்பற்ற நிறுவனம் இந்துத்துவா அமைப்புக்கு மாத்திரமல்ல சோனியா காந்தியை மையப்படுத்திய காங்கிரஸ் மற்றும் வலது சாரி அமைப்புகளின் ஆதரவையும் பெற்றிருந்தது. மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சியையும் இந்த நிறுவனம் வெளிப்படையாகவே ஆதரித்திருந்தது.

இதன் பின்னணியிலேதான் 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் நரேந்திரமோடி தலைமையிலான பாரதீய ஜனதாக்



கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரித்து இந்திய மத்திய அரசின் ஆளுகைக்குள் கொண்டு வருவோமெனக் கூறியிருந்தது. இதனடிப்படையில் நரேந்திரமோடி அரசாங்கம் தனது இரண்டாவது பதவிக் காலத்தில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரண்டாக உடைத்துள்ளது. 1947 ஆம் ஆண்டிலேயே நேரு 35 V பிரிவை பரிந்துரைத்திருந்தார். இந்திய நாடாளுமன்றத்திலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் 1954 ஆம் ஆண்டுதான் 35 V பிரிவு அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வந்தது. தனிநாடு கோரி காஷ்மீரில் இடம்பெற்ற கலவரங்களைக் கட்டுப்படுத்தவே நேரு அன்று சுயநிர்ணய உரிமையை வழங்கும் முடிவுக்கு வந்திருந்தார். ஆனாலும் பின்னாளில் இந்திய ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்த ராஜேந்திர பிரசாத். இந்திய அரசியலமைப்பில் இருந்த 370 சரத்தைப் பயன்படுத்தி ஒரு மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்த்தை வழங்கவோ மறுக்கவோ இந்திய மத்திய அரசுக்கு அதிகாரமுள்ளது என்ற புதிய விதி ஒன்றைப் பரிந்துரைத்திருந்தார்.

ஆனால் 370 பிரிவில் திருத்தம் செய்ய வேண்டுமானால் இந்திய நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஜம்மு காஷ்மீர் மாநில அரசின் ஒப்புதலும் பெறப்பட வேண்டும். எனினும் வாக்கெடுப்பு எதுவுமேயின்றி இராஜேந்திரப் பிரசாத் திருத்தத்தை முன்மொழிந்து 370 பிரிவில் இணைத்துக் கொண்டார். இவ்வாறு இணைக்கப்பட்டமை இந்திய அரசியலமைப்புக்கு முரணானது என அப்போது வாதிடப்பட்டிருந்தது. எனவே இராஜேந்திரப் பிரசாத் 370 பிரிவில் மேற்கொண்ட திருத்தங்களைப் பயன்படுத்தியே நரேந்திரமோடி அரசு ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரித்துள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர்.

அதுவும் மக்களால் தெரிவு செய்யப்படாத மாநில அரசு ஒன்று ஜம்மு காஷ்மீரில் இல்லாத நிலையில் அந்த மாநில அரசின் இணக்கம் எதுவுமேயின்றி ஆளுநரின் வேண்டுகோளுக்கு அமைவாகவே ஜம்மு காஷ்மீர் இரண்டு நிர்வாக அலகுகளாக நரேந்திரமோடி அரசினால் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்தியா பெரியவொரு ஜனநாயக நாடு என்று பொதுவாகக் கூறப்படுவது வழமை. ஆனால் ஜம்மு காஷ்மீர் பிரிக்கப்பட்டமை ஜனநாயகத்திற்கு முரணான செயல் என்றே புதுடில்லியில் உள்ள உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

நரேந்திரமோடி அரசின் இந்தச் செயற்பாடுகளை சிங்கள ஆட்சியாளர்கள் பாராட்டியுள்ளனர். ஆனால் தாம் விரும்பியவாறு இந்து சமூத்திரப் பிரந்தியத்தில் இலங்கை அரசை முக்கியத்துவம் உள்ளதாக மாற்ற முற்படும் சிங்கள ஆட்சியாளர்களின் முயற்சிக்கு இந்தியா இடமளிக்குமா என்பது கேள்விதான்

ஜம்மு காஷ்மீர் இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்படுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு ஒன்று நரேந்திரமோடியின் முஸ்லிம் எதிர்ப்புணர்வு. இரண்டாவது இந்தோ- பசுபிக் பிராந்தியத்தை மையப்படுத்திய பூகோள அரசியல் தேவைப்பாடுகள். இங்கே காங்கிரஸ் அரசாங்கம் பதவியில் இருந்திருந்தாலும் தமது பூகோள அரசியல் நலன்சார்ந்து ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஆனால் முஸ்லிம் எதிர்ப்புணர்வு இருந்திருந்திருக்காது. அதற்கு வேறு அணுகுமுறை கையாளப்பட்டிருக்கும்.

பயங்கரவாதத்தை முறியடிப்பதற்காகவே ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரித்ததாக நரேந்திரமோடி அரசு தற்போது கூறுகின்றது. ஆனால் பிரிக்கப்பட்ட லடாக் திபெத் பிரதேசத்திற்கு அருகில் உள்ளது. இதனால் சீன அரசு கடும் கோபமடைந்துள்ளது. லடாக் பிரதேசம் இந்திய மத்திய அரசின் ஆளுகைக்குள் சென்றதை சீனா விரும்பவில்லை. அத்துடன் காஷ்மீர் பிரிக்கப்பட்டதால் பாகிஸ்தான் அரசும் ஆத்திமடைந்துள்ளது.

ஆகவே தற்போது சீனா- பாகிஸ்தான் உறவுகள் வலுவடைந்துள்ள நிலையில், ஜம்மு காஷ்மீர் மாநிலம் இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டதால் மேலும் மோதல்கள் ஏற்படக் கூடிய ஏது நிலை உருவாகலாமென அவதானிகள் கூறுகின்றனர். ஜம்மு காஷ்மீருக்கு வெளியே ஏனைய மாநிலங்களிலும் தீவிரவாதத் தன்மைகள் ஏற்படலாம் என்றும் அது இந்திய மத்திய அரசுக்கு மேலும் தலையிடியைக் கொடுக்குமெனவும் அவதானிகள் கருதுகின்றனர்.

2004 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அமெரிக்காவின் கூட்டாளியாக (Ally) அமெரிக்கக் காங்கிரஸில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் பின்னர் பாக்கிஸ்தான் சீனாவுடன் மேற்கொண்ட நெருக்கமான உறவுகளினால் தற்போது கூட்டாளி என்ற அந்தஸ்த்தை அமெரிக்க நிராகரிக்கவுள்ளது.

இந்த நிலையில் இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் இந்திய அரசை முக்கியப்படுத்தி இந்தியாவைக் கூட்டாளி ஆக்க அமெரிக்கா ட்ரம் நிர்வாகம் எடுக்கும் முயற்சி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதன் ஒரு கட்டமாகவே அமெரிக்கா. இந்தியா. அவுஸ்திரேலியா, ஜப்பான் என்ற நான்கு நாடுகள் கூட்டாக இணைந்து புதிய இராணுவ அணி ஒன்றை இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் உருவாக்கியிருந்தன.

இதன் தலைமைத்துவப் பொறுப்பு இந்தியாவிடமே கையளிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியிலேதான் ஜம்மு காஷ்மீர் மாநிலம் பிரிக்கப்பட்டுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் நரேந்திரமோடி அரசின் இந்தச் செயற்பாடுகளை சிங்கள ஆட்சியாளர்கள் பாராட்டியுள்ளனர். ஆனால் தாம் விரும்பியவாறு இந்து சமுத்திரப் பிரந்தியத்தில் இலங்கை அரசை முக்கியத்துவம் உள்ளதாக மாற்றும் சிங்கள ஆட்சியாளர்களின் முயற்சிக்கு இந்தியா இடமளிக்குமா என்பது கேள்விதான்.

நன்றி : கூர்மை

# வஞ்சிக்கப்படும் காஷ்மீர் மக்கள்

மாசிலான்

காஷ்மீர் இன்று ஒரு அவல நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. ஆங்கிலேயர்.1947 இல் இந்தியப் பெரு நிலப்பரப்புக்கு விடுதலை கொடுத்து விட்டுச் சென்ற பொழுது பாகிஸ்தான் ஒரு தனி நாடாகவும் இந்தியா தனி ஒரு நாடாகவும் காஷ்மீர் தனி நாடாகவும் இருந்தன. காஷ்மீர் இந்தியாவின் உச்சியில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் நடுவில் கேந்திர முக்கியத்துவம் மிகுந்த நாடாக அமைந்திருந்தது . இதனால் இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீரைத் தமதாக்கிக் கொள்ள முயன்றன.

**காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த வரலாறு**


காஷ்மீர் இசுலாமியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடாகும். ஆனால் அந்த நாட்டின் மன்னர் அரிசிங் ஓர் இந்துவாகும். பாகிஸ்தான் தனது ஒரு பகுதி மக்களான பாக்டூன்களை ஏவி காஷ்மீர் மீது போர் தொடுக்க வைத்தது. இதனால் இந்தியாவின் நட்பை நாடினார் மன்னர். இதன் பலனாகச் சில நிபந்தனைகளுடன் இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்து கொண்டது. மன்னர் அரிசிங்கும். அப்போதைய இந்திய ஆளுநர் மவுண்ட்பேட்டனும் அவ்விணைப்பில் கையெழுத்திட்டனர். அவ்வுடன்படிக்கையில் படைத்துறை, வெளியுறவு, நாணயம், தகவல் தொடர்பு தவிர்ந்த ஏனைய யாவும் காஷ்மீருக்கே உரித்துடையன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அன்று நேருவும் வல்லபாய்ப் படேலும் இதனை ஏற்று உறுதி அளித்தனர். ஆனால் பின்னர் அவர்களே கொஞ்சம் கொஞ்சமாக எஞ்சிய உரிமைகளையும் காஷ்மீரிடமிருந்து பறித்தனர். இந்நிலையில் தான் அரசியல் யாப்பில் உறுப்பு 370 ஆம் உட்பிரிவு 35 A யும் இந்திய அரசால் உருவாக்கப்பட்டது. இந்த உறுப்புகள் பத்து ஆண்டுகளுக்கே பொருந்தும் என்றும் அதற்குள் காஷ்மீரின் வளர்ச்சிக்கு முடிந்தளவு உதவி செய்வது என்றும் பொருளியல் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுப்பதென்றும் அதன் பின்னர் மக்களின் கருத்தறிய பொது வாக்கெடுப்பு நடாத்தி அதன் படி மேல் நடவடிக்கை தொடருவதென்றும் முடிவாகியது. ஆனால் நேரு தான் கொடுத்த வாக்குறுதியில் பற்றி நிற்காமல் வாக்கெடுப்பும் நடத்தாமல் காலத்தை இழுத்துக்கொண்டே போனார். இதற்கிடையில் தொடக்கத்திலேயே பாகிஸ்தான் காஷ்மீரைத் தனதாக்கிகொள்ளப் போரில் இறங்கியது. ஆனால் அதனால் காஷ்மீரின் சிறு பகுதியையே கைப்பற்ற முடிந்தது. அப்பகுதிக்கு அசாத் காஷ்மீர் என்று பெயர் சூட்டியது அசாத் என்றால் விடுதலை அடைந்த என்று பொருள் அதன்படி தான் ஆக்கிரமித்த பகுதியை விடுதலை பெற்ற காஷ்மீர் என்று கூறியது. பாகிஸ்தான் காஷ்மீரத்தின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த காஷ்மீர் சிங்கம் என்று அழைக்கப்பட்ட ஷேக் அப்துல்லாவைச் சிறைப்பிடித்த நேரு அவரைத் தமிழ் நாட்டின் கொடைக்கானலுக்குக் கொண்டுவந்து பலஆண்டுகள் சிறையில் அடைத்தார்

**மாநிலத் தகுதி பறிக்கப்பட்டு யூனியன் பிரதேசமான வரலாறு**

இவ்வாறு காஷ்மீர் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட முன்னூற்று எழுபதாவது உறுப்பை நீக்கும் சட்டவரைவை மோடியின் பாசக அரசு 2019.05.08ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் உடனடியாகவே பெற்று நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

ஒரு சுதந்திர நாடு இந்தியாவின் வாக்குறுதிகளை நம்பி அதனுடன் இணைத்து சில சிறப்பு தகுதியைப் பெற்று இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாக இருந்த நாடு அதிகாரங்கள் அற்ற இரு யூனியன் துண்டுகளாகத் துண்டாடப்பட்ட வேதனையான நிகழ்வு இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அம்மக்களின் கருத்துத் தான் என்ன என்று சிறிது கூடக் கேட்காமல் அம்மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கலைக்கப்பட்ட நிலையில் ஆளுநர் ஆட்சியை நடாத்திக்கொண்டு இது நடந்தேறியது. இந்தத் திருத்தங்கள் ஜனநாயகப் படுகொலை மட்டுமல்ல, இன அடையாள அழிப்புப் பாசிச நடவடிக்கையுமாகும் எனப் பல மனித உரிமை அமைப்புகளும் தனி மனிதர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். புதுச்சேரியும் யூனியன் பிரதேசம் டெல்கியும் யூனியன் பிரதேசம் இதில் புதுச்சேரிக்குள்ள அதிகாரங்கள் டெல்கிக்கு கிடையாது. மைய ஆட்சியிடமே டெல்கி யூனியன் பிரதேசத்தின் அதிகாரம் குவிந்து கிடக்கும். புதுச்சேரியே தனக்கு மாநிலத் தகுதி வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றி வரும் நிலையில் சுதந்திர நாடாக இருந்து நம்பிக்கையோடு இந்தியாவுடன் இணைந்த நாட்டின் இன்றைய அவலம் எத்தகையது என்பதை சொல்ல வார்த்தைகளே இல்லை எனலாம். மாநிலத் தகுதியும் பறிக்கப்பட்டு இரண்டு துண்டுகளாகி அவை அதிகாரங்கள் குறைந்த அளவே கொண்ட யூனியன் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இசுலாமியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஜம்மு காஷ்மீர் ஒரு யூனியன் பிரதேசம் லடாக் பகுதி இன்னொரு யூனியன் பிரதேசமாகும். இந்த லடாக் பகுதி திபெத்திய பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கண்ட பகுதியாகும்.

இதே லடாக் பகுதியில் இலங்கையின் பரப்பளவு கொண்ட பிரதேசம் 1962 இல் இடம்பெற்ற இந்திய சீனப்



போரின்போது சீனாவால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு இன்றுவரை சீனாவின் கட்டுப்பாடிலேயே உள்ளது. பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் இடையே பாரிய செலவில் பெரிய சாலை அமைத்து வீதித் தொடர்பு இதனூடாகவே நடைபெற்று வருகிறது. இந்தியா பாகிஸ்தான் பிடித்து வைத்துள்ள அசாத் காஷ்மீரையோ சீனா வைத்துள்ள லடாக் பிரதேசத்தையோ என்ன செய்யப்போகிறது. என்று இதுவரை எதுவும் கூறவில்லை. என்பதுதான் உண்மை. காஷ்மீரின் அப்பகுதியைப் பிடிப்பதானால் அவ்விரு நாடுகளுடனும் போர் புரிய வேண்டும். அது நடைபெறப் போவதில்லை. இந்தியாவின் அருகில் பாகிஸ்தான் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், சீனா போன்ற நாடுகள் உள்ளன. இவை இந்தியாவின் நடவடிக்கைக்குக் கண்டனம் கொடுத்துள்ளன. பாகிஸ்தான் ஐ.நாவுக்கு எடுத்துச் செல்லும் நிலையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. முதலில் இந்திய உள் விவகாரம் என்று சொன்ன அமெரிக்கா இப்பொழுது இது பாகிஸ்தானும் சம்பந்தப்பட்டது என்று கூறி வருகிறது. எனவே தனது உள்ளூர் நெருக்கடிகளில் இருந்து திசைதிருப்பவும் இசுலாமியர்களுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எடுத்த நடவடிக்கை உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது என்பதே உண்மையாகும்.

நம்பிகையுடன் இணைந்த நாட்டுக்கு இவ்வாறு ஒரு அவல நிலையை மோடி அரசு ஏற்பத்தியுள்ள போதும் இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல்கொடுப்பதாகக் கூறும் கட்சிகள் எவையும் இந்த ஜனநாயகப் படுகொலை பற்றி வாயே திறக்காமல் உள்ளன. ஏன் மௌனம் என்பது தான் வினாவாக இங்கு எழுந்துள்ளது. பிரதமரும் சிங்கள அமைப்புகளும் ஒரு நாட்டின் மாநிலத் தகுதி பறிக்கப்பட்டு விட்டதே அதிகாரங்களற்ற யூனியன் பிரதேசங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவே என்று கவலைப்படாது பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட யூனியன் பிரதேசம் ஒன்று மலர்ந்து விட்டதாக மகிழ்கின்றனர். பௌத்தம் என்றால் சிங்கள நாடு என்றா மகிழ்கிறார்கள் அவர்கள். மாநில உரிமைகளை பெற்றிருந்த மக்களின் உரிமைகளை இழந்து விட்டனரே என்று துளிகூடக் கவலைப்படவில்லை அவர்கள்.

இவ்வாறு அவர்கள் மகிழ்வதற்குக் காரணம். இதேபோன்று தானே அரசியல் திருத்தப் பிரிவு பதின்மூன்றின் மூலம் இடைக்கால ஏற்பாடாகக் கொடுத்த வடக்குக் கிழக்கையும் பிரித்தவர்கள் அவர்கள். அதேபோன்று தான் சமஷ்டி கேட்டுப் பின்னர் தனி நாட்டுக்காகப் போராடிய மக்களுக்கு யூனியன் தகுதியுள்ள அதுவும் புதுச்சேரி யுனியன் பிரதேசத்திலும் குறைந்த அதிகாரம் கொண்ட மாகாண சபையைக் கொடுத்தவர்கள் என்பதனாலேயே மகிழ்கிறார்கள். பதின்மூன்றையும் மாகாண சபைகளையும் ஏற்றுக்கொண்ட தமிழ்க் கட்சிகள் இன்னமும் இந்தியாதான் எமக்கு உதவும் என்று மக்களை ஏமாற்றிக்கொண்டு இருப்பவர்கள் எவ்வாறு இந்த ஜனநாயகப் படுகொலையையும் இன அடையாளத்தை அழிக்கும் செயலைக் கண்டிப்பார்கள். இப்பொழுது இதர மாநில மக்கள் காஷ்மீருக்குச் சென்று குடியேறலாம் என்று மோடி அரசு கூறுகிறது. இதன் உள்நோக்கம் என்னவென்றால் மக்கள் அங்கு செல்வதல்லக் குறிக்கோள் பெரிய வணிக முதலாளிகள் அங்கு சென்று அழகு கொழிக்கும் இயற்கை வளங்களை அழித்து முதலாளித்துவ நிறுவனங்கள் இலாபம் ஈட்டுவதற்கான கதவுகளே திறந்து விடப்பட்டுள்ளன. அங்கு ஒரு மாநில அரசு இருந்தால் அது அம்முயற்சிகளைத் தடை செய்யும் இவற்றை சுமுகமாகச் செயல்பட வைக்க வேண்டும் என்றால் ஒரு யூனியன் தகுதி உள்ள அமைப்பே போதுமானது என்ற பாரிய உள்நோக்கத்துடனேயே சிறப்புத்தகுதி நீக்கம் செய்துள்ளது மோடி அரசு. இதைத் தான் இங்கும் அதிகாரங்கள் இல்லாத மாகாண சபைகளினூடாக ஆட்சியாளர் செய்கிறார்கள் தமிழர் நிலம் பறிபோகிறது புத்தர் எங்கும் வந்து கொண்டிருக்கிறார் எனவே சிங்களத் தரப்பினர் காஷ்மீரப் பிரிப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். ஆனால் தமிழர் தரப்போ மௌனமாக இருக்கிறார்கள். மோடிக்குப் பிடிக்காத எதனையும் அவர்களால் கூற முடியாது .

**மனித உரிமைகள் பறிக்கப்பட்ட அவலத்தில் மக்கள்**

காஷ்மீர் மக்களுக்குத் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் காப்பாற்றப்படாத சூழ்நிலையில் அங்கு சுயாட்சிக் கோரிக்கை எழுந்தது. இது இயல்பானதே. இதே நேரம் பாகிஸ்தானும் காஷ்மீரைத் தனதாக்கிக்கொள்ள மூன்று முறை பெரும் போரை நடத்தியிருந்தது. அதனை விடவும் சிறு சிறு படைநடவடிக்கைகளும் மேற்கொண்டு தோல்வியடைந்தது. இதனால் ஏராளமான இராணுவத்தினர் இந்தியாவால் அங்கு குவிக்கப்பட்டனர். மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன அரசியல் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். குறிப்பாகக் காஷ்மீர் பெண்களை மிகவும் கொடூரமான முறையில் இராணுவம் நடத்தியது... அங்கு பெண்களுக்கு நேர்ந்த அவல நிலையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அதேபோல் இளைஞர்களும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அங்குமொத்தமாக மனித உரிமைகள் முற்றிலும் பறிக்கப்பட்ட மக்களாகவே அவர்கள் வாழ்ந்தனர். இப்பொழுது மேலும் இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். அம்மக்களின் கட்சித் தலைவர்கள் எங்கே என்று எதுவும் தெரியாத நிலை. அங்கு செல்ல இந்திய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த எவருக்கும் அனுமதி கிடையாது. காங்கிரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான குலாம் நபி ஆசாத் அங்கு இறங்க முடியாமல் திருப்பி அனுப்பப்பட்டார். இடதுசாரித் தலைவர்களான சீத்தாராம் யசூரி, டி ராஜா குழுவினரும் அங்கு சென்றதும் உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட்டனர். மக்களைச் சென்று பார்க்க மோடி அரசு, ஏன் அவர்களை தடுக்கிறது என்ற வினாவிற்கு விடையே கிடையாது. இராணுவத்தால் அம்மக்கள் படும் பேரவலத்தை வெளியே தெரியாமல் தடுத்து நிற்கும் இரும்புத் திரை அகன்று விடும் என்பதால் அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் கூட வழங்காது மோடி அரசு நடந்து கொள்கிறது.


**இதர மாநிலங்களுக்கும் ஏற்படப்போகும் ஆபத்து**

ஏதோ முந்நூற்று எழுபது நீக்கம் முப்பைந்து நீக்கம் தானே இதனை ஏன் பெரிது படுத்த வேண்டும் என்று சிலர் கேட்ககலாம். மாநிலங்களின் உரிமைகளைப் படிப்படியாகப் பறித்து வரும் மைய அரசுகள் நம்பி இணைந்த மக்களுக்கே இந்த நிலையை ஏற்படுத்தியவர்கள் இதர மாநிலங்களையும் துண்டாடி மக்களைப் பலவீனப்படுத்த முயல்வார்கள். குறிப்பாக தமிழ்நாட்டை இரண்டாகவோ மூன்றாகவோ பிரித்து விட்டால் மக்கள் தங்களின் மாநிலங்களைப் பற்றித்தான் சிந்திப்பார்கள். பொது விடயங்களை மறந்து விடுவார்கள் பலமற்றுப் போய்விடுவார்கள். அப்படியான சூழ்நிலையை ஏற்படுத்தி தமிழ் நாட்டையே பாலைவனமாக்கும் நாசகாரத் திட்டங்களையும் இந்தி சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் இந்துத்துவத்தையும் திணிக்க இலகுவான பாதைகள் ஏற்பட்டு விடும் என்று மோடி அரசு திட்டங்கள் போடுவது தவிர்க்க முடியாததாகும்..

காஷ்மீரில் நடந்த நம்பிக்கை மோசடி என்பது இன அடையாள அழிப்பும் ஜனநாயகப் படுகொலையுமாகும்.

# இந்தச் சைக்கிள் எப்போது ஓடும்?

பகலவன்








தமிழ் மக்களை முட்டாளாக்கும் முயற்சி குறித்து 'அனுபவசாலி'யான செ.கஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார். 40 ஆயிரம் படையினரை சவப்பெட்டியில் அனுப்புவோம் என்ற புகழ்பெற்ற பாராளுமன்ற உரையை இவர் மறந்தாலும் தமிழ் மக்கள் மறக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான அதிருப்தியில்தான் மாற்றுத் தலைமை குறித்து மக்கள் சற்றே சிந்திக்கத் தொடங்கினர். எனினும் தற்போது நாளாந்தம் இந்தக் கட்சியினர் வெளியிட்டு வரும் கருத்துகள் இவர்களை ஏமாளிகளாகவே வெளிப்படுத்துகின்றன. இவர்கள் ஏமாளிகள் ஆனது இப்போது தான் என்றில்லை. 1960 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபோதே இவர்களை ஏமாளியாக்கினார் ஒருவர். அவர் பெயர் அல்பிரட் தங்கராசா துரையப்பா.

தமிழரசுக்கட்சி என்பது தமிழ்க்காங்கிரசில் இருந்து பிரிந்துதான் உருவானது. ஆனாலும் உடனடியாக தேர்தல் திணைக்களத்தில் கட்சியின் பெயருடன் அதன் சின்னம் வீடு என்றும் பதிவு செய்திருந்தனர். காங்கிரஸ் கட்சி பெயரைப் பதிவு செய்ததே தவிர சின்னத்தைப் பதிவு செய்ய நினைக்கவில்லை. தாங்கள் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டால் அது தமக்கே சொந்தம் என்ற மிதப்பில் இருந்தனர். இந்தப் பலவீனத்தை துரையப்பா நன்கே அறிந்திருந்தார். இத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் அவர் சுயேட்சையாகப் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்தார். உங்களுக்கு என்ன சின்னம் வேண்டும் என தேர்தல் அதிகாரி கேட்டார் சைக்கிள் எனப் பதிலளித்தார் துரையப்பா, பின்னர் காங்கிரஸின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் வந்தார். அவரிடமும் இதே கேள்வி. சைக்கிள் தான் எனப் பதிலளித்தார் அவர். அந்தச் சின்னம் ஏற்கனவே துரையப்பாவுக்கு வழங்கியாயிற்று எனக்குறிப்பிட்டார் தேர்தல் அதிகாரி. அதெப்படி வழக்கமாக நான்தானே அதில் போட்டியிடுவேன். என்று அடம்பிடித்தார் ஜி.ஜி. அதற்கு அந்த அதிகாரி தமிழரசுக்கட்சி தமது பெயருடன் வீட்டுச்சின்னத்தையும் பதிவுசெய்துள்ளது. நீங்கள் கட்சிக்கு சின்னத்தைப் பதிவு செய்யவில்லை எனப் புகழ்பெற்ற ராணிஅப்புக்காத்துவுக்கு விளக்கினார். இந்நிலையில் தனக்கு சைக்கிள் சின்னம் தான் வேண்டும் என துரையப்பா உறுதியாக நின்றார். பொன்னம்பலமும் விட்டுக் கொடுக்கவில்லை. இறுதியில் பூவா தலையா எனப் போட்டுப் பார்ப்பது என முடிவாகிற்று. அதிலும் துரையப்பாவுக்கே வெற்றி. சைக்கிள் சின்னம் அவருக்கே வழங்கப்பட்டது. பொன்னம்பலத்துக்கு கணச்சின்னம் தான் கிடைத்தது.

இத்தேர்தலில் துரையப்பாவுக்கு 6313 வாக்குகள் கிடைத்தன. பொன்னம்பலத்துக்கு 6015 வாக்குகள் தான் கிடைத்தன என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவுப்புக்கு முன்னர் வாக்குகளை மீள எண்ணுமாறு பொன்னம்பலம் வேண்டினார். இரண்டாம் மூன்றாம் தடவை எண்ணப்பட்ட போது துரையப்பாவுக்கு கிடைத்த வாக்குகளில் சற்றே சரிவு ஏற்பட்டது. மூன்று தடவைகளுக்கு மேல் எண்ணமுடியாது என தேர்தல் அதிகாரி உறுதியாகச் சொன்னார். இந்த வாக்கு எண்ணிக்கை யாழ். மாநகர சபையில் இடம்பெற்றது. பொதுவாக தேர்தல் முடிவடைந்ததும் வெற்றிபெற்ற வேட்பாளருக்கு தோல்வியடைந்த வேட்பாளர் கைகுலுக்கி வாழ்த்துவது உலக அரசியல் மரபு. அதற்காக பொன்னம்பலத்தை அழைத்தபோது கதிரையைப் பின்னே தள்ளிவிட்டு "எளிய தமிழ்ச்சாதி" என்று தூற்றிவிட்டு கோபத்துடன் வெளியேறினார். ஒரே வருடத்தில் இரண்டாவது தடவையாக துரையப்பாவிடம் தோற்றவர் அல்லவா ஜி.ஜி. மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட துரையப்பா 6201 வாக்குகள் பெற்றார். சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட ஜி.ஜி க்கு 5312 வாக்குகளே கிடைத்தன. "சைக்கிளுக்குக் காத்துப் போச்சு பொன்னருக்கு மூச்சுப் போச்சு" என்று தமிழரசுக்கட்சிக்காரர் கிண்டல்பண்ணும் நிலையும் உருவாகியது.

ஒரு அநாகரிகமான அரசியலை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர் என ஜி.ஜி யை குறிப்பிடலாம். அத்துடன் தமிழரைப் பகிரங்கமாக தூற்றிய வரும் அவரே. இதில் முதலாவது விடயத்தில் ஜி.ஜி காட்டிய வழியிலேயே பின்னாளில் மகிந்தவும் நடந்து கொண்டார். ஜனாதிபதித் தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சரத்பொன்சேகாவுடன் கைகுலுக்குவதற்கு அவர் விரும்பவில்லை. தேர்தல் முடிவு அறிவிக்கும் இடத்தை நோக்கிப் பயண மான பொன்சேகாவை இடையில் மறித்து வேறிடத்துக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்தார். பின்னர் பொன்சேகா கைதுசெய்யப்பட்டதாக அறிவிப்பு வந்தது. அதற்குப் பிறகே குற்றச்சாட்டுகளைத் தேடி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பொன்சேகா சிறையில் தள்ளப்பட்டார். பீல்ட்மார்ஷல் பட்டமும் பறிமுதல் செய்யப்பட்டது.

• • •

இப்போது மக்களை முட்டாள்களாக்க நாங்கள் விரும்பவில்லை என்கிறார் செல்வராசா கஜேந்திரன். ஒரு கட்சி என்ன நோக்கத்தைக் கொண்டு ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது என்பதே முக்கியம். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவில் வடகிழக்கு வாக்களிப்பு வீதம் எவ்வளவாக இருந்தது என்பதை அறிந்தபோதே நான் எனது தோல்வியை உணர்ந்து கொண்டேன் எனக் குறிப்பிட்டார் மகிந்த. வடகிழக்கில் வாக்களிப்பு வீதம் குறைவாக இருக்க வேண்டும் என அவர் விரும்பினார் என்பதே இதன் அர்த்தம். இத்தேர்தலை புறக்கணிக்குமாறு தமிழ்த் தேசிய முன்னணி வேண்டுகோள் விடுத்தது. இதனை மக்கள் நிராகரித்தனர் என்பதே உண்மையான நிலைப்பாடு. மக்கள் குறைந்தளவில் வாக்களித்தால் அது மகிந்தவுக்குத்தான் சாதகமாகும் என்பதை விளக்க பெரிதாக அரசியல் அறிவு தேவையில்லை. இவர்கள் மகிந்தவுக்காகத்தான் தேர்தலை புறக்கணிக்குமாறு கூறுகின்றனர் என்று எவரும் குற்றஞ்சாட்டியதாகத் தெரியவில்லை. உண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கருத்துத் தொடர்பாக மக்கள் அலட்டிக் கொள்ளவில்லை. மக்களின் எண்ணவோட்டத்தை நாடிபிடித்து அறிய எந்தக் காலத்திலும் இக்கட்சி முயன்றதாகத் தெரியவில்லை. (குமார்பொன்னம்பலம் காலத்தைத் தவிர்த்து – அவர் இதய சுத்தியுடனேயே அரசியல் நடத்தினார்)

சரியோ பிழையோ ஒரு கட்சியோ இயக்கமோ தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். அரசியல் அமைப்பின் 6ஆவது திருத்தம் அரச ஊழியர்கள், மக்கள் பிரதிநிதிகள் பிரிவினைக்கு எதிராக சத்தியபிரமாணம் செய்ய வேண்டும் என்பது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அக்காலத்தில் அரசியலில் இருந்து ஒதுங்கும் (தற்காலிகமாக) நிலை இதனால் ஏற்பட்டது. புளொட், ஈ.பி.ஆர். எல்.எவ் தமிழீழ விடுதலை இராணுவம் போன்றவை இவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்யக் கூடாது என விடாப்பிடியாக நின்றன. அக்கால கட்டத்தில் யதார்த்தத்தை உணர்ந்த பிரபாகரன் இந்த விடயத்தில் அரச ஊழியர்கள் சுயமாக முடிவெடுக்கட்டும் என்று அறிவித்தார். ஏனைய இயக்கங்களின் நிலைப்பாட்டுக்கு மாறாக இருந்தது இது. இதனை அரச ஊழியர் வரவேற்றனர். தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பு என்ன நிலைப்பாடு எடுக்கிறதோ அதற்கு எதிர்மாறாக எடுக்க வேண்டும் என்றே காத்திருக்கின்றனர். சொல் புத்தியோ சுயபுத்தியோ இல்லாதவர்களிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

கன்னியா பிள்ளையார் கோயில் விடயத்தையும் சுட்டிக்காட்டலாம். கூட்டமைப்புக்கு சாதகமாகப் போய்விடும் என்று நினைத்தே அந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட கோவைகளை வைத்துக் கொண்டு முழுசிக் கொண்டு நின்றனர் இக்கட்சியினர். கடைசியில் இவர்களின் வண்டவாளம் வெளியாயிற்று. இவர்களது செயலற்ற தன்மையைக் கண்ட அக்காணி உரிமையாளரான பெண்மணி எப்படியோ இடைக்காலத் தடை பெற்றுவிட்டார். இதற்காக அந்தப் பெண்மணியைத் திட்டித்தீர்த்தனர் எனவும் செய்திகள் வெளியாகின. மொத்தத்தில் சவப்பெட்டிக்காரர்களின் நிலைப்பாடே இவர்களுக்கு. பிச்சைக் காரரின் புண்போல பிரச்சினைகளை நோண்டிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோள்.


மாவீரர்நாள் போன்றவற்றில் இவர்கள் செய்த குழப்படிகள் வியாபாரங்கள் எல்லாம் சம்பந்தப்பட்ட குடும்பத்தினருக்குத் தெரியாது என்பது இவர்களது நினைப்பு. மாற்று அரசியல் என்பது கூட்டமைப்பினரையோ, தமிழ் மக்கள் கூட்டணியினரையோ, ஈ.பி.ஆர்.எல். எவ்வினரையோ திட்டிக் கொண்டிருப்பது மட்டுமல்ல என்ற யதார்த்தத்தை என்று தான் புரிந்துகொள்ளப் போகிறார்களோ? உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.ஆர். எல்.எவ்வுடன் பேச்சு நடத்தினர். பேச்சுத் தோல்வியில் முடிந்ததும் அவர்கள் துரோகிகள் கொலைகாரர்கள் என்றனர். திருக்கோயிலில், பொத்துவிலில் சுதந்திரக்கட்சி, ஐ.தே.க ஆட்சியமைக்க இவர்கள் உதவினர் என்ற உண்மை. மக்களுக்குத் தெரியாது என்ற நினைப்பில் மற்றவர்களின் சூத்தையைச் சுட்டிக்காட்டினால் போதும் என்று நினைக்கின்றனர்.

வரதராஜன் பார்த்தீபன் போன்ற ஆற்றல் உள்ள இளைய தலைமுறையினர் இவர்களின் பின்னால் இழுபட்டுப் போவது வரலாற்றின் சோகம். தமது போக்கை மாற்றி புலம்பெயர் தேசத்து ரிமோட் கொன்றோலை தூக்கியெறியாவிடில் இக்கட்சிக்கு விமோசனம் இல்லை. இப்படியே இந்தியா சர்வதேசம் என்று குற்றஞ்சாட்டும் அரசியலைத்தான் தொடர முடியும்.


# இவரா ஜனாதிபதி!?

துன்னாலை செல்வம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக, பாதுகாப்பு முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாடு, கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்றபோது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.




1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி இலங்கை இராணுவத்தில் இணைந்து, தனது இராணுவப் பயணத்தை கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பித்துள்ளார். அதனைத் தொடர்ந்து, கோட்டாபய ராஜபக்ஷ 1972ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் இரண்டாம் நிலை லெப்டினனாக பதவியுயர்த்தப்பட்டுள்ளார். இலங்கை இராணுவத்தின் ஸ்ரீலங்கா சிங்ஹ ரெஜிமென்ட், ரஜரட்ட ரயிபைல்ஸ் ஆகிய படைப்பிரிவுகளில் கடமையாற்றிய அவர், 1983ஆம் ஆண்டு இராணுவத்தின் கஜபா ரெஜிமென்ட்டில் இணைந்துள்ளார்.



தனது 20ஆண்டு கால இராணுவ வாழ்க்கையில் இலங்கை இராணுவத்திற்காக ஆற்றிய சேவைக்காக அந்த காலப் பகுதியில் ஆட்சி பீடத்தில் இருந்த மூன்று ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ மற்றும் டி.பி.விஜேதுங்க ஆகியோரிடம் விருதுகளையும் பெற்றுக் கொண்டுள்ளார். 1983ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்த காலப் பகுதியில் இலங்கை இராணுவத்தில் முன்னின்று செயற்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து, 1992ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் பல பிரிவுகளில் கட்டளைத் தளபதியாகவும் அவர் கடமையாற்றியுள்ளார். இந்த நிலையில், பாதுகாப்புத் துறையில் பல உயரிய பதவிகளை வகித்த அவர், 1992ஆம் ஆண்டு இலங்கை இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இலங்கை இராணுவத்திலிருந்து 1992ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற அந்த காலப் பகுதியிலேயே அமெரிக்காவிற்கு குடியேறி அமெரிக்க பிரஜாவுரிமையை பெற்றுக் கொண்டுள்ளார். இலங்கை மற்றும் அமெரிக்கா என்று இரட்டை பிரஜாவுரிமை பெற்றவராக இவர் திகழ்ந்தார். தனது சகோதரனான மஹிந்த ராஜபக்ஷ, 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியதன் ஊடாக, அமெரிக்க பிரஜாவுரிமையைப் பெற்ற இவர், இலங்கையை நோக்கி மீண்டும் வருகைத் தந்தார். பாதுகாப்புச் செயலாளராக நியமனம் பெற்றார். உள்நாட்டு யுத்தம் வலுப் பெற்றிருந்த நிலையிலேயே இவர் இலங்கையின் பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் காலப் பகுதியில் இவர் மீதான விடுதலைப் புலிகளின் தற்கொலை குண்டுத் தாக்குதலில் மயிரிழையில் உயிர்தப்பியிருந்தார். கொழும்பு - கொள்ளுப்பிட்டி பகுதியில் 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி இவர் பயணித்த வாகன தொடரணி மீதே விடுதலைப் புலிகள் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் இரண்டு பேர் உயிரிழந்திருந்ததுடன், 14 பேர் காயமடைந்திருந்தனர். அதனைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தை நிறைவு செய்ய இவர் பாரிய பிரயத்தனத்தை மேற்கொண்டிருந்தார். இந்த நிலையில், 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்ததாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அறிவிக்கப்பட்டது.

போரின் போது, இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களை கொலை செய்ய உத்தரவிட்டதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. மேலும் வெள்ளை வானில் பலர் கடத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவத்திற்கும், இவரிற்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. மேலும் இவருக்கு எதிராக அமெரிக்காவில் இருவேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இவருக்கு எதிராக தமிழ் இளைஞர் ஒருவரும், அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருப்பதாகவும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்திருந்தது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டமை தொடர்பில் அதனை இவரே பொறுப்பேற்க வேண்டும் என தெரிவித்து, லசந்த விக்ரமதுங்கவின் மகளான அஹிம்சா விக்ரமதுங்கவினால் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கனடா பிரஜையான ரோயி சமாதானம் 2007ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பில் பயங்கரவாத விசாரணை பிரிவினரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும், 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவர் விடுவிக்கப்பட்டதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக குற்றஞ்சுமத்தியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு வெளியிட்டிருந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அமெரிக்கா - கலிபோர்னியா நீதிமன்றத்திலேயே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மேலும், தனது தந்தையான டி.ஏ.ராஜபக்ஷவின் பெயரில் அமைக்கப்பட்ட அருங்காட்சியக நிதியில் மோசடி இடம்பெற்றதாக கூறப்படும் வழக்கொன்றும் கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

இவருக்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்குகள், அமெரிக்காவில் யஸ்மின் சூக்காவை தலைமையாகக் கொண்ட சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பின் ஏற்பாட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதில் 3 வருடமாக பாலியல் அடிமையாக வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் இளம்பெண் ஒருவரும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இவரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களால், அமெரிக்காவில் மத்திய மாவட்டத்துக்கான மாவட்ட நீதிமன்றில் 10 புதிய நட்டஈட்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பொலிஸ் மற்றும் இராணுவ முகாம்களில் தாம் அனுபவித்த பயங்கரமான மீறல்களை அவர்கள் விவரித்துள்ளனர். இந்த 10 புதிய வழக்குத் தொடுநர்களில் மூன்று பெண்களும் உள்ளடங்குகின்றனர். அத்துடன் அவர்களில் எட்டுப் பேர் தமிழர்கள். இரண்டு பேர் சிங்களவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்குகள் அமெரிக்க நீதிமன்றங்களில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட நிவாரணம் வழங்கும், சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டுக்கும் 2013 ஆம் ஆண்டுக்கும் இடையில் இடம்பெற்ற சித்திரவதைகள் பற்றிய விரிவான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது ஒரு தனியான சம்பவங்களோ, எங்காவது ஒன்றாக நிகழ்ந்தவையோ அல்ல என பாதிக்கப்பட்டவர்களின் தரப்பு சட்டத்தரணிகளில் ஒருவரான ஸ்கொட் கில்மோர் ஏபி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியாகி இருந்தன. இது தொடர்பில் தனக்கு உத்தியோகபூர்வமாக எவ்வித அழைப்பும் விடுக்கவில்லை என இவர் மறுப்பும் தெரிவித்திருக்கிறார்.

யஸ்மின் சூகா தலைமையிலான அனைத்துலக உண்மைக்கும் நீதிக்குமான திட்டம், அமெரிக்க சட்ட நிறுவனமான Hausfeld உடன் இணைந்து மற்றொரு வழக்கை இவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கிறது.

ஊடகவியலாளர் மேரி கொல்வின் படுகொலை வழக்கில் சிரிய அரசாங்கத்துக்கு எதிராக வாதாடி வெற்றி பெற்று, 300 மில்லியன் டொலர்களை அபராதமாக செலுத்த வைத்தவர் சட்டத்தரணி ஸ்கொட் கில்மர் ஏபி ஆவார்.

சித்திரவதை செய்வதற்கான உத்தரவு மற்றும் கட்டளைகள் அனைத்தும் கோத்தபாயவினால் வழங்கப்பட்டதெனவும், இந்த செயற்பாடுகளுக்கு கோத்தபாய சட்டபூர்வமாக பொறுப்புக் கொண்டவர் என சட்டத்தரணிகள் வாதாடவுள்ளனர்.

எனினும் கோத்தபாய பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டை மையமாகக் கொண்டிருந்ததாக பல ஆண்டுகளாக இவர் தனது பகிரங்க அறிக்கைகளில் தெளிவுபடுத்தியுள்ளார் என கில்மர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவங்கள் ஐ.நா. சபையினால் ஆவணப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டதுடன் இலங்கை அரசாங்கம் இந்த குற்றச்சாட்டுக்களை மீண்டும் மீண்டும் எதிர்கொண்டது. பாதுகாப்புச் செயலாளர், என்ற ரீதியில் இந்த முறைகேடுகள் நடைபெற்றதா அல்லது சரியான முறையிலேயே செயற்பட்டார்களா என நன்கு அறிந்திருந்தார், ஆனால் அவர் குற்றவாளிகளை விசாரணை செய்ய அல்லது தண்டிக்க சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இந்த நிலையில் இது தொடர்பில் வழக்கு விசாரணைகள் இடம்பெறவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

சட்டத்தரணியான ஸ்கொட் கிள்மரே பல்வேறு வழக்கினை வாதாடி வெற்றி பெற்றுள்ளார். இதன் காரணமாக கோத்தபாயவுக்கு எதிராக தீர்ப்புகள் வரலாம் என சர்வதேச ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்க சட்டவாளரான ஜோன் உலி தொலைபேசி அழைப்புக்கோ, மின்னஞ்சல் கேள்விக்கோ உடனடியாக பதிலளிக்கவில்லை.

இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்களுக்கு இலங்கையில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிட முடியாது என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் இலங்கை இரட்டை பிரஜாவுரிமை கொண்டிருந்த இவர் தனது அமெரிக்க பிரஜாவுரிமையை இரத்து செய்யும் ஆவணத்தை இந்த ஆண்டில் ஆரம்பத்தில் சமர்ப்பித்திருந்தார். இதன்படி, அமெரிக்க பிரஜாவுரிமையை ரத்துச் செய்யும் வகையில் இவரினால் விண்ணப்பிக்கப்பட்டிருந்த ஆவணத்திற்கு அமெரிக்கா கடந்த மே மாதம் 3ஆம் திகதி அனுமதி வழங்கியுள்ளதாக அமெரிக்காவிற்கான வெளிநாட்டு பிரஜாவுரிமை சேவை திணைக்களத்தின் முத்திரையுடன் அமெரிக்கா இந்த ஆவணத்தை வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் இவர் ஜனாதிபதி வேட்பாளராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் வழக்காற்றியமும் பண்பாட்டுக் கற்கையும்

## தேவைப்பாடும் முன்னெடுப்புக்களும்

**"காலனிய நவீன அறிவின் மீதான கேள்வி ஆபிரிக்க. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அறிவுஜீவிகளிடத்திலும் மக்களிடையும் உணரப்பட்டு செயல் முனைப்புப் பெறத்தொடங்கிய காலங்களில் அடையாள மீட்பு சுயத்திற்கானதேடல் என்பன தொடங்கின. இலங்கையிலும் காலனிய நீக்கத்திற்கான செயற்பாடு முனைப்புப் பெறத் தொடங்கி மக்கள் வழக்காறுகளை காலனிய நீக்கத்திற்கான கருவியாக முன்னெடுக்கும் சூழலைக் காணலாம்."**

எமது கற்றலில் நாம் எதனைக் கற்கின்றோம்? எத்தகைய கற்றல் உகந்தது. எதனைக் கற்கப்போகின்றோம் போன்ற கேள்விகள் எமது கல்விப்புலங்களில் கேட்கப்படவேண்டியவாய் உள்ளன. நாம் இதுவரை கற்ற அறிவின் விளைவு என்ன? இக்கற்றல் எத்தகைய அறிவினை நமக்கு தந்துள்ளது. நாம் அக்கல்வியின் ஊடாய் எவ்வாறாய் நம் சமூகத்தினைப் புரிந்துவைத்துள்ளோம் போன்ற விமர்சனப்பார்வை அவசியமானதாகும். இத்தகைய கேள்விகளின் தொடர்ச்சியே எமது பார்வையை விரிவுபடுத்தும்.

எமது அறிவு என்பது காலனிய நவீன அறிவின் வழி உருவாக்கப்பட்ட தொன்றாகும். படித்த எழுத்தறிவு சார்ந்தவர்கள் மட்டும் அறிவுடைய வராகவும் ஏனையவர்களும் அவர்களின் கலைப்பண்பாட்டம்சங்களும் பாமரர்களின் மூடநம்பிக்கைகளாக இன்றைய சமூகத்திற்கு தேவையற்றவைகளாக பார்க்கப்பட்ட எழுதப்பட்ட ஒரு சூழலை எமது அறிவு முறை உருவாக்கிருந்தது. பக்கட்டுக்களில் அடைக்கப்பட்டு இறக்குமதி செய்யப்படுபவை தரமானவை சுகாதாரமானவை என்றும் ஊர்களில் விளைபவை தயாரிக்கப்படுபவை வைத்தியரால் பரிசோதிக்கப்படாதவை தரமற்றவை சுகாதாரமற்றவை என்னும் முடிவிற்கு வந்து நின்றோம். இத்தகைய வாசிப்புக்களாலும் புரிதல்களாலும் உள்ளூர் அறிவுமுறை. நம்பிக்கை. வாழ்வியல் முறைகள். என்பன பயன்பாட்டிலிருந்து வழக்கொழிந்து போயின. பயன்பாட்டில் இல்லாதவை அருகிவருகின்றன என இன்னோர் விவாதம் மேற்கிளம்பியது.

இதன் அடிப்படையில் மக்கள் வழக்காறுகள் தேடப்பட்டு தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு ஆய்வுசெய்யப்பட்டன. அருங்காட்சியத்திற்குரியதாகவும் மாற்றப்பட்டன. இதன் மூலமாக இவை இன்றைய நவீன சூழலுக்குப் பொருத்தமற்றவை ஆனால் பார்வைக்கும் இரசித்தலுக்குமானவை என்னும் கருத்து படித்த மத்தியதரவர்க்கதவர்களிடையே உருவாக்கம் செய்யப்பட்டது.

ஒவ்வொரு சமூகமும் தனது இயக்கத்திற்காக பண்பாட்டு மரபுகளைப் பேணுகின்றன. புண்பாட்டு மரபின் ஊடாக அறிவுப்பரம்பல் கடத்தப்படுகின்றன. இவ்வறிவு என்பது ஒவ்வொரு சமூகமும் தங்களின் அனுபவம் மூலம் பெற்ற அறிவாக ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் மாற்றத்திற்குட்படுத்தி பரிமாறுகின்றது. இத்தகைய அறிவுப்பரம்பலை எமது காலனிய கல்வி அறிவு மூடநம்பிக்கையாக இக்காலத்திற்கு ஏற்றவை அல்லாதவையாய் பார்க்கத்தொடங்கியது. நவீன அறிவு என்பது மேற்கிலிருந்து அழகியல். அறிவு அனைத்தினையும் இறக்குமதி செய்தது. காலனியம் மக்கள் பண்பாட்டினை நாகரீகம் அடையாத பண்பாடாய் பதிவு செய்தது. நவீனம் அபவிருத்தி அடையாதமக்கள் எனப் பதிவுசெய்தது. இதன் மூலம் நவீன பண்பாடானது மனிதரை மனிதர்களிடமிருந்து சமூகத்தினரிடமிருந்து பிரித்தாளத் தொடங்கியது. அறிவு என்பது விஞ்ஞானரீதியானதாகவும் காரணகாரியத் தொடர்புடையதாகவும் மற்றயவை அறிவல்ல உண்மைத்தன்மையற்றவை என்னும் கருத்தியலை அறிவுப் பரம்பரையில் கட்டமைக்கலாயிற்று.

இதன் இன்னொருவகையாக பொருளாதாரம் என்பது இலாபமீட்டல் என்னும் அடிப்படையில் மாற்றம்பெறத்தொடங்கியது. நெசவு. மட்பாண்டம். பனையோலை. போன்ற உள்ளூர்ப் பொருளாதாரமுறை மக்களிடமிருந்து திட்டமிட்டு பறிமுதல் செய்யப்பட்டன. இதற்குப்பதிலீடாய் இறப்பர்பொருட்கள் நிரப்பப்பட்டன. இலகுவாய் கிடைக்கக்கூடியதாய் பயன்பாட்டுத்தன்மை கொண்டதாய் இறப்பர். அலுமினியப் பொருட்கள் முன்னுரிமை பெற்றன. இவை எமக்கும் சூழலுக்கும் தீங்காய் அமைந்தன.

ஒவ்வொருவரும் தன்னிலிருந்தும் தான் வாழும் சூழலிருந்தும் அன்னியமாக்கப்பட்டன. இலாபமீட்டலை அடிப்படையாகக் கொண்ட தொழில்முறையானது மனிதரை வெறும் நுகர்வோராய் மாற்றியது. ஒரு பொருள் பற்றிய தீர்மானம் அதன் பயன்படுத்தலின் தேவையை தீர்மானிப்பது என்பது பயனாளி சார்ந்தது. புயன்படுத்துவோரின் தெரிவு என்பதற்கப்பால் விளம்பரங்கள் அதனைச் செய்தன. தேவையை அடிப்படையாகக் கொண்ட பொருள் உற்பத்தி என்பது மாற்றமடைந்து உற்பத்திக்கான தேவைகள் உருவாக்கப்படடன. மனிதர் இங்கு நுகர்தல். பயன்படுத்தல் என்னும் நிலைக்குத்தள்ளப்பட்டனர்.

மட்பாண்டம். நெசவு போன்ற உள்ளூர்த் தொழில்முறைகள் தேவை நிமித்தம் உற்பத்தி செய்யப்படுபவை. இயந்திரமயமாதல். திறீந்த பொருளாதாரக் கொள்கை என்பது மனிதத் தேவை என்பது கவனிக்கபடாமல் இங்கு பாரிய உற்பத்தி. சந்தைப்படுத்தல் என்பதே அவசியமானது. மனிதர்களிடம் பரவலாக்கப்பட்ட நவீன அறிவு பொருளாதாரமுறை என்பன நமது இயற்கை சூழலிருந்து மனிதரைப்பிரித்து சுயமான வாழ்தலை இல்லாமல் செய்தது.

இத்தகைய காலனிய நவீன அறிவு மரபிற்கு மாற்றான செயற்பாடாய் எமது உள்ளூர் வாழ்தல். நடத்தை முறைகள் கவனம் செலுத்தப்படலாயின. காலனிய நீக்கத்திற்கான வழிமுறையாக உள்ளூர்ப் பண்பாடென்பது முன்வைக்கப்பட்டது. மனிதர் சமூகமாய் வாழ்வதற்கான வழிமுறையாக உள்ளூர்ப் பண்பாட்டுச் செயற்பாடுகள் காணப்படுகின்றன. சேர்ந்தியங்கல் மூலமான தங்களது அறிவினை பரிமாறும் முறையை காலனிய நீக்கத்தற்கான விடுதலைக்கருவிகளாக சமூகம் முன்வைக்கும் சூழல் உருவாகியுள்ளது.

சடங்குகள் உணவுப் பழக்கவழக்கம் கலைவடிவங்கள் வாய்மொழி மரபுகள் அனைத்து வழக்காறுகளும் தேடலுக்கும் மீள்வாசிப்புக்கும் உட்படுத்தப்படுகின்றன. கற்றல் என்பது நாம் வாழும் சூழலைப்புரிதல் நமக்கானதாகப் பயன்படுத்தல் அதன் வாயிலாக கண்டுபிடிப்புக்களைச் செய்தல் என்னும் நோக்கில் செயற்படுதல் முக்கியமானது. இதன் பின்னணியிலேயே மக்கள் வழக்காறுகள் தற்போதைய காலங்களில் கவனிக்கப்படலாயின. பல்கலைக்கழக செயற்பாடுகளில் கலாநிதி. சி.ஜெயசங்கர் முக்கிய ஆளுமையாக செயற்படுகின்றார். இவர் விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகத்தில் பணிப்பாளராய் செயற்பட்ட காலங்களில் ஒவ்வொரு துறையின் செயற்பாடுகளும் அதன் மூலம் இடம்பெற்ற மாற்றங்களும் முக்கியமானவை. பாடத்திட்டங்களில் கற்பித்தல் முறைமைகளில் இடம்பெற்ற மாற்றங்கள் என்பது மாணவர்களை மையப்படுத்திய கற்றலை அடிப்படையாக்க கொண்டதாய் காணப்பட்டது. மாணவர்களை வேலைக்காய் தயார்படுத்தல் என்பதில்லாமல் மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்தல் ஊடாக சிறந்த கலைஞராய் விமர்சகராய் எழுத்தார்களால் சுய ஆளுமை திறன் கொண்ட மனித உருவாக்கம் என்பதனை அடிப்படையாகக் கொண்டதாய் விளங்கியது.

சமூகத்தினை புரிதலும் அதன் நடத்தைகளை அவதானித்தலும் ஆய்வு செய்தலும் அவசியமானவை. என்னும் புரிதலில் இவர் விபுலாநனந்த அழகியற்கற்கைகள் நிறுவகத்தில் பணிப்பாளராய் செயற்பட்ட காலங்களில் கலைஞர்களை கௌரவித்தல் பல்கலைக்கழகத்தின் கற்றல் நடவடிக்கைகளில் இணைத்தல் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல். என்னும் அடிப்படையில் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். இதன் தொடர்ச்சியாய் மக்கள் வழக்காறும் பண்பாடும் என்னும் துறையின் தேவைசார் உரையாடல் இன்றைய சூழலில் இடம்பெற்று வருகின்றது. மக்கள் வழக்காறுகள் சார்ந்த உரையாடலும் செயற்பாடுகளும் அதனை துறையாக உருவாக்குவதின் முன்னெடுப்புக்களாக உள்ளன.

**- கி.கலைமகள்.**




### குணம்

ஜென் மாணவன் ஒருவன். தன் குருவிடம் தன்னிடமுள்ள குறை ஒன்றை முறையிட்டு தீர்வு காண முயன்றான்.

'நான் விரைவாக உணர்ச்சிவசப்படுகிறேன். அதிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை'

'உன் பிரச்சனையின் தீவிரத்தை நான் இப்போது பார்க்க விரும்புகிறேன்'

'முடியாது குருவே. நினைத்தவுடன் என்னால் காட்ட முடியாது'

'சரி. எப்போது காட்ட முடியும்'

'சொல்ல முடியாது. அது எதிர்பாராமல் நிகழ்வது'

'அப்படியானால் உனக்குள்ள பிரச்சனை இயற்கை குணத்தால் ஏற்பட்டதல்ல. பெற்றோர் மூலமாக பிறக்கும் போது உருவானதும் அல்ல. நினைத்த மாத்திரத்தில் உன் னால் அதைக் காட்டவும் முடியவில்லை. யோசித்துப் பார்'

குணங்கள் பற்றி எண்ணக்கருக்கள் மூன்று வகைப்படும். அவையாவன: கற்றலால் பெற்றுக் கொண்டவை. உணர்வுகள் மூலம் பெற்றுக் கொண்டவை. எண்ணங்கள் மூலம் பெற்றுக் கொண்டவை.

முதிர்ச்சி அடைய அடைய எண்ணங்கள் மூலம் பெற்றுக் கொண்ட குணம் வலிமை பெறும். அதனால்தான் குருவின் அறிவுரை 'யோசித்துப் பார்' என்றிருந்தது.

### பேராசை

ஒரு ஊரில் கடினமாய் உழைக்கும் ஓர் கல்லுடைக்கும் தொழிலாளி இருந்தான்.

ஒரு நாள் அவன் ஒரு பெரிய வியாபாரியின் வீட்டின் முன் சென்று கொண்டிருந்தான். வீட்டின் உள்ளே பார்த்தவன் அங்கு அந்த வியாபாரியின் வசதிகளைக் கண்டு பிரமித்தான். நானும் இவனைப்போல் ஒரு வியாபாரியாய் இருந்தால் எத்தனை பெரியவனாய் இருப்பேன் என்று நினைத்தான். உடனே அவனும் ஒரு பெரிய வியாபாரியாய் மாறிவிட்டான்.

இன்னொரு நாள் ஒரு அரசாங்க அதிகாரியைக் கண்டான். அதிகாரிக்கு பணக்காரர்கள் முதல் எல்லாரும் பயப்படுவதைக் கண்டதும். நானும் அதிகாரம் கொண்ட ஒரு அரச அதிகாரியாய் இருந்தால் அதுதான் பெரிது என்று நினைத்தான். உடனே அரசாங்க அதிகாரியாக மாறிவிட்டான்.

வெளியில் அதிகாரி நடந்து கொண்டிருக்கும் போது. சூரியனின் தகிப்பு தாங்க முடியவில்லை. ஆகவே சூரியன்தான் மிகவும் சக்தி வாய்ந்தது. நான் சூரியனாய் இருக்கக்கூடாதா என்று நினைத்தான். சூரியனாகவே மாறிவிட்டான்.

சூரியன் பூமி மேல் பிரகாசிக்க முடியாதவாறு கருமேகங்கள் சூழ்ந்ததைக் கண்டான். உடனே மேகத்தால் சூரியனை வெல்ல முடிகிறதே. நான் மேகமாக மாற வேண்டும் என்று நினைத்தான். உடனே மேகமாய் மாறிவிட்டான்.

அந்த மேகத்தை வழிநடத்தும் காற்றைக் கண்டதும். காற்றுத்தானே பலம் வாய்ந்தது. நான் காற்றாக மாற வேண்டும் என்று நினைத்தான். காற்றாக மாறினான்.

காற்று பயணிக்கும்போது எதிர்ப்படும் மலையை காற்றால் அசைக்க முடியவில்லை. மலைதான் மிகவும் பலம் வாய்ந்தது எனவே மலையாக மாற வேண்டும் என்று நினைத்தான். அதன்படியே மலையாகவும் மாறிவிட்டான்.

ஒரு நாள் கீழ்ப்பகுதியில் கொஞ்சம் உடைந்து கீழே விழுந்தது. குனிந்து என்னவென்று பார்த்தான் அங்கு ஒரு கல்லுடைக்கும் தொழிலாளி கல்லை உளியால் உடைத்துக் கொண்டிருந்தான். அதைக் கண்டதும். மலையை விடப் பலசாலி கல்லுடைக்கும் தொழிலாளிதான். எனவே நான் அவனாக மாற வேண்டும் என்று நினைத்தான். பழையபடி கல்லுடைக்கும் தொழிலாளியாகவே மாறிவிட்டான்.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.

# ஓநாய்களின் அழுகையும் முதலைகளின் கண்ணீரும்

லம்போதரன்

இலங்கையில் பயங்கரவாதம் தான் இருந்தது. விடுதலைப் போராட்டம் என்று ஒன்று இருக்கவில்லை. எனவே பயங்கரவாதத்தை அழித்துவிட்டோம். பயங்கரவாதத்திற்கு எதிராக நாம் தொடுத்த போரில் பயங்கரவாதிகளே கொல்லப்பட்டனர். பயங்கரவாதிகளே பாதிக்கப்பட்டனர். பயங்கரவாதிகளே கைது செய்யப்பட்டனர். பயங்கரவாதிகளே காணாமல் போயினர். எனவே மொத்ததில் இலங்கையில் நடைபெற்ற யுத்தம் பயங்கரவாதத்திற்கு எதிரானது" எனச் சிங்களப் பேரின அரசியல் வாதிகள் ஜெனீவா மரித உரிமைகள் மன்றத்தில் கோஷமிட்டனர்.


அனைத்துப் பொது மன்றங்களிலும் ஆட்சியாளர்கள் இதையே எடுத்துரைத்தனர். தமிழர்களுக்கு என்று தனியாக ஒரு பிரச்சினையுமில்லை. அது நாட்டின் பொதுப் பிரச்சினை என்றவாறு தமிழர் விடுதலைப் போராட்டத்தைக் காட்ட முனைந்தனர். பிரச்சாரங்களும் அப்படியே முடுக்கிவிடப்பட்டன. தமிழர் போராட்டத்தை எவ்வளவு மழுங்கடிக்க முடியுமோ? அவ்வளவுக்கு மழுங்கடித்தனர். கொச்சைப் படுத்தினர். அப்படிப்பட்ட ஒரு அரசை நல்லிணக்க அரசு என்றும், தேசியப் பற்றுள்ள அரசு என்றும் கொல்லிக் கொண்டு தமிழ் தலைமைகள் காப்பாற்றி வந்திருக்கின்றனர். கடந்த நான்கு ஆண்டுக்கு முன்னர் புதியதாக வந்த ரணில் ஆட்சியுடன் பேரம் பேசக் கூடிய சந்தர்பம் பல வந்தும், தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய சாதகமான சூழல் பல ஏற்பட்டும் அரசியல் சாணக்கியமற்ற தமிழ் தலைமைகளால் அத்தகைய சாதகமான சூழல்கள் எல்லாம் தவறவிடப்பட்ட நிலையில் தற்போது அடுக்கடுக்காய்த் தேர்த்தல்கள் வரப் போகின்றன.

நல்லூர்த் திருவிழா வருவதற்கு முன்னர் நடைபெறும் முன் ஆயத்தங்கள் போலத் தேர்த்தல் திருவிழாவையும் எதிர் கொள்ளப் புறப்பட்டு விட்னர் அரசியல்வாதிகள். கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம் இது. ஆழ்ந்து பார்த்தால் மிகவும் கேவலமானது. இவ்வளவுக்குத் தமிழரைக் கேணயர்களாக அரசியல் வாதிகள் எண்ணத் தொடங்கிவிட்டனரா? என்று ஆதங்கப்பட வேண்டி உள்ளது.


முதலில் பௌத்த பிக்குமார் வந்தனர். பின்னர் நாமல் வந்து போனார். அவர் வட பகுதிப் புலமையாளர் ஒருவரால் எழுதிக் கொடுத்ததைத் தமிழர்கள் முன் வாசித்துவிட்டுப் போனார். மனோ கணேசனும் வந்தார். சில கட்டடங்களைத் திறந்து வைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார். தொடர்ந்து மந்திரி சஜித் பிரேமதாஸ வீட்டுத் திட்டத்தைக் கையளிக்கவென வந்தார். அவரைத் தொடர்ந்து தற்பொழுது ஐ.தே.க அரசியல் வட்டாரத்தில் அதிகம் பேசப்படும் கருவின் மருமகனும், எமது பொது நூலகத்தின் எரிப்பில் பங்குகொண்ட முக்கிய சூத்திரதாரியெனத் தமிழ் மக்களால் கருதப்படும் காமினி திஸ்ஸநாயக்காவின் மைந்தனுமான நவீன் திஸ்ஸநாயக்கா வந்து போயிருக்கிறார். சஜீத் பிரேமதாஸாவை நவீன் தொடருவதில் காரணம் உண்டு. அதாவது ஐ.தே.கவின் அரச சதுரங்கத்தில் சஜீத்துக்கு செக் மேற்றாக வைக்கப்படுபவர் நவீன்.


இந்த இடத்தில் நவீன் திஸநாயக்காவின் இனவாதப் பேச்சால் விளைந்த விபரீதத்தைக் குறிப்பிடலாம். அப்போ ரணில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய சமயம். 'கருணாவைப் புலிகளிடமிருந்து பிரித்த பெருமையும், சாணக்கியமும் ரணிலையே சாரும்" என்று பேசியதன் விளைவு ரணில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

அதே நவீன் திஸநாயக்கா சிங்களத் தலைவர்கள் தமிழரின் பிரச்சினைகளைத் தேடிப் பார்க்காவிடில் பிரச்சினைகள் வரும் என எச்சரிக்கிறார். இதுவும் ஒரு தேர்த்தல் 'பல்டி" யாகக் கொள்ளலாம்.



இப்படிப்பட்ட சூழலில் எல்லா அரசியல்வாதிகளும் தமிழ் தேசத்தைக் குறிவைத்துச் செயற்படத் தொடங்கியுள்ளனர். முன்னர் அரசுக்கெதிரான பயங்கரவாதமாகப் பார்க்கப்பட்ட தமிழர் விடுதலைப் போராட்டம் தற்போது நியாயமானதொன்றாகப் பேசப்படுகிறது. "புலிகள் நல்ல பிள்ளைகள். பிரபாகரனின் கோரிக்கை சரியானது. அவர் ஒரு ஒழுக்கமான படை அணியை வைத்திருந்தார். அவர் பார்வை தனியே போராட்டத்தோடு நின்றுவிடவில்லை. தமிழர் தேசியத்தை அவர் வலியுறுத்தினார். அவர்களுக்கான தேசம் எப்படி அமைய வேண்டும் என்றும் கனவு கண்டார். தேசத்தை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற திட்டத்தை ஆரம்பித்திருந்தார். முழு இலங்கையின் பொது நன்மை கருதிக் காடுகளை அழிப்பதில்லை என்று திட சங்கர்பம் கொண்டிருந்தார். எனப் பேசுகிற அரசியல் வாதிகள் அவர் கொண்ட சர்வதேசக் கொள்ளைகளையும் சரி என்று பேசத்தொடங்கிவிட்டனர்.





எனவே ஒரு ஜனநாயக நாடு என்ற செயற்பாட்டில் தேர்த்தல் எவ்வளவு முக்கியமானது? அந்தத் தேர்த்தலில் மக்கள் வாக்குகள் எவ்வளவு பெறுமதி மிக்க தென்ற விடயத்தைச் சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும். வாக்குகளை வாங்கி அதிகாரக் கதிரைகளில் அமர்ந்து கொண்டேதான் தமக்கு வாக்குகளை அளித்த மக்களுக்கெதிரான கொடுங்கோலாட்சியைக் கடந்த காலத்தில் நடத்தினர். பூனை போலப் பதுங்கியிருந்து தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுப் பின்னர் தமிழர்களுக்கெதிரான பல மோசமான விழைவுகள்ள ஏற்படுதியது மட்டுமல்லாமல், அண்மையில் நடைபெற்ற குண்டு வெடிப்பும் நடைபெற இவர்கள் அசமந்தப் போக்கே காரணமாயிருந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டும் மக்கள் மத்தியில் உண்டு. அந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரி முதலிடத்தையும், பிரதமர் ரணில் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

எனவே வரும் தேர்தல்கள் மிக முக்கியமானதாக இருக்கப் போகிறது. எல்லா மக்களுக்கும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு இது ஒரு முக்கியமான திருப்பு முனையாக மட்டுமல்ல தமிழர்களுக்கானதொரு புதிய தலைமை உருவாகக் கூடிய விடயமாகவும் தேர்தலை நாம் பார்க்க வேண்டும். இனிக்க இனிக்கப் பேசி எம்மைக் குழியில் வீழ்த்திய பெருமை சிங்கள அரசியல்வாதிகளை விடத் தமிழ அரசியல்வாதிகளையே சாரும். அதிலும் முக்கிய இடத்தை வகிப்பவர்கள் தமிழ் அரசியல் தலைமைகள். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்தாலும் எல்லாக் கட்சிகளும் தனித்தே இயங்கி வந்தவர்கள். அவர்களும் தற்போது மறைமுகமான சந்திப்புகளை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர். அதில் சித்தார்த்தன் - கோத்தா அபய சந்திப்பைக் குறிப்பாகச் சொல்லலாம். இவை எல்லாம் பொது மக்கள் நலன் கருதாமல், சுய சிந்தனையோடும், சுய லாபத்தோடும் முன்னெடுக்கப்படுகின்ற நகர்வுகள் என்றுதான் சொல்லலாம். . தங்களை நிலையாக வைக்க இவ்வகையான உபாயங்களையும், வியூகங்களையும் வகுக்கத் தொடங்கிவிட்டார்கள் தமிழ் தலைமைகள். அன்று தமிழ் தேசியத்தைக் காப்பாற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற குடைக்கீழ் விடுதலைப் புலிகளால் அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டனர். அந்தக் கட்சிகளெல்லாம் தற்போதும் அந்த இணைப்பில் இருப்பதாகப் போலியாக இயங்கிக் கொண்டு தமிழ் தேசியத்தை உடைக்கத் தம்மாலானவரை தமது பங்களிப்பை மறைமுகமாகச் செய்து கொண்டிருக்கின்றன என்பது கவலைக்குரிய விடயமே.

"ஒட்டுக் குழுவாக இயங்கியவர்கள் இன்னும் ஒட்டுக் குழுவாக இயங்க வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர்." தெற்கில் இருந்து வரும் அரசியல்வாதிகளுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுப்பதோடு அவர்களுக்குச் சாமரம் வீசவேண்டும் என்பதில் அந்தக் குழுக்கள் இன்னும் ஆர்வத்தோடு இருப்பது தெரிகிறது.

எனவே வருகின்ற தேர்த்தல்களில் முறையான தலைமைகளின் கீழ் இயங்காது போனால் அதில் வரும் பாதிப்புகள் தொடர்ந்து வரும் தேர்த்தல்களிலும் பிரதிபலிக்கலாம். தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஒரு தகுதிவாய்ந்த தமிழ் மக்களுக்குரியதொரு ஆரோக்கியமான தலைமையாக இல்லை என்று பலர் குறைபட்டுக் கொள்ளுகின்றனர். அதுவும் அந்த அமைப்பில் இருப்பவர்களது பொறுப்பற்ற பேச்சுகளும், தான் தோன்றித்தனமான நடவடிக்கைகளும் மக்கள் கருத்தை நிரூபிக்கின்றன.

கடந்த 13.08.2019 அன்று அம்பாறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பேசும்போது 'அரசுடனான பேச்சுவார்த்தையிலிருந்து எம்மை விலகும்படி பலர் கேட்கிறார்கள். பேச்சிலிருந்து விலகிவிட்டு நாம் ஆட்லறி அடிப்பதா?" என்று கேள்வி எழுப்பியதாகச் செய்தி உண்டு. கடந்த நான்கு ஆண்டுகளாகப் பேசிக் கண்டது ஒன்றுமில்லை என்ற விரக்தியால்தான் மக்கள் அப்படிக் கேட்கிறார்கள் என்று எண்ணா, மக்களை நோக்கி 'ஆட்லறி அடிப்பதா" என்று கேட்பது சுமந்திரனைப் பொறுத்தவரை நகைச்சுவையாக இருக்கலாம்.ஆனால் ஒரு ஊசி வெடியைக் கூடக் கொளுத்தத் திராணியற்றவர் சுமந்திரன் என்று மக்கள் பேசுவது அவருக்கு எங்கே கேட்கப் போகிறது!

# நான் வாக்காளன் சொல்லுறன், கேளுங்கோ...!



எலக்சன் வரப்போகுதெண்டு கேள்விப்பட்ட உடனை நான் முழிச்சிட்டன். கோயில் திருவிழா வருஷா வருசம் வரும். தேர்தல் திருவிழாவும் ஐஞ்சு வருசத்துக்கு ஒருக்கா வரும்.. என்னைப் பொறுத்தவரை இரண்டும் திருவிழாத்தான். இரண்டிலையும் நல்லாப் பொழுது போகும். சில பேருக்கு திண்டு, குடிக்க நல்ல சந்தர்பமாயும் இருக்கும். வேறை சிலபேருக்கு "அடி" யும் இருக்கும். சாப்பாட்டு ஓடர், தண்ணி ஓடர், போஸ்டர் ஓடர் எண்டு பல ஓடர்களிலை அடியும் இருக்கும். அதாலை அடியும் வாங்குவினம்.

அரசியல்வாதியளின்ரை கண்ணுக்கு இதுவரை தெரியாது எண்டு இருந்ததெல்லாம் இனிமேல் தெரியத் துவங்கிவிடும். முன்னம் கண்டும் காணாமலும் போன ஆக்கள் இனி "தம்பி ராசா! சாப்பிட்டியோ ? குடிச்சியோ? எண்டெல்லாம் சும்மா சும்மா கேக்கத் துவங்கிவிடுவினம். அதாலை பல வில்லங்கங்களும் உண்டு. சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுக்கிறமாதிரியும் விசியம் நடக்கும்.

இப்ப கோத்தாவை வேட்பாளரா மகிந்தா தெரிஞ்சிட்டார். பிச்சுப் பிடுங்கல் குடும்பத்துக்கை இருந்தாலும் அந்தாள் வெளியிலை அதை நார விடேல்லை. மூத்தவன் கெம்பினவனாம். மனுசிக்கும் புறியமில்லை. ஆனாலும் தேடின சொத்தையும் பாதுகாக்க வேணும். கிடக்கிற வழக்குகளையும் இல்லாமல் செய்ய வேணும். எத்தினை களுத்தைக் காப்பாற்ற வேணும். அதாலை புலியளை வென்றவர் எண்டு சிங்களச் சனம் நம்பிக் கொண்டிருக்கிறவரைப் போட்டுக் கதிரையைப் பிடிச்சிட்டால், பிறகு அவரே எல்லா திருகுதாளத்தையும் பாப்பர் எண்டதுதான் அவையின்ரை சிந்தனை. அதுக்காக முழுச் சிங்களச் சனத்தின்ரை வாக்கையும் வேண்டிப் போட வேணுமெண்டதுதான் அவையின்ரை நோக்கமும். அதுக்காக எல்லாத்தையும் சொல்லிப் பாக்கினம். அதோடை தமிழற்றை வோட்டை வேணுமெண்டும் நாக்கைப் பிரட்டினம். வடக்கை நோக்கி ஒவ்வொருத்தராப் படை எடுக்கினம். இப்பதான் புலி பிரபாகரன் போராளியள் எண்டு எல்லாம் அவையின்ரை கண்ணுக்கு நல்லதாத் தெரியிது.

கடைசியா வடிவேலு ஒரு முசுப்பாத்தியிலை "என்னை நல்லவன் எண்டு சொல்லிப் போட்டாங்களெடா!" எண்டு சொல்லி அழுகிற மாதிரி எங்களுக்கும் அழவேணும் போலை கிடக்கு. இப்பதான் ஒவ்வொருதராச் சொல்லுறாங்கள் "புலி திறமானவை. அவை ஆரையும் தாக்க வேணுமெண்டால்தான் தாக்குவினம்.ஒழுக்கமானவை. காட்டை அழியவிடாமல் பாதுகாத்தவை." எண்டு ஒரே ஐஸ் வைச்சபடி. ஏன் இந்த ஐஸ் வைப்பு? கவனம், கபாலம் நல்லாக் குளிர்ந்து போய் சன்னி பிடிக்கும்.. நினைக்க எனக்குப் பயமாக் கிடக்கு, என்ன?

சிங்களச் சனம் மட்டும்தான் இந்த ஐஸ் வைப்பு எண்டே நினைக்கிறியள்? எங்கடை கூட்டமைப்பும் துவங்கிவிட்டுது. ஆடிப் போய் விழுந்து கிடக்கிற கூட்டமைப்பைத் தூக்கி நிறுத்த வேணும் எல்லே? இதுவரை காலமும் பல குளப்படி விட்டவை கூட்டமைப்புக் காறர். இப்ப எலக்சன் வரத் துவங்கின உடனை, அவையும் துவங்கிவிட்டினம். மழை காலத்துச் செட்டி அட்டையள் மாதிரி. இனிக் கனபேர் வர வெளிக்கிடுவினம். "சொந்தங்கள் பிழை விட்டால் அவையளை என்ன வெட்டி எறியிறதோ? மன்னிக்கத்தானே வேணும். ஆனபடியாலை இந்த முறை அவை செய்ததெல்லாத்தையும் மன்னிச்சுக் கொண்டு வோட்டை போடுங்கோ." எண்டு கூட்டமைப் பின்ரை எடுபிடியள் வந்து உங்களிட்டைக் கேக்கப் போயினம், பாருங்கோவன்.

கோத்தாவை ஜனாதிபதியாக அறிவிக்கப் போயினம் எண்டு தெரிஞ்ச உடனை ஆளுக்காள் தெரியாமல் போய் கோத்தபாய வீட்டுக் கதவைத் தட்டத் தொடங்கிவிட்டினம். அதுக்கை சித்தாத்தன்ரை கூத்தைப் பாருங்கோவன். போனது கோத்தபாயாவைச் சந்திக்க. அதுவும் ஒருத்தருக்கும் தெரியாமல். ஆனால் இப்ப தெரிய வந்த உடனை சமாளிக்கத் துவங்கியாச்சு. தனிப்பட்ட சிநேகிதத்தாலை போய்தான் சந்திச்சனான்.எண்டு இப்ப சொல்லுறார். ஆனால் தமிழரசுக் கட்சியின்ரை பொதுச் செயலாளர் துரைராச சிங்கம் கறாராச் சொல்லிப் போட்டார் கூட்டமைப்பிலை அங்கம் வகிக்கிறவை தனியாப் போய் வேட்பாளரா நிக்கப் போறவையைச் சந்திக்கேலாதாம். சந்திச்சா அவையளைக் கூட்டமைப்பிலை அங்கத்தவராக வைச்சிருக்கேலாதாம். அப்ப அப்பிடிப் போனவை கிளீன் போல்ட். அப்ப சித்தாத்தனை என்ன செய்யப் போறியள்? எண்டு அவையிட்டைக் கேக்க வேணும்போலை கிடக்கு.

சித்தாத்தினிட்டை அண்டு தொடக்கம் எளிய பழக்கம் கிடக்கு. தனக் கெண்டு ஒரு பொலிஸி கிடையாது. எப்பவும் இந்தியாவின்ரை தலைப்பைப் பிடிச்சுத் தொங்கிறதும். அவையின்ரை நன்மைக்காக என்ன செய்யேலுமோ அதைச் செய்யிறதும். தன்ரை வயிறை வளக்கிறதும். எண்டு உதவாத பழக்க வழக்கம். சண்டேக்கை அரசாங்கத்தோடை நிண்டு புலி பிடிக்கிறன், பூனை பிடிக்கிறன் எண்டு வயிறை வளர்த்தார். பிறகு சண்டை முடிஞ்ச அண்டு "சனத்தைக் கொல்லாமல் சண்டையை முடிச்சவை" எண்டு மகிந்தாக்கு ஒரு பாராட்டு. பிறகு அவையைப் பிடிச்சுத் தொங்கிக் கொண்டு "ஒண்டும் சரிவராது" எண்டு சொல்லிக் கொண்டு அவையிவை எண்டு எல்லாருக்கும் "ஜல்ரா" போட்டுத் திண்டு குடிச்சதுதான் மிச்சம். இப்பவும் என்ன? கோத்தா வந்தால் எல்லாரையும் விட்டிட்டு ஓடிப்போய் தனியா நிண்டு கொண்டு சலுகையை வேண்டி...வெள்ளை வானுக்குப் பெற்றோலும் அடிச்சுக் கொண்டு பிறகென்ன அவைபாடு கொண்டாட்டந்தானே? பழக்க தோஷம் விடாது. குருவிச்சைக்கு தன்னாலை வளரேலாது. ஆற்றையேன் ஒட்டிலைதான் வளறுற பழக்கம். விடுமோ? இப்பவும் ஒட்டிப் பிழைக்கிறதுதான் நோக்கமாக்கும்!

போன கிழமை வல்வெட்டித்துறையிலை நீச்சல் தடாகம் திறந்தவை. அதுக்கு மந்திரி மங்களா சமரவீர வந்திருந்தவர். அவருக்கு நீச்சல் ஆனந்தன் சொந்தமாம். அதிலை சுமந்திரனும் போய் பேசினவர். அவர் பேசேக்கை "வல்வை மண் இரு பெரும் சாதனையாளரைத் தந்திருக்கிறது" சொல்லி இருக்கிறார். அதைக் கேட்டுக் கொண்டு நிண்ட ஒரு வெறுவாய்க் கெட்டது சொல்லியாக்கும், "சுமந்திரன் பிரபாகரனைப் புகழ்ந்தார்" எண்ட மாதிரி ஒருத்தர் எழுதிறார். எட! போறதுகள் அங்கை பேசிறவை என்னத்தைப் பேசினம் எண்டு வடிவாக் கேட்டுப் போட்டு வந்து எழுதுங்கோவன். இது அப்பிடி இல்லாமல் அண்டைக்குப் பேப்பர் விக்கிறதுக்காக "அப்பிடியாம். இப்பிடியாம்." எண்டு எழுதிச் சன்தத்தைக் குளிர வைக்கிற வேலை.. உது திறமான வேலையோ?



# ரோசா லக்சம்பேர்க்

இருபதாம் நூற்றாண்டின் முதல் தலைமுறை சார்ந்த மாபெரும் சோசலிஷ சிந்தனையாளர்களில் லெனினிக்கு அடுத்தபடியாக இருப்பவர் ரோசா லக்சம்பேர்க். ஆழ்ந்த அறிவும், கூர்மையான கற்பனையும்,செறிவான மதி நுட்பமும் வாய்க்கப் பெற்றவர். அவருடைய எழுத்துக்களில் சில செவ்விலக்கியத் தன்மை பெற்றவை. பிரிட்டிஷ் தொழிலாளர் இவரை மேலும் படித்தறிந்து கொள்ள வேண்டும். ஆகவே, சோசலிஷ புத்தக மையம்அவரின் எழுத்துக்களை வெளியிடத் தொடங்கி இருப்பதைக் கண்டு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். சொல்லப் போனால் நீண்ட காலத்திற்கு முன்பே செய்திருக்க வேண்டும்.காலந் தாழ்த்தித்தான் வருகிறது இச் சிறுநூல், அந்நாரின் படிப்பறிவையும் , மதிநுட்பத்தையும், தமது இயக்கத்திற்கான கன்னி முயற்சி என்றே கருதுகிறேன். இனி எடுக்கப் போகும் பெரு முயற்சியின் ஆரம்பமாகக் கருதுகிறேன்.

– பேராசிரியர் இரால்ட் லாஸ்க்கி

ரோசா லக்சம்பேர்க் 1871 ஆம் ஆண்டு தன் பெற்றோருக்கு ஐந்தாவது குழந்தையாக அவதரித்த இடமான சமோஸ்க் அன்றைய நாட்களில் ரஷ்யாவின் ஆளுகைக்குட்பட்ட போலாந்து நாட்டில் இருந்தது. அவரது தந்தையார் மர வியாபாரி. யூத இனத்தவரான அவர் குடும்பம் வீட்டில் போலிஷ் மற்றும் ஜேர்மனிய மொழிகளைப் பேசினர். யூதரான இவர் தான் வாழ்ந்த சமூகத்திலிருந்து அந்நியப்பட்டு வாழாமல், அவர்களுடன் ஒன்றிணைந்து வாழலானார். அவர் ஜேர்மனிய இலக்கியத்தை நன்கு கற்றவர். பல நூற்றாண்டு காலமாக யூத இனம் எல்லா நாடுகளிலும் சொல்லொணாத் துன்பத்திற்கும், கொடுமைகளுக்கும் ஆட்பட்டது. அவர்கள் கல்வி கற்கத் தடை விதிக்கப்பட்டது. தொழில்கள் மேற்கொள்ள அனுமதிக்கவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் வாழலாம் . அதை "யூதச் சேரி" என்று இழிவுபடுத்தும் அர்த்தத்தில் அழைத்தனர். உலகத்தில் யூத இனத்தைப்போலக் கொடுமைக்கும், கேலிக்கும் உட்பட்ட இனங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

தலைவர் லெனினிடமே சித்தாந்தம் சம்பந்தமாக எதிர் உரையாடக் கூடிய தலைசிறந்த அறிஞராகக் காணப்பட்டார் ரோசா லக்சம்பேர்க். அரசியல் போராட்டங்களுக்கும், கிளர்ச்சிக்களுக்கான நடவடிக்கைகள் அமைப்பதற்கும், தன் திறமைகள் அனைத்தும், வழங்கிய அரசியல்வாதியுமாவார். எப்படி இருந்தாலும், உணர்ச்சி பூர்வமாக தன் மனம், பறவைகள், விலங்குகள் மற்றும் கவிஞர்கள் பற்றியும் ஆழ்ந்த சிந்திக்க, நேரத்தை ஒதுக்கத் தவறவில்லை. தனது கடிதங்கள் ஒன்றில் பினவருமாறு எழுதுகிறார்.

"உனக்குத் தெரியும் போராட்டக் களத்தில், தெருச் சண்டையில் அல்லது சிறையில்தான் நான் இறக்கவே உண்மையிலேயே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.ஆனால் என் ஆளுமையின் ஆழ்ந்த பாசமோ, தோழர்களைவிட என் சின்னஞ்சிறு பறவைகளுக்குத்தான் சொந்தமானது.

**நன்றி : சிறைக் கடிதங்கள்**

# உண்மையைத் தேடுகிறோம்... எனவே இது விவகாரமல்ல!

## யாழ்.பல்கலைக்கழகம் பற்றியது

எம்.அனுசரண்

தமிழ் தேசியம் சார் நெகிழ்ச்சிப் போக்காலேயா யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் இடைநிறுத்தப் பட்டார்? என்ற கட்டுரை கடந்த 11.08.2019 திகதியிடப்பட்ட தீபத்தின் 13ஆம் பக்கத்தில் வெளியாகியிருந்தது. அந்தக் கட்டுரையில் நான் மாறுபடும் இடங்கள்:

**1.“விக்கினேஸ்வரன் அவர்கள் பழி வாங்கும் மனப்பாங்கற்ற, யாருக்கும் தீங்கு விளைவிக்காத, மற்றவர்களின் கருத்தையும் ஏற்கும், தன்முனைப்பற்ற மென்போக்கு கொண்ட நிர்வாகியாக விருந்தமை” என்ற வரிகள் தொடர்பாக,**

அப்படி அல்ல. இவர் துணைவேந்தர் பதவிக்கு வேண்டிய மிக ஆழமான அறிவைக் கொண்டவராகக் காணப்படவில்லை. ஒருமுறை மருத்துவபீடப் புதுமுக மாணவர் வரவேற்பு நிகழ்வில் மருத்துவ கற்கைநெறி நான்கு அல்லது நான்கரை வருடங்கள் கொண்டது என உரையாற்றினார். மருத்துவ கற்கைநெறி ஐந்து ஆண்டுகள் கொண்டது என்ற விடயம் கூட இவருக்கு தெரிந்திருக்கவில்லை. முக்கிய நிகழ்வுகளில் மட்டுமல்ல, பேரவை மற்றும் மூதவைக் கூட்டங்களின் போதே நித்திரையாகி விடுவார். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கூட்டப்படும் கூட்டங்களில் எதிர்வாதம் புரிபவரை நோக்கிச் சட்டென “Get out” என்று கூறிய சம்பவங்களும் இந்த இரண்டு வருட காலத்தில் அடிக்கடி நிகழ்ந்திருக்கின்றன.

இவரின் பலவீனத்தின் காரணமாகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இவர் கடமையாற்றிய போது இவரின் நண்பராக இருந்த பதிவாளர், கல்வி நிர்வாக விடயங்களிலும், பேரவை, மூதவை போன்ற கூட்டங்களிலும் செல்வாக்கு செலுத்தியதாகக் குற்றச்சாட்டு உண்டு. உண்மையில் பல்கலைக்கழகச் சட்டப்படி பதிவாளர் கல்விசார் ஊழியரல்ல. இவர் பேரவை மற்றும் மூதவைகளின் உத்தியோகபூர்வ (Ex office) செயலாளர் மட்டுமே. அக்கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை இவருக்குக் கிடையாது. இந்தப் பதிவாளரும் ஏதோ ஒரு ஆளுமைச் சிக்கலுக்கு உள்ளானவராகக் காணப்பட்டதால் எதிராளியை இயலுமானவரை மிரட்டிப் பார்ப்பவராகவும், ஆனால் அவர் மேலோங்கும் தருணத்தில் அல்லது சூழ்நிலைகள் தனக்கு பாதகமாக மாறும் போது சட்டென எதிராளியிடம் சரணடைவதுமான இயல்பை கொண்டவராக காணப்படுவதால் இவரின் குறைபாடுகள் துணைவேந்தரின் செல்வாக்கில் வீழ்ச்சியை ஏற்படுத்தின.


உண்மையில் பேராசிரியர் விக்கினேஸ் வரன் துணைவேந்தர் பட்டியலில் இருந்து அகற்றப்பட முன்னர் பல்கலைக் கழகப் பதிவாளர் அகற்றப்பட்டிருக்க வேண்டுமென்று பல்கலைக்கழக வட்டாரங்களில் பேசப்படுவதுமுண்டு. அது உண்மை தான். எனினும் அவ்வாறு செய்வதில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்குச் சில நிர்வாகச் சிக்கல்கள் உண்டு. பேராசிரியர் விக்கினேஸ் வரன் அடிப்படையில் பேராசிரியர் நியமனத்தில் உள்ளார். துணைவேந்தர் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் மட்டுமே. பதிலாகப் பதிவாளரரை நீக்குவதெனின் அவரை பல்கலைக்கழகச் சேவையிலிருந்தே இடைநிறுத்தி விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

உண்மையில் பதிவாளர் திரு. காண்டீபன் பேராசிரியர் சண்முகலிங்கனின் தெரிவேயாவார். அவர் துணைவேந்தராக இருந்த காலத்தில், அவரின் இளம்வயதில் அவரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியையாகக் கடமையாற்றிய ஒருவரின் சிபாரிசினை அடுத்தே திரு காண்டீபன் பதிவாளராகத் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறுவர். ஆனால் பின்னர் பேராசிரியர் சண்முகலிங்கன் அவர்கள் பதிவாளரின் பொருத்தமின்மை பற்றி உணர்ந்து கொண்டார். ஆனால் உள்ளூர் அமைச்சருடன் பல முறைகேடான நியமனங்களில் உடன்பட மறுத்தமையால் திரு சண்முகலிங்கன் இரண்டாவது பதவி காலத்துக்குத் தெரிவு செய்யப்படவில்லை.

2008 - 2014 காலப்பகுதியில் பல்கலைக்கழகம் ஈ.பி.டி.பி. அரசியல் செல்வாக்கினுள் முழுமையாக அமிழ்ந்திருந்த போது அதற்குள் முழுமையாக மூழ்கியவரெனப் பதிவாளரைக் குறிப்பிடலாம். பேராசிரியர் சண்முகலிங்கனுக்குப் பின்னர் வந்த பேராசிரியை வசந்தி அரசரட்ணம் பதிவாளரைத் தனது கட்டுக்குள் கொண்டுவர முயன்றார். ஆரம்பகால கட்டத்தில் பதிவாளர் பற்றி உள்ளூர் அமைச்சரிடம் புகார்களை மேற்கொண்டார். ஆனால் அவரும் அக்காலச் சூழ்நிலையைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. உள்ளூர் அமைச்சர் இப்புகார்களை பயன்படுத்திப் பதிவாளரை மேலும் தனது கைக்குள் போட்டுக் கொண்டார். பேராசிரியை வசந்தி அரசரட்ணத்தின் இறுதிக் காலத்தில், 2015 ஜனவரி மகிந்த யுகத்தின் வீழ்ச்சிக்கு பின்னர் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களாகச் சிறந்தவர்கள் நியமிக்கப்பட்டனர். இப்பேரவையின் ஆரம்ப காலத்தில் பதிவாளர் ஒரு தடவை முறையாக மாட்டிக் கொண்டார். ஆனால் அவர் தனக்கே உரித்தான பாணியில் தன் குற்றத்தை கண்டுபிடித்த பேரவை உறுப்பினர் பேராசிரியர் தர்மரட்ணம் அவர்களிடமே முழுமையாக சரணடைந்தார். பதிவாளர் மூலம் 2008 - 2014 காலப்பகுதி ஊழல்கள் பல வெளிவரக் கூடுமென நம்பிய பேராசிரியரும் அவரை மன்னித்து விட்டதாகவும், இது குறித்து பேராசிரியை வசந்தி அரசரட்ணம் ஏமாற்றமடைந்ததாகவும் கூறப்படுவதுண்டு.

இதேவேளை எமது இனத்தின் சாபக் கேடோ என்னவோ, பல்கலைக்கழகத்தில் நேர்மையான பேராசிரியர்கள் என்ற பெயர் ஓய்வு பெற்றுள்ள பேராசிரியர்கள் சிலர் ஒன்றிணைந்து செயற்படாமல் தமக்கிடையேயுள்ள “Ego” பிரச்சினையால் உதிரிகளாக செயற்பட்டமையும் செயற்படுகின்றமையும் எமது பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியைப் பாதிக்கின்றது.

2018 இல் மீளவும் புதிய பேரவை தெரிவு செய்யப்பட்ட போது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவானது ஒரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களை அதே பல்கலைகழகத்தில் பேரவை உறுப்பினர்களாக நியமித்தால் அவர் பக்கச்சார்பானவர்களாக செயற்படுவார்களெனக் கருதி பேராசிரியர் தர்மரட்ணம், பேராசிரியர் சிற்றம்பலம் போன்றவர்களைப் பேரவை உறுப்பினர்களாக மீளவும் தெரிவுசெய்யவில்லை. மேலும் நாசூக்காக பேசாமல் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசும் வைத்திய கலாநிதி ஜெயக்குமார் போன்றவர்களையும் மீளத்தெரிவுசெய்யவில்லை. இச் இச்செயற்பாட்டின் பின்னணியில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினராக இருந்த பேராசிரியர் இ.குமாரவடிவேல் இருந்தார் அல்லது அவர் மௌனமாக இருந்தார். என்ற குற்றச்சாட்டும் உண்டு.




இதில் வேடிக்கை என்னவென்றால் தனது கணித ஆசானும், 2017 இல் தனது மற்றொரு மாணவனுமான பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா துணைவேந்தராக நியமிக்கப்படாததையொட்டி “கிளர்ச்சிக்கான சூழ்நிலை” பேரவையில் மேலெழுந்த போது பல்கலைக்கழக சட்டத்தைச் சுட்டிக்காட்டி பேராசிரியர் விக்னேஸ்வரன் நியமனத்தை ஏற்றுக்கொள்ளலாம் எனப் பேரவை உறுப்பினர்களை உடன்பட வைத்தவருமான பேராசிரியர் தர்மரட்ணத்தை, மீளவும் நியமிக்க வேண்டாமென துணைவேந்தரான பேராசிரியர் விக்னேஸ்வரனும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவை வேண்டிக்கொண்டமையேயாகும்.

இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய மற்றொரு உண்மையும் உண்டு. 2015 ஜனவரியில் இடம் பெற்ற ஆட்சிமாற்றத்துக்கு முன்னரே சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து பல்கலைக்கழக பேரவையில் இடம்பெற வேண்டிய அறிஞர்களின் பெயர் விபரங்களை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு அனுப்பியதையும் பின்னர் 2015 ஜனவரி ஆட்சிமாற்றத்தின் பின்னர் பேரவையின் மாற்றத்தை வலியுறுத்தி ஊழியர் சங்கம் போராட்டத்தை முன்னெடுத்த போது இரு ஆசிரியர் சங்கங்களும் ஆதரவளித்தமையும் இங்கு குறிப்பிடவேண்டும். ஆனால் 2015 ஏப்ரலில் புதிய பேரவைக்கான பெயர்கள் அறிவிக்கப்படும் நிலையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் ஏற்கனவே மூன்று சங்கங்களாலும் சிபாரிசு செய்யப்பட்ட முன்னாள் பேராசிரியர்களின் பெயர்களை நீக்கிவிட முனைந்ததாகவும் இதற்கு பேராசிரியர்கள் பதவி உயர்வை எதிர்பார்த்திருந்த சில விரிவுரையாளர்கள், தமது பதவி உயர்வுக்கு இவர்கள் இடைஞ்சல்களாகி விடுவார்கள் என அஞ்சியமையே காரணம் எனவும் கூறப்படுகிறது.

இந்த இறுதிநேர கால்வாரும் செயற்பாட்டால் சினமடைந்த ஊழியர் சங்கம் தமிழரசுக்கட்சியின் தலைமைக்கு திரு.சி.வி.கே சிவஞானம் ஊடாக நிலமையை தெளிவுபடுத்தியிருந்ததாகவும், பின்னர் பேராசிரியர் குமாரவடிவேல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும், பேராசிரியர் தர்மரட்ணம், பேராசிரியர் சிற்றம்பலம் போன்றோர் பல்கலைக்கழக பேரவைக்கும் தெரிவுசெய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

2018 இல் புதிய பேரவை நியமிக்கப்பட்ட போது பேராசிரியர் ஜயதேவ உயங்கொட போன்ற சில புதிய நேர்மையான நபர்கள் பேரவையில் இடம்பெற்றாலும், அவர்கள் நிலமைகளை அவதானித்துச் செயற்படச் சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது.


**2. “ பேராசிரியர் விக்னேஸ்லரன் பதவிக்கு வருவதற்கு முன்னர் எத் தகைய தமிழ்த்தேசியம் சார்ந்த செயற் பாடுகளிலும் தன்னை அதிகம் ஈடு படுத்திக்கொண்டதில்லை” என்ற வரிகள் தொடர்பாக -**

இது தவறு. 2001 பொங்கு தமிழ் நிகழ்வின் மீள் நிகழ்வுகள் வடக்கிலும், கிழக்கிலும் இடம்பெற்ற போது கிழக்குப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் பேராசிரியர் விக்னேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டார்.ஆனால் கருணா யுகத்தில் தோன்றிய நெருக்கடியின் பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு இடம் மாற்றம் பெற்று வந்த பின்னர் சகல தேசிய செயற்பாடுகளில் இருந்தும் ஒதுங்கியிருந்தார். 2014 இல் துணைவேந்தர் தேர்தலில் சந்திரிக்கா அம்மையாரின் உறவினரான பேராசிரியர் கார்லோ பொன்சேகா மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவைப் பெற முயன்றார். ஆனால் இதை அம்பலப்படுத்தியதன் மூலம் டக்ளஸ் அவரை நிராகரித்துவிட்டார் என்றும் அறியப்படுகிறது.

சமூகப் பொறுப்புள்ளதும், ஒரு சமூகத்தின் அங்கமானதுமாகச் செயற்பட வேண்டிய பல்கலைக்கழகம் சமூகத்தினின்றும் அந்நியப்பட்டுக் கிடக்கிறது என்ற கவலைகள் பலரிடத்தில் உண்டு. தமது கனவுகளை நனவுகளாக்கிக் கொள்ள எத்தனையோ ஆயிரம் மாண, மாணவிகள் பல்கலைக் கழகத்தை நோக்கிப் படை எடுத்து வருகின்றனர். அத்தகைய பாரிய கல்வி நிறுவனத்தை ஒரு சிலர் தமது சொந்த நலன்சார்ந்த தேவைகளுக்காகப் பயன்படுத்துவ தென்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகக் காணப்படுகிறது. எனவே இத்தகைய மோசமான நிஉவாகச் சீரழிவுகளுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிந்து அவர்கள் சமூகத்தின் முன்னர் நிறுத்தப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காகவே இவ்வாறான பதிவுகள் இடம் பெறுகின்றன. அந்த வகையில் மேற்குறிப்பிட்ட பதிவும் பல்கலைக்கழக நலன் சார்ந்த ஒருவரின் கருத்தாகக் கொள்ளப்படுகிறது. அவைகளிலும் ஏதாவது குறைபாடுகள் தென்பட்டால் இல்லது விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும் என நீங்கள் கருதினால் தயவு செய்து எழுதுங்கள்.

# இன அழிப்பின் அகோர வடிவம்
# செஞ்சோலைப் படுகொலை

ஓகஸ்ட் 14



— பிறைவாணன்

இரண்டாம் உலகப் போரில் ஆயிரக்கணக்கான அமெரிக்க மாணவர்கள் போருக்கு எதிரான வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டனர். 1930 மாணவர்கள் உட்பட அமெரிக்க எதிர்ப்பு நடைபெற்றது. கென்டக்கி பல்கலைக்கழகத்தின் 1934 மாணவர்களிடையே இன்னும் கூடுதலான அமெரிக்க இயக்கங்கள் அமெரிக்கா முழுவதும், மேலும் உலகம் முழுவதிலும் இன்னும் கூடுதலாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் இணைந்தனர். 25,000 நாடுகளில் இருந்து 1935 வளாகத்திலிருந்து மாணவர்கள் தங்கள் வகுப்புகளை இந்த வேலைத்திட்டத்துக்காக விட்டுவிட்டனர். வெகுஜன படுகொலைக்கு எதிரான மாணவர்களின் எதிர்ப்பு நன்மை அடைந்தது. ஜேர்மனியின் ஆக்கிரமிப்பு, ஜப்பான் மற்றும் சோவியத் யூனியன், இத்தாலி மற்றும் எத்தியோப்பியா ஆகியவற்றிற்கு இடையே உள்ள கவலை, மாணவர்களின் பேச்சு பயனற்றுப் போயின. இரண்டாம் உலகப்போரின்போது மாணவர்கள் இறுதியில் சண்டையிடப்பட்டு இறந்து போயினர், அவர்களது வார்த்தைகள் இன்னும் கடுமையானவை.

ஆனால் செஞ்சோலைப் பிள்ளைகள் அப்பாவிகள் தமது வாழ்வை வளப்படுத்திக் கொண்டிருந்தவர்கள் அவர்களை விடுதலைப் புலிகள் தமது போருக்காக பயன்படுத்தவில்லை. அவர்கள் வாழ்வுக்காக அவர்களை அவர்கள் பாட்டில் விட்டுவிட்டனர். விடுதலைப் புலிகள் அவர்களை போரில் பயன்படுத்தியிருந்தால் செஞ்சோலை என்ற அமைப்பு உருவாகியிருக்க முடியாது என்பது தெரியும் தெரிந்தும் விடுதலைப் புலிகளால் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் என்ற ரீதியில் இவர்கள் மீது குண்டைப் போட்டார்கள். ஆனாலும் அனைவரையும் அழிக்க முடியாமல் போய்விட்டது. செஞ்சோலை இன்று விருட்சமாக வளர்ந்து போர்க்குற்ற சாட்சியாக நிற்கிறது. இதைவிட வேறுஎன்னத்தை காண்பிக்க முடியும் இது ஒன்றே போதும்.

தமிழர் மனங்களில் இருந்து அகலமுடியாதவாறு பல சம்பவங்கள் எத்தனை வருடங்கள் கடந்தாலும் நிலைத்திருக்கப் போகிறது என்பது உண்மை. தமிழர் பிரச்சினை தீர்வின்றி கிடப்பில் போடப்பட்டிருக்கும் நிலையில் இழந்த இழப்புகளை எவராலும் மறக்க முடியாமல் இன்னும் வலியைக் கொடுத்துக் கொண்டிருக்கப் போகிறது என்பதை கடந்த 14 ஆம் திகதி செஞ்சோலைப் படுகொலையின் 13 ஆம் ஆண்டு நினைவுநாள் அனுஷ்டிப்பு வெளிக்காட்டி இருக்கிறது.

கடந்த 14.08.2006 ஆம் ஆண்டு காலை 7 மணியளவில் முல்லைத்தீவு பகுதி வான்பரப்பில் நுழைந்த சிறிலங்கா வான்படையினர் விடுதலைப் புலிகளின் இலக்குகளைத் தாக்க முடியாது வல்லிபுனத்தில் செஞ்சோலை சிறுமிகள் இல்லத்தின் மீது தாக்குதலை நடத்திவிட்டு வெற்றிகரமாக தாக்குதலை நடத்திவிட்டுச் தப்பிச் சென்றதாக பெருமை பேசினர்.

இந்தத் தாக்குதலில் 61 பாடசாலை மாணவிகள் இறந்ததுடன் 155 இற்கும் அதிகமான மாணவிகள் படுகாயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலனவர் 15-18 வயதுக்கு உட்பட்ட க.பொ.த உயர்தர கல்வி மாணவிகள் ஆவார்கள். இவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் ஆயுதப் பயிற்சியின் போதே தாக்குதல் நடத்திக் கொன்றதாக அப்போதைய அரசு பொய்ப் பிரச்சாரம் செய்தது. ஒரே நாட்டுக்குள் ஒரு இன மக்களை மட்டும் குண்டுபோட்டு அழித்த முன்னாள் அரசு மீண்டும் ஆட்சிபீடம் ஏறப் பார்க்கிறது.

படுகொலை செய்யப்பட்ட மாணவிகளின் நினைவாக நிழல் படங்களுடன் ஒரு நினைவிடம் அமைப்பதற்கு இந்த அரசு தடைவிதித்திருக்கும் போது 13 ஆவது நினைவு நிகழ்வில் எந்த முகத்துடன் தமிழ் அரசியல் கட்சிகள் கலந்து கொண்டனர் என்று மக்கள் கேட்கிறார்கள். இறந்த மாணவிகளுக்கு ஒரு நினைவிடம் அமைக்க முடியாமல் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கப் போகிறார்களாம். இப்படிப்பட்ட நிகழ்வுகளில் தமிழ் அரசியல் கட்சிகள் கலந்து கொள்வது அவர்களுக்கு வெட்கம் இல்லையா என்று மேலும் கேட்கின்றனர்.

செஞ்சோலைப் படுகொலை தமிழின அழிப்பின் கட்டவிழ்த்து விடப்பட்ட மிகப்பாரிய படுகொலையாக வரலாற்றில் தடம் பதித்தது. கொடூர சிந்தனையுடையவர்களால் மட்டுமே அத்தகைய ஒரு விமானத் தாக்குதலை நடத்த முடியும். அந்த இடத்தில் இருந்தவர்கள் அனைவரும் ஆயுதம் தரிக்காத வெறும் பாடசாலை மாணவிகள் மட்டுமே. அப்பாவிச் சிறார்களுக்கு இழைக்கப்பட்ட அநாகரிகமான இந்தக் கொடுமையை நேரில் வந்து காணுமாறு ஐ.நா. மற்றும் சர்வதேச சிறுவர் நல அமைப்புகளுக்கு வேண்டுகோள் விடுத்தும் ஒன்றும் நடக்கவில்லை.

சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட நடுநிலை அமைப்புக்களான ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் கொல்லப்பட்ட அனைவரும் அப்பாவி மாணவர்களே என்பதை உறுதிசெய்தும் இந்தப் படுகொலை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது என்றால், அவர்கள் நேரில் பார்க்க முடியாமல் போன இறுதிப் போரில் அதாவது முள்ளிவாய்க்காலில் நடந்த இனப்படுகொலை தொடர்பில் நடவடிக்கை எடுப்பார்கள் என்று துளியளவும் நம்பமுடியாது.

அப்பாவிப் பிஞ்சுகள் ஒன்றுசேரக் கொன்றுபோடப்பட்ட இந்தக் கொடூர நிகழ்வு உலகெங்கிலும் இருந்த தமிழர் உள்ளங்களை மட்டும் உலுக்கி விட்டிருக்கிறது. ஏனைய நாடுகளுக்கோ மனித உரிமை அமைப்புகளுக்கோ இந்த தாக்குதல் தொடர்பில் மனம் கரையவில்லை. அப்படிபட்ட இந்த சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 13 வருடங்கள் ஆகிவிட்டன.

இந்த தாக்குதல்களுக்கு சர்வதேச நாடுகள் கண்டனங்கள் தெரிவிப்பதோடு அவர்களின் வேலை முடிந்துவிட்டன. தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இவ்வாறான தாக்குதல்கள் தொடர்பில் நீதி கிடைக்கவில்லை என்பதே மக்களின் குற்றச்சாட்டாக உள்ளது. தமிழர் மீதான கொடூரத் தாக்குதல்களும் கோரமான உயிரிழப்புகளும் எம் மனக்கண் முன்னே தற்போதும் ஆறாத சுவடுகளாய் பதிந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்கள், அவயவங்களை இழந்த சிறுமிகளின் நிலைமை தற்போதும் கேள்விக்குறியாகவே இருப்பது மனவேதனையைத் தருகிறது.


செஞ்சோலை இந்த மண்ணில் ஆண்தாயால் உருவாக்கப்பட்ட வாழ்விடமாகும். உலகில் ஆண்தாய் என்று தமிழ் மக்களால் அழைக்கப்பட்ட தலைவரைக் காணாதும் இழந்த அன்றைய நாளை நினைத்தும் பரிதவிக்கின்றது. செஞ்சோலை மாணவிகள் புலிகள் என்று அன்று விமானத்தால் குண்டுபோட்டு அழிக்கப்பட்ட போதே தமிழ் மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போனது. படுகொலை செய்யப்பட்ட மாணவிகளில் பெரும்பாலானவர்கள் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறிக்காக 18 கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் இருந்து தலைமைத்துவ தகமைக்கு தெரியப்பட்டு செஞ்சோலையில் கூடியிருந்த 400 மாணவிகளில் ஒரு பகுதியினரே ஆவார்கள். இப்பயிற்சி நெறி ஆகஸ்ட் 11, 2006 இருந்து 20 ஆகஸ்ட், 2006 வரை நடைபெறுவதாக இருந்தது. இப்பயிற்சி நெறி கிளிநொச்சி கல்வி வலயத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு, "Women's Rehabilitation and Development (CWRD)" நிதி உதவியுடன் செயல் படுத்தப்பட்டது.

இலங்கை அரச பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தாக்கப்பட்ட இடம் புலிகளின் தளம் என்றும், புலிகளால் பலாத்காரமாக சேர்க்கப்பட்ட குழந்தைப் போராளிகள் என்றும் அங்கு சென்று பார்வையிட்ட நடுநிலை அமைபுகள் போர் அனுபவம் அற்றவர்கள் என்றும் வாய்கூசாமல் அன்று கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் சிங்கள அமைச்சர் புலிகளுக்கு எதிரான தாக்குதல் தான் என்று மீண்டும் உறுதிப்படுத்தினார்.

பாடசாலைகள், சிறுவர் அமைப்பு இடங்கள் மீது குண்டுவீச்சு மற்றும் இராணுவ தாக்குதல்களை தவிர்க்க ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க தவறிவிட்டது.

ஆதரவற்ற பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் கூடிய அக்கறை கொண்டவர் தலைவர் பிரபாகரன் என்பதால் தான் செஞ்சோலை சிறுவர் இல்லம் திறக்கப்பட்டது. இங்கே வரும் ஆதரவற்ற பிள்ளைகள் ஆதரவுள்ள ஏனைய பிள்ளைகளைப் போல் சமூகத்தில் வாழ வேண்டும் என்று பிரபாகரன் விரும்பினார். அதனால் தான் இன்றும் அந்த செஞ்சோலை சிறுவர் இல்லம் இயங்குகிறது.





பிரேசில் அதிபர் ஜெயர் போல்சொனாரோ



# ஆபத்தின் விளிம்பில் அமேசன் அடர் காடுகள்

எஸ்.ராஜாராம்

வளர்ச்சி என்ற பெயரில் காடுகள் அழிக்கப்படுவது உலகம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்றாலும், பிரேசில் நாட்டில் அமேசன் மழைக் காடுகள் அழிக்கப்படும் வேகமானதுஉலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

இத்தனைக்கும் அமேசன் மழைக் காடுகளைப் பாதுகாப்பது என்பது கடந்த 20 ஆண்டுகளாக பிரேசிலின் முக்கியமான சுற்றுச் சுழல் கொள்கையாகவே இருந்து வந்தது. மேலும், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான முன்னுதாரணமாகவும் பார்க்கப்பட்டது. ஆனால், கடந்த ஜனவரியில் அந்த நாட்டின் புதிய அதிபராக வலது சாரித் தலைவரான ஜெயர் போல்சொனாரோ (Jair Bolsonaro) பதவிக்கு வந்ததில் இருந்து எல்லாமே தலைகீழாக மாறியது.

“பூமியின் நுரையீரல்” என ழைக்கப்படும் அமேசன் மழைக்காடுகள் ஆண்டுக்கு 200 கோடி தொன் கரியமில் வாயுவை உறிஞ்சிக் கொண்டு, பூமிக்குத் தேவையான மொத்த ஓட்சிசனில் 20 சத வீதத்தை வெளிவிடுகின்றன. தென் அமெரிக்காவின் அமேசன் ஆற்றுப் படுகையில் அமைந்துள்ள அமேசன் மழைக் காடுகள், 70 லட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டவை.

பிரேசில், கொலம்பியா, பெரு, வெனிசூலா, ஈக்குவடோர், கயானா, பொலிவீயா, சுரிநாம், பிரெஞ்சு கயானா ஆகிய ஒன்பது நாடுகளில் அமேசன் காடுகள் பரவியிருந்தாலும் இதன் 60 சத வீதப் பரப்பளவு பிரேசில் நாட்டில்தான் காணப்படுகிறது. இந் நிலையில் பிரேசிலின் புதிய அதிபராகப் பதவியேற்ற ஜெயர் போல்சொனாரோ (Jair Bolsonaro) நாட்டின் முன்னேற்றத்திற்காக அமேசன் மழைக்காடுகளின் சில பகுதிகளை அழித்து வணிகப் பயன்பாட்டுக்கு விடப்படும் என அறிவித்தார். அதிலிருந்தே அமேசன் காடுகள் அழிப்பு வேகமெடுக்கத் தொடங்கியது.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஜூலையுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டு ஜூலையில் காடுகள் அழிக்கப்படுவது 278 சத வீதமாக அதிகரித்திருக்கிறது. அதாவது கடந்த ஜூலையில் மட்டும் 2,253 சதுர கி.மீ கடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அதாவது ஒரு நிமிடத்துக்கு மூன்று கால்பந்து மைதானம் அளவுக்கு வனப் பரப்பு அழிக்கப்படுகிறது. பிரேசிலின் அரசு நிறுவனமான தேசிய வானிலை ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட செயற்கைக் கோள் படங்கள் மூலம் இது தெரியவந்தது.

ஆனால், இதை மறுத்த அதிபர் ஜெயர் போல்சொனாரோ வானிலை ஆராய்ச்சி மையத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, காடுகள் அழிப்பைக் கண்காணிப்பதற்குத் தனியார் அமைப்பு ஒன்றை ஈடுபடுத்தப் போவதாகத் தெரிவித்தார். அரச அமைப்பு ஆதாராபூர்வமாகத் தெரிவித்த தகவலையே பொய் என்றும், அரசு சாரா நிறுவனங்களுக்காக (N.G.O) வானிலை ஆராய்ச்சி மையம் இதைச் செய்துள்ளதாகவும் அதிபர் கூறுவதை உலகம் நம்பத் தயாராக இல்லை.

தேர்தலின்போது அதிபர் ஜெயர் போல்சொனாரோ வளர்ச்சியைச் சுட்டிக்காட்டி அமேசன் காடுகள் மீது “கை வைக்கப் போவதை” வாக்குறதியாகவே அளித்தார்.
அதன்படி அதிபராகப் பதவியேற்றதுமே நாட்டின் பிரதான சுற்றுச் சூழல் கண்காணிப்பு நிறுவனத்துக்கு அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியை 24சத வீதம் குறைத்தார். அமேசன் மழைக் காடுகளுக்குள் அத்துமீறுபவர்களுக்கான அபாராதம், எச்சரிக்கை, பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட கருவிகள் இருந்தால் பறிமுதல் செய்தல், ஆகிய நடவடிக்கைகளையும் அரசு மீளப் பெற்றது. இது வன ஆக்கிரமிப்பாளர்களுக்கும்,கனிம வளக் கொள்ளையர்களுக்கும் ஊக்கம் அளிப்பதாக அமைந்துவிட்டது.

அதிபர் ஜெயர் போல்சொனாரோ இப்படி எல்லாம் செய்வார் எனச் சுற்றுச் கூழல் ஆர்வலர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் இத்தனை வேகமாகச் செய்வார் என எதிர்பார்க்கவில்லை. அமேசன் காடுகள் அழிக்கப்படுவது பற்றிப் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானும், ஜேர்மனியப் பிரதமர் அஞ்சலா மெர்க்கலும் அண்மையில் அண்மையில் நடைபெற்ற ஜி 20 நாடுகள் கூட்டத்தின்போது கவலை தெரிவித்தபோது அவர்களுக்கு எதிராகப் பாய்ந்தார் ஜெயர் போல்சொனாரோ (Jai Bolsonaro)

“பிரேசிலின் புதிய அரசியல் மாற்றம் பற்றி இந்தத் தலைவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. இப்போதுதான் வலிமையானதொரு தலைவர் பிரே சிலுக்குக் கிடைத்துள்ளார்” என ஜெயர் போல்சொனாரோ தன்னைத்தானே பெருமையாகக் கூறிக் கொண்டதை உலகம் இரசிக்கவில்லை. " எங்கள் நாட்டின் பெரும்பகுதியை வெறுமனே பாதுகாக்கும்படி உலக நாடுகள் கூறுவது நாங்கள் முன்னேறிவிடுவோமோ? என்ற அச்சத்தினால்தான். உலகம் எங்களுக்டகு எதிராகச் செய்கிழன்ற சதியின் ஒரு பகுதியே இது” என அதிபர் கூறும் விளக்கத்தையும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இல்லை. பருவ நிலை மாற்றத்தினை உணர்ந்து, சுற்றுச் சூழலைக் காப்பதற்கான நடவடிக்கைகளை இப்போதுதான் உலக நாடுகள் வேகப்படுத்தி இருக்கின்றன.

இந்த வேளையில் உலகின் மிகப் பெரிய மழைக் காடுகளை அழிக்கும் பிரேசிலின் இந்த நடவடிக்கை வெறும் மரங்களை அழிப்பதோடு மட்டும் முடிந்துவிடாது. அரிய உயிரினங்கள் . அமேசன் காடுகளில் வாழும் அபூர்வப் பழங்குடி மக்களுக்கும் ஆபத்தாக மாறியிருக்கிறது.

அரசின் நடவடிக்கைகளால் ஊக்கம் பெற்றுள்ள கனிம வளக் கொள்ளைக் கும்பல் மற்றும் ஆக்கிரமிப்பாளர்களினால் பழங்குடி மக்கள் கொல்லப்படுவதாக வெளியாகும் தகவல்களும் கவலை தருகிறது. பிரேசில் மீது ஐக்கிய நாடுகள் சபை மற்றும் வல்லரசு நாடுகளின் கவனம் திரும்ப வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

முன்னாள் இராணுவ அதிகாரியான தற்போதைய பிரேசிலின் அதிபர் ஜெயர் போல்சொனாரோ அவர்களுக்கு “அவர் புரியக் கூடிய பாஷையில்” விளக்கிச் சொல்வதற்கும் அமெரிக்க உள்ளிட்ட வல்லரசுகள் தயங்கக் கூடாது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

“அமேசன் காடுகள் உங்களுடையதல்ல, எங்களுடையது” எனக் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிரேசில் நாட்டு அதிபர் ஜெயர் போல்சொனாரோ கூறியிருக்கிறார்.

அமேசன் காடுகள் உங்களுடையதுதான். ஏற்றுக் கொள்ளுகிறோம்.அமேசன் அழிந்தால் உலகம் அழியும். உலகம் அழிந்தால் பிரேசில் மட்டும் பிழைத்திருக்குமா, என்ன?


ஆபத்தில் இருப்பது அமேசன் அடர் காடுகள் மட்டுமல்ல, எமது நாட்டிலும் வட பகுதிக் காடுகளும்தாளன். அவை தினம் தினம் வெட்டப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்ற இந்தத் தருணத்தில் அமேசன் காடழிப்புப் பற்றிய பின்வரும் கட்டுரையைக் கண்டபோது
அதனை எமது வாசகர்களுக்குத் தருவது பொருத்தமானதும், காடுகளின் முக்கியத்தை உணர்த்தவல்லதும் என்று கருதினோம். எனவே இந்தக் கட்டுரையை வாசிப்பதோடு நிறுத்திக் கொள்ளாது காடுகளைப் பாதுகாக்கக் கூடிய முயற்சியை உங்கள் மட்டத்திலிருந்தே தொடருங்கள்? நாடு வளம் பெறும்.

தற்பொழுது எமது நாட்டிலும் வேகமாக அடர் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான காடுகள் வட இலங்கைப் பகுதியிலேயே காணப்படுகின்றன. எனவே தமிழர்களின் குடிப்பரம்பலைக் குறைப்பதற்காகத் தமிழர்கள் வாழும் பிரதேசங்களுக்கு இடையே சிங்களக் குடியேற்றங்களைச் செருகுவதற்கு காட்டு நிலப்பரப்பை அரசு தேர்ந்தெடுத்திருக்கின்றது. இலங்கையை ஒரு சிங்கள பௌத்த தேசமாக உருவாக்குவது என்ற கொள்கையின் அடிப்படையில் அரச பொறிமுறை மறைமுகமாக இயங்குவதால், காடு அழிப்பு என்ற விடயம் மக்களுக்குப் பெரிதாகத் தென்படவில்லை என்பது தான் வருத்தத்திற்குரிய விடயம்.

இப்படியே காடுகள் அழிக்கப்பட்டு நிலத்தடி நீரைச் சேகரிக்கின்ற இயற்கையின் இயல்பை இல்லாது செய்வோமானால் அத்தகைய நிலங்களிலே குடியமர்தப் பட்ட, குடியமர்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது குடியமர்த்தப்படப்போகும் மக்களும் நீருக்காகப் பிச்சை எடுக்க வேண்டிய நிலை வரும் என்றதில் எதுவித ஐயமுமில்லை. அவ்வாறு, எந்தவித தொலை நோக்குப் பார்வையும் இல்லாது முன்னெடுக்கப்படுகின்ற இது போன்ற திட்டங்கள் பயனற்றுப் போய்விடும் என்றதில் எந்த வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என்று எண்ணுகிறேன்.

# வேலியிடப்பட்ட குடும்பங்கள்

## எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 12



பாமா

அ.ராமசாமி

"அதாவது ஊர்ல ஒரு பழமொழி சொல்வாகளே..."

"என்ன பழமொழி?"

"வெயிலுக்குப் பயந்துக்குட்டு வெந்நிப் பானைக்குள்ள விழுந்தது கணக்கா."

கனியம்மா கம்முனு இருந்தா.

கனியம்மா இந்தநிலைக்கு ஏன் வந்தால் என்பதே கதை. கனியம்மாவும் அவளது கணவன் மலையப்பனும் ஒன்றாக இல்லை் தனித்தனியாகவே வாழ்கிறார்கள் எனத் தொடங்கும் கதையின் ஒரு முடிச்சாக அமைவது மலையப்பனுக்கு வந்த அந்த நோய். அவனது சிறுநீரகங்கள் பழுதடைந்ததால் உடல் குறுகி, நடக்க முடியாமல் ஆஸ்பத்திரியில் கிடக்கிறான்.

"அவருக்கு கிட்னி பெயிலாப் போச்சாம். அத்தோட கொடலு வேற கீழாமெ எறங்கிப் போச்சாம். அதென்னமோ எரனியாவும்ல? அந்த நோயும் வந்துருக்காம். பொழைக்குறது கஸ்டமாம். ஒன்னுக்கே போகலன்னா எப்பிடிக்கூடி பொழைக்க முடியும்? அந்தண்ணனப் பாத்தாப் பாவமா இருக்கு. டவுனு ஆஸ்பத்திரின்னு சொன்னாக. ஆனா எந்த ஆஸ்பத்திரின்னு தெரியல. அந்தக்கா கனியம்மாதான் கூடப்போயிருக்காக. வேற யாரு போவா? அவுக போகாட்டி இந்த ஊரு ஒலகம் அவுகளச் சும்மா உட்டுருமா?" கேள்வி யோட முடுச்சா சந்திரா.

"இந்த பத்து வருசுமா அவுகென்ன புருசம் பொண்டாட்டியாவா இருந்தாக? அந்தக்கா அந்தாள உட்டுட்டு தனியாத் தானெ கெடந்தாக. ஊரில் உள்ள அனைவரும் போய்ப் பார்க்கிறார்கள். ஆனால் கனியம்மா போய்ப் பார்க்கவில்லை.

"அதெப்பிடி பழசெல்லாம் ஒடனே சட்டுனு மறந்து போக முடியும்? கனியம்மா அவா புருசனப்பத்திச் சொன்னதை எல்லாம் இப்ப நெனச்சுப் பாத்தாலும் அந்தாளச் சாவடிக்கனும்னுதான் தோணும். கலியாணமாகி மொதல் நாளுலருந்தே அவா யாருட்டப் பேசுனாலும் சந்தேகம். அசிங்க அசிங்கமா பேசி அடிதடி. கால்காசு சம்பாதிச்சு கொண்டாந்து குடுக்காட்டாலும், இவா எதுனாச்சும் கூலி வேல செஞ்சு வாங்குற காசையும் புடுங்கிட்டுப் போயி ஊத்திக்கிட்டு வந்து மாட்ட அடிக்கிறமாதிரி அடிச்சு தொவச்சு எடுப்பான். அவங்கூட வாழ்ந்த சாட்சிக்குப் பெறந்தது ஒரு பொம்பளப் பிள்ளை. அதக்கூட யாருக்கோ பெத்தான்னு வாய் கூசாமச் சொல்லி அடிப்பான். அந்தப் பிள்ளையையும் அவதான் வளத்து, ஆளாக்கிட்டு வாரா. கண்ணெதுர இம்புட்டையும் பாத்த இந்த பொம்பளைகளே இப்பிடிச் சொல்றாகளே.

இவளுக வாயிக்குப் பயந்து தான் அவா போயிருப்பா. சே. எப்பிடித்தான் மனச கல்லாக்கிட்டு போறது? அந்தாளு மொகத்துல முழுச்சு, அவங்கூட இருந்து அவனுக்குப் பணிவிடை செய்றது? அவனுக்கு அதுக்கு என்ன தகுதி இருக்கு? இப்பிடியே இந்தாளு செத்துப் போனாக்கூட அவா என்னைக்கும் நிம்மதியா இருந்துட்டுப்போவா. இந்த மஞ்சக் கயத்த ஒன்னக் கட்டிட்டுத்தான காலம்பூராம் கொத்தடிமைக் கணக்கா இருக்க வேண்டியதா இருக்குது."

காரணங்களும் காரியங்களும் சலிப்பும் வெறுப்பும் கொண்ட கனியம்மா மலையப்பனைப் போய்ப் பார்க்காமல் இருந்தாள். அப்படிப் போகாமல் இருக்கும் கனியம்மாவின் நிலைபாட்டை மனதிற்குள் பாராட்டவும் செய்கிறாள் கதைசொல்லியான அந்தப் பெண். கதைசொல்லியின் நினைப்புக்கு மாறாகக் கனியம்மா மலையப்பன் இருந்த ஆஸ்பத்திரிக்குப் போய் அவன் அருகில் இருந்து தேவையான உதவிகளைச் செய்திருக்கிறாள். ஆபரேசன் செய்து ஊர் திரும்பியபின் மலையப்பனைப் பார்க்கச் செல்கிறார்கள் ஊரார். கதைசொல்லியான பெண்ணும் அங்கே செல்கிறாள். போகும்போதுதான் அவளுக்குத் தெரிகிறது கனியம்மா தான் கணவனோடு இருந்து உதவுகிறாள் என்ற விவரம். இதனால் கனியம்மாவைப் பற்றிய அவளின் எண்ணங்கள் சிதறிப்போகின்றன. இதெப்படி நடந்தது என்ற கேள்விகள் அவளது மனதிற்குள் எழும்பிக் கொண்டே இருக்கின்றன.

"கனியம்மாள வீட்டுல காணுமே. எங்க போயிட்டா? நானும் அவளப் பாக்கனும் பாக்கனும்னு இருக்கேன். பாக்கவே முடியலையே..."

"அந்தக் கொடுமைய ஏங்கேக்குற. அவாள்ளாம் ஒரு பொம்பளையா? அவன அறுத்து, தச்சுக் கொண்டாந்து போட்டுட்டு ஒடனே கெளம்பிப் போயிட்டாளாம். இங்ன இருந்து கொஞ்சம் ஒத்தாசையா இருக்கலாம்ல? வந்ததும் வராததுமா ஓடிப் போயிட்டா."




"யாருக்கு ஒத்தாசை?"

"யாருக்கா? அவா புருசனுக்குத்தான். கட்டுன பொண்டாட்டிக்கு அக்கர வேண்டாமா?"

"அதான் வீட்டுல அவுகம்மெ இருக்கா. அவனோட அண்ணந் தம்பி, அக்கா, தங்கிச்சின்னு அம்புட்டுப் பேரும் இருக்காகள்ள. பின்ன என்ன? அம்புட்டுப் பேரு இருக்கைல இவா என்னத்துக்கு? இவ்வளவு தூரம் செஞ்சதே பெரிய காரியம். நானா இருந்தா ஆஸ்பத்திரிக்கே போயிருக்க மாட்டேன். இப்ப கனியம்மா எங்க போயிட்டாளாம்?"

கனியம்மாளின் இடத்தில் தன்னை வைத்துப் பேசும் கதை சொல்லியின் நிலைபாட்டை நிலைகுலையச் செய்த அந்த நிகழ்வு நினைவுக்கு வருகிறது. கணவன் இல்லையென்றால் தலையில் பூ வைக்கும் உரிமையைக் கூட வழங்காத சமூகம் இது. கனியம்மாவைக் குறித்தே அவளைச் சுற்றியிருப்பவர்கள் அப்படித்தான் பேசினார்கள். ஆனால் கனியம்மா அதைத் தைரியமாகச் சமாளித்தவள் என்பதும் இவளுக்குத் தெரியும்.

ஒரு கலியாணத்துல கனியம்மா தலைல பூ வச்சதுக்கே எவளோ சாடமாடையாச் சொன்னாளாம், 'புருசன் வேண்டாமாம் ஆனா பூ மட்டும் வேணுமாம்'. கனியம்மாளும் சும்மா உடல. பதுலுக்கு நல்லாச் சொல்லியிருக்கா, 'பூவு நானு சின்னப் புள்ளையா இருக்கைல இருந்து வச்சுட்டு வாரேன்ஙீ புருசன் இப்ப எடவழில வந்தவன்."

அப்படித் தைரியத்தை வெளிப்படுத்திய கனியம்மாவின் இன்னொரு நியாயம் - இந்தச் சமூகத்திற்குப் பயந்தே ஆகவேண்டிய நியாயம் இருக்கவே செய்கிறது. அதனால் அவள் சொல்கிறாள்

"சாகட்டும்னு சொல்ற. பெறகு ஏம்போயிக் காப்பாத்துன?"

"சத்தியமாச் சொல்றேன். இத உங்கிட்ட தான் சொல்லமுடியும். மத்தவுக கிட்டச் சொல்லமுடியாது. இதுதான் உண்மெ. அவெம் பொழச்சு எந்துருச்சு வரனும்னு எனக்குத் துப்பரவா ஆசையே கெடையாது. ஆனா ஒன்னே ஒன்னுமட்டுந்தான் ஏம்மனசுக்குள்ள ஓடுச்சு" ஏங்காதோரம் மெதுவாச் சொல்லிட்டு நிப்பாட்டுனா.

"என்னது?"

"என்ன தெரியுமா? இவஞ்செத்துப் போனாம்னா, இந்த ஊரு ஒலகத்துல எனிய முண்டச்சின்னு சொல்லி, எந்த ஒரு நல்ல காரியத்துலயும் பங்கெடுக்க உடாமெ ஒதுக்கி வச்சிருவாங்களேஙற எண்ணந்தான் என்னைய வேதனப் படுத்துச்சே தவுர, வேறெத்த கவலையும் எனக்கில்ல."

சமூகத்தில் ஒவ்வொருவரின் இருப்பையும் தீர்மானிப்பதில் அவரவரின் நியாயங்கள் மட்டுமே காரணிகளாக இருப்பதில்லை. சமூகத்தின் ஏற்பும் ஒதுக்குதலும் காரணிகளாக இருக்கின்றன. இவை மட்டும் இல்லையென்றால் விடுதலை வேட்கையும் போராட்டங்களும் இருக்கப்போவதில்லை. அவரவர் வாழ்க்கையை அவரவர்கள் வாழ்ந்து விடுவார்கள். அப்படி வாழ விடாமல் தடுப்பன சமூகத்தின் விதிகளே. மனிதர்களை ஒடுக்கிப் பரவசம் அடையும் சமூக விதிகளை மீறுவதின் முன்னெடுப்புகளே விடுதலையின் பாடுகளாக இருக்கின்றன. முண்டச்சி எனப் பட்டம் சூட்டித் தள்ளி வைக்காது இந்த சமூகம் என்பது உறுதியானால் கனியம்மாக்கள் ஏன் மலையப்பன்களின் அடாவடித்தனத்தையும் அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்.

## வீசப்படும் சாணியும், பூசப்படும் சந்தனமும்

பொது வாழ்க்கைக்கு வந்துவிட்டால் ஒரு சிறப்பான மனநிலை தேவை அதே போல், ஒரு கொலனித் தலைவர் ஆகட்டும், ஒரு கலையைச் சொல்லித்தரும் ஆசிரியர் ஆகட்டும், ஒரு பொது அமைப்பின் நிர்வாகி ஆகட்டும், ஒரு சாங்கத்தின் தலைவர் ஆகட்டும், குடும்பத் தலைமைப் பொறுப்பு வகிக்கும் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும் இவர்களுக்கும் ஒரு தனிமனநிலை மிக அவசியம்.

தோட்டத்தில் இருக்கும்வரை ஒரு கத்தரிக்காயை எவரும் விமர்சனம் செய்யப்போவதில்லை. ஆனால் அது விற்பனைக்கு என்று வந்துவிட்டால் நான்கு பேர் நான்கு விதமான குறைகளைச் சொல்லத் தான் செய்வார்கள்.

ஓர் அலுவலகத்தில் வேலை பார்க்கிற ஒரு பெண், "நீ சரிவர ரைப் செய்யவில்லை" என்று யாரிடமேனும் வாங்கிக் கட்டிக்கொண்டால், உடனே உம்மென்று ஆகிவிடுகிறாள். வேறு ஒரு பெண் கண்கலங்க ஆரம்பித்து விடுகிறாள். சில பெண்கள் பலமணி நேரம்வரை அடக்கி வைத்திருந்து, வீட்டுக்குப் போய் தனிமையிலோ பிரியத்துக்குரியவரிடமோ குமுறிக் குமுறி அழுகிறார்கள்.

ஆண்கள் சிலரோ, அதைக் கோப மாக உருமாற்றி மற்றவர்களிடம் வெளிப்படுத்துகிறார்கள். வீட்டிலேயே அடைந்து கிடந்தால் யாரும் எதுவும் சொல்லப் போவதில்லை தான். ஆனால் சம்பளம் கொடுப்பவர்களும், வேலை வாங்குபவர்களும் சும்மா இருப்பார்களா? ஆதிக்க மனநிலையுடன் பேசத்தான் செய்வார்கள். இதையெல்லாம் கேட்டுக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். என்ற நிர்ப்பந்தம் OBLIGATION நிலையில் உள்ள ஒவ்வொருவருக்கும் உள்ளது.

ஒரு நல்ல காரியத்தில் ஈடுபடும் போதோ, ஓர் அமைப்பில் கௌரவ தலைவராகச் செயற்படும் போதோ, பல சமயங்களில் பலரது விமர்சனத்துக்கு ஆளாக நேரிடுகிறது.


"எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் ஈடுபட்டேன். பணம் வசூலித்தேன். கோயில் கட்டினேன். ஆனால் கடைசியில் எனக்கு மிஞ்சியது கெட்ட பெயர் தான்" என்று என்னிடத்தில் மிகவும் வேதனையுடன் பேசினார் ஒருவர்.

"எதை எதிர்பார்த்து இதில் இறங்கினீர்கள்? மனத்திருப்திக்குத் தானே? உங்கள் மனச்சாட்சி வரை உங்களுக்கு திருப்தி இருந்தால் போதும், மற்றவர்களின் பாராட்டை அளவுக்கு அதிகமாக எதிர்பார்த்ததால் வரும் கோளாறு இது. உங்களின் கைச்சுத்தத்தையும் மனச்சுத்தத்தையும் வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பம் வாய்க்கும். அதுவரை பொறுமையாக இருங்கள்" என்றேன்.

வீசப்படும் சாணியையும், பூசப்படும் சந்தனத்தையும் பெரிய ஞானிகளைப் போல் இல்லாவிட்டாலும் ஓரளவேனும் சமமாகப் பாவிக்கும் மனநிலை வெளியுலகுக்கு வெளிப்படும். இது ஒவ்வொருவருக்கும் அவசியம்.

மிகவும் கடினம் என்றாலும், இதை மெல்ல மெல்ல வளர்த்துக் கொள்ளத்தான் வேண்டும். குதிரை,கழுவாளம் என்றால் வாயை மூடிக்கொள்ளுமாம். கொள்ளு என்றால் வாயைத் திறக்குமாம். எப்படி இருக்கிறது கதை?

இந்தக் கதையால் பாராட்டு என்றால் பரவசப்படுவேன். திட்டு என்றால் சோகப் போர்வையைப் போர்த்திக் கொள்வேன் என்று சொல்வது சற்றும் சரியல்ல. இத் தகையவர்கள் வெளியுலக வெளிப் பாட்டுக்கு இலாய்க்கு இல்லாதவர்கள்.



# யானைகளின் கால்களுக்கும் கேட்கும் சக்தி உண்டு...!

ராஜேஸ்

பார்க்கப் பார்க்கத் திகட்டாத சலிக்காத பொருள் ஒன்று உண்டென்றால் அது இயற்கைதான். ஒரே காட்சியை தினமும் - நிமிடத்துக்கு நிமிடம் ஏன் வினாடிக்கு வினாடி வித்தியாசமாக மாற்றி எம்மை தன் வசப்படுத்தி விடும் இயற்கை. இந்த இயற்கையின் ஒவ்வொரு படைப்பும் அழகும் அற்புதம் நிறைந்ததும். இதில் முக்கியமானது யானை.

யானை பார்க்கப் பெரிய உருவம்தான். ஆனால் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அத்தனை பேரையும் கவர்ந்துவிடும். பண்டைய காலம்தொட்டே மனிதர்களுடன் தொடர்புபட்ட விலங்குகளில் ஒன்று.

மன்னர் காலத்தில் யானைகளையும் படைகளில் இணைத்துக் கொண்டார்கள். இன்றைய போரில் டாங்கிகளுக்கு இருக்கும் முக்கியத்துவத்துக்கு இணையாக அன்றைய போரில் யானைகள் பயன்படுத்தப்பட்டன. மன்னர்களும் ராணிகளும் யானைகளில் பவனி வருவதை சிறப்பானதாகக் கருதினார்கள். மன்னர்கள் யானைகளுக்கு உயரிய மதிப்பளிக்கும் விதமாக "பட்டத்து யானை" வைத்திருந்தான். பட்டத்து யானையின் கம்பீரமும் மதிப்பும் மன்னர்களுக்குள் போட்டியாகவும் பார்க்கப்பட்டது.

இவ்வாறு சரித்திரகாலம் முதலே மனிதர்களுடன் தொடர்புபட்ட யானைகள் பற்றி எமக்குப் பல விடயங்கள் தெரிந்திருந்தாலும் எமக்குத் தெரியாத விடயங்களும் ஏராளம் உண்டு.

### யானைகள் அழுமா?

அன்று தொடக்கம் இன்று வரை ஒரு புரியாத புதிராக நடக்கும் விவாதங்கள் பல உண்டு. அதுபோல் யானை பற்றிய விவாதங்களில் யானைகள் அழுமா...? சிரிக்குமா...? என்ற விவாதம் இன்றுவரை ஓயவில்லை. ஆனால்... யானைகள் அழும் என்பதற்கு உதாரணங்கள் நிறையவே உண்டு.

இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் சர்க்கஸ் நிறுவனம் ஒன்று 50 ஆண்டுகள் ஒரு யானையை வைத்து சாகசங்களை செய்வித்தனர். சாகசங்களை செய்விப்பதற்காக அவர்கள் அந்த யானையை கொடூரமாக சித்திரவதைகளுக்கு உட்படுத்தினர். பட்டினி போட்டார்கள் - அதன் மென்மையான பகுதிகளில் காயங்களை ஏற்படுத்தினார்கள். வனவிலங்கு அதிகாரிகள் அந்த யானையை மீட்டபோது அந்த யானை அழுது புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யானைகள் குறித்து ஆராய்ச்சி செய்த அமெரிக்காவின் கொலோராடா பல்கலைக்கழகப் பேராசிரியர் மார்க் பெர்கோவ் "யானைகளை ஆராய்ச்சி செய்யும்போது அவை உணர்ச்சி பொங்க அழுதன. யானை தவிர பிற விலங்குகளும் அழும்" என 'லைற் சைன்ஸ்' என்ற பத்திரிகையில் பதிவு செய்துள்ளார்.

யானைகள் கம்பீரமானவைதான் உறுதியானவைதான் ஆனால் அவற்றுக்கும் பலவீனங்கள் உள்ளன. முக்கியமாக அவற்றின் தோல் தடித்தது என்றாலும்கூட சூரிய வெப்பத்தை அவற்றால் தாங்க முடிவதில்லை. இதனால்தான் கோடை காலத்தில் அவை தங்கள் மீது புழுதியை வாரி இறைக்கின்றன.

குட்டிகள் மீது சூரிய ஒளி படாதிருக்க அவற்றைத் தங்கள் கால்களுக்கு இடையிலேயே வைத்துக் கொள்ளும். குட்டிகள் தூங்கும்போது தாய் யானைகள் சூரிய ஒளி அவற்றின் மீது படாதவாறு மறைப்பாக நின்று கொள்ளும்.

நம் நாட்டின் மிருகக்காட்சி சாலையில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் சாந்தி என்ற யானை இருந்தது. அந்த யானை மற்ற யானைகள் போன்று தனது முதுகை மறைக்கவில்லை. வெயிலுக்காக மரநிழலை நாடவும் இல்லை. இதனால் அதன் முதுகில் கொப்புளங்கள் தோன்றி பெரும் துன்பப்பட்டது என அதைப் பராமரித்தவர் பதிவு செய்துள்ளார்.

### புத்திக்கூர்மைமிக்க யானைகள்

யானைகள் புத்திக்கூர்மைமிக்க விலங்குகள் என்று பலரும் சொல்கிறார்கள். அதுவும் ஆசிய யானைகள் மற்ற யானைகளையும் விட புத்திசாலிகள். இவை கணிக்கும் திறனைக்கூட பெற்றிருந்தன என்கிறது ஓர் ஆய்வு. ஜப்பானின் எனோ மிருகக்காட்சிசாலையில் யானைக்கு கணிதப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கணனி தொடுதிரையில் 0 இல் இருந்து 10 வரை பல அளவுகள் கொண்ட பழங்களின் படங்கள் அந்த யானைக்கு காட்டப்பட்டது. அது அதிக பழங்கள் கொண்ட படத்தைத் தெரிவு செய்தது.பழங்களின் எண்ணிக்கை மாற்றப்பட்ட படங்களை காண்பித்தபோதும்கூட அதிக பழங்கள் கொண்ட படத்தையே அந்த யானை தெரிவு செய்தது.

தங்கள் குடும்பத்தில் யாராவது இறந்தால் அந்த இடங்களை யானைகள் சரியாக நினைவில் குறித்துக் கொள்ளும். அடிக்கடி அந்த இடத்தில் போய் நின்று அந்த இடத்தையே சுற்றி வரும். உலகப் புகழ்பெற்ற காட்டுயிர் புகைப்படவியலாளர் ஜோன் சொனி காட்டுக்குள் சென்றபோது, இறந்த யானையின் எலும்புக்கூடுகளை கண்டார். அதைப் புகைப்படம் எடுக்க முயன்றபோது, யானை ஒன்று வருவதைக் கண்டு மறைவாக இருந்தார். அங்கு வந்த யானை எலும்புக்கூட்டை சுற்றி வந்து தன் மரியாதையை வெளிப்படுத்தி சிறிது அங்கேயே நின்றுவிட்டு பின் திரும்பிச் சென்றது. யானை செலுத்திய அஞ்சலியை படம் எடுத்த அவர் தன் புத்தகத்தில் பதிவிட்டிருந்தார்.

யானைகளுக்கும் றொக் ஹைரக்ஸ் எனப்படும் மிகச்சிறிய விலங்குக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஆபிரிக்க, மத்திய கிழக்காசிய நாடுகளில் வசிக்கும் உரோமம் அடர்ந்த ஹைரக்ஸ் விலங்கு எப்படி யானையுடன் தொடர்புபடும் என்ற கேள்விக்குப் பரிணாம வளர்ச்சியை பதிலாகக் கூறுகிறார்கள் அவர்கள். காரணம், மனரீ, றொக் ஹைரக்ஸ் என்ற இரு விலங்குகளின் குணங்கள் யானைகளின் குணங்களுடன் ஒத்துப் போகின்றன. அதுமட்டுமல்ல இந்த விலங்குகளுக்கு வளரும் தந்தங்கள், இனப்பெருக்க உறுப்புகள் என்பவற்றிலும்கூட ஒற்றுமைகள் உள்ளன என்கிறார்கள் ஆய்வறிஞர்கள்.

### மூத்தோரை மதித்தல்

யானைகள் எப்போதுமே தங்கள் மூத்தோரைச் சார்ந்தே நடக்கும். மூத்தவர்களுக்குத்தான் ஆபத்தானது எது, சரியானது எது என்று தெரியும். அதனால் மூத்தோர் தனது கூட்டங்களுக்குள் இருக்கும் வரை யானை அவற்றின் வழிநடத்தலின்படிதான் பயணிக்கும் - செயற்படும். இதேபோல மூத்த யானைகள் தங்களின் அறிவுகளையும், அனுபவங்களையும் இளைய யானைகளுக்குக் கற்றுக் கொடுக்கும்.

யானைகள் எப்போதும் குடும்பத்துடனேயே இணைந்து வாழும் தன்மை கொண்டவை. பொதுவாக பாட்டி யானைகள்தான் குடும்பத்தை வழிநடத்தும். யானைகள் அபரிமிதமான ஞாபகசக்தியை கொண்டவை. இதனால் எப்போதுமே தனது குடும்பத்தை அவை இழப்பதில்லை. குட்டியானை வழிதவறினால் அல்லது ஆபத்தில் சிக்கினால் அதன் பிளிறல் தாய் யானைக்கு இலகுவாக விளங்கிவிடும்.

தனது குடும்பத்தில் யாராவது இறந்தாலோ அல்லது தனிமைப்படுத்தப்பட்டாலோ அதிக மன உளைச்சலுக்கு உள்ளாகும். மிருகக்காட்சி சாலைகளில் தனியாக வைக்கப்பட்ட யானைகள் மனஅழுத்தம், அதனால் ஏற்படும் மரண அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன என்கிறார்கள் ஆய்வாளர்களான பிரட்ஷா, லொறின் லிண்டர் ஆகியோர்.

### நீச்சலடிக்கும் யானைகள்

யானைகளின் உருவத்தைப் பார்ப்பவர்கள் யானைகள் நீந்தும் திறன் படைத்தவை என்றால் நம்பமாட்டார்கள். ஆனால், யானைகள் தங்களின் விசாலமான உடலை தண்ணீரில் அசாத்தியமாக மிதக்க வைக்கும் திறன் படைத்தவை. கால்களை உதைத்து நீச்சலடிக்கும் வல்லமை கொண்டவை. ஆழமான நீர்ப்பரப்பை நீந்தியே கடக்கின்றன.

யானைகளுக்கு காதுகளால் மட்டுமல்ல காதுகளாலும் கேட்க முடியும். இதனால் அதிக விழிப்புணர்வை கொண்டுள்ளன. யானைகளின் பாதங்கள் அதிர்வுகளை மட்டுமல்ல குரல்களின் அதிர்வுகளையும் உணர முடியும். இவ்வாறு உணர முடிந்த அதிர்வை அவை செய்திகளாக விளங்கிக் கொள்கின்றன என கலிபோர்னிய பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

### மொழிகளும் யானைகளும்

யானைகள் மனிதர்கள் பேசும் மொழியை விளங்கிக் கொள்ள முடியும். மனிதர்களின் வெவ்வேறு மொழிகளை அவை விளங்கிக் கொள்கின்றன. மனிதர்களையும் வேறுபடுத்தி அறியக்கூடிய அவற்றால், ஒரு மனிதனின் குரலை வைத்து பாலினம், வயது என்பவற்றைக்கூட அடையாளப்படுத்த முடியும் என்கிறது ஓர் ஆய்வு.

யானைகள் எப்போதுமே எதிரியையும், நண்பனையும் மறப்பதில்லை. யானைகள் மற்ற யானைகளையும், தனி மனிதர்களையும் பல ஆண்டுகளாக நினைவில் வைத்திருக்கும். பல ஆண்டுகள் கழித்துப் பார்த்தாலும் அடையாளம் கண்டுவிடும்.

# ஊடுருவி உலகநாதன்



ஒவ்வொரு பிள்ளையும் கல்வி கற்பதற்கான உரிமை உலகளாவிய ரீதியில் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியலமைப்பில் கூட கல்விக்கான உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வடிப்படை வசதியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை இந்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தானது. உலகளாவிய ரீதியில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பல வடிவங்களில் முறைமைப்படுத்தப்பட்டிருக்கிறது. உலகின் சில நாடுகளிலேதான் இலவசக் கல்வி முறைமை நடைமுறையில் காணப்படுகிறது. ஒரு சில ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பக்கல்விப் பாடசாலை மாணவர்களுக்கு இலசவக் கல்வி முறைமை உள்ளபோதிலும் இடைநிலைப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவ்வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அவர்கள் கொடுப்பனவு செலுத்தியே கல்வி கற்கும் நிலை காணப்படுகிறது. இருந்த போதிலும், ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை இலவசமாக வழங்கும் பிரேசில், மொறிசியஸ் போன்ற விரல்விட்டு எண்ணக் கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கையும் திகழ்கிறது என்ற பெருமை இலங்கைக்கு இருந்தாலும் இந்தப் பெருமை இன்னும் எத்தனை வருடங்கள் இருக்கப் போகின்றன என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஏனெனில் இலவசக் கல்வியை வழங்கும் அரச பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு பணம் வசூலிக்கப்படுகிறது.

இலங்கை ஏறக்குறைய 2300 வருடங்களுக்கு முற்பட்ட கல்வி வரலாற்றைக் கொண்டதொரு நாடாகக் காணப்படுகிறது. இருப்பினும், 1836ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கோல்புறூக் ஆணைக்குழுவின் ஊடாக பாடசாலைக் கல்வி முறைமை என்ற நவீன கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட முதலாவது பாடசாலையாக கொழும்பு றோயல் கல்லூரி திகழ்கிறது. இதன் பின்னர் பல பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.

1931ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் கல்வி முறைமையானது இலவசக் கல்வி என்ற நிலைக்கு மாற்றப்படுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த முயற்சியின் பயனாக காலனித்துவ காலத்து இலங்கை நிர்வாகப் பேரவையின் முதல் கல்வி அமைச்சரான கிறிஸ்டோபர் வில்லியம் விஜேயகோன் கன்னங்கராவினால் 1940ஆம் ஆண்டு இலவசக் கல்வி முறைமை இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை இலவசக் கல்வி வாய்ப்பைப் பெற வேண்டும் என்ற இலக்குடன் அப்பெருந்தகையால் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால்தான் இன்றுவரை இலவசக் கல்வியின் தந்தையென கன்னங்கரா அழைக்கப்படுகிறார். அவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச் கல்வி வாய்ப்பின் மூலமே இலங்கை மக்கள் எழுத்தறிவு மிக்கவர்களாக உள்ளனர். தென்கிழக்காசிய நாடுகளின் சனத்தொகையில் 98.1 வீதம் எழுத்தறிவு கொண்ட மக்களைக் கொண்ட நாடாக இலங்கை திகழ்கிறது. இதற்குக் காரணமாக அமைவது பாடசாலையின் இலவசக் கல்வி முறைமை எனக் குறிப்பிட முடியும்.

ஆனால், தற்காலத்தில் பாடசாலை இலவசக் கல்வி முறைமையானது மேலதிக வகுப்பு அல்லது கல்வி முகாம்கள் என்ற பெயர்களில் பணம் தேடலுக்கான வர்த்தக முறைமையாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாடசாலைகளினூடாக வழங்கப்படும் இலவசக் கல்வியின் எதிர்காலம் இத்தகைய மேலதிக வகுப்புக்களினால் சீரழிக்கப்படுமா அல்லது ஏழை மாணவர்கள் அரச பாடசாலைகளில் கல்வியைத் தொடர்வதில் தடங்களை ஏற்படுத்துமா? என்ற கேள்வியும் அச்சமும் சமூக மட்டத்தில் பரவலாகக் காணப்படுவடுவதுடன் அரச பாடசாலை வகுப்பறைக் கல்வியின் மறுபக்கம் எதிர்காலத்தில் என்னவாக அமையும் என்ற சந்தேகம் பல ஏழைப் பெற்றோர்கள் மத்தியில் எழ ஆரம்பித்திருக்கிறது.

1940ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறையினூடாக ஏழை மாணவர்களும் பாடசாலைகளில் அனுமதி பெற்று வகுப்பறைக் கல்வி வாய்ப்பைப் பெற்றுக்கொண்டனர். மத்திய மகா வித்தியாலயம் என்று ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் பின்னர் தேசிய பாடசாலை, மாகாணப் பாடசாலை என மாற்றப்பட்டது. மாகாணப் பாடசாலைகளும் 1 ஏபி தரப் பாடசாலை, 1 சீ தரப் பாடசாலை, வகை 2, வகை 3 பாடசாலைகள் என வகுக்கப்பட்டன. இவ்வாறு நாடுபூராகவுமுள்ள ஏறக்குறைய 10,012 பாடசாலைகளில் 4,037,857 மாணவர்கள் இலவசக் கல்வியின் பயனைப் பெற்று வருகின்றனர்.

இந்நாட்டுப் பிள்ளைகளின் கல்வி விருத்திக்காக முதலாவது கல்வி அமைச்சர் கன்னங்கரவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசப் கல்விப் போதனை மாத்திரமின்றி. இலவச பாடநூல்களும் வழங்கப்படுகின்றன. அத்தோடு, முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்தனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச சீருடையும், ஆர் பிரேமதாசாவினால், தொடங்கப்பட்ட இலவச மதியவுணவும் வழங்கப்பட்டு வருகின்றன. நேரடியாக இலவச சீருடை வழங்காமல் அதற்குப் பதிலாக பண பவுச்சர் வழங்கும் நடைமுறை 2015இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவை தவிர, பாடசாலைகளில் மாணவர்களை தரம் ஒன்று முதல் 12 வரை சேர்த்துக்கொள்வதற்கு எவ்வித கட்டணங்களும் பெறக் கூடாது என்று கல்வி அமைச்சினால் சுற்றுநிருபத்தினூடாக அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், பிரபல பாடசாலை அதிபர்கள் அவற்றைப் பொறுட்படுத்தாது நேரடியாகவும் மறைமுகமாகவும் பணம் பெறும் கல்வி வியாபாரிகளாகச் செயற்படுவதையும் சமூக மட்டத்தில் பல சொத்துக்களுக்கு உரிமையுடையவர்களாகவும் திகழ்வதையும் காண முடிகிறது.

பிள்ளைகளைப் பாடசாலைகளில் இணைப்பதற்காக பணம் பெறும் அதிபர்களின் செயற்பாடுகளும் இலவசக் கல்வியின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் கல்வி வியாபார முயற்சியாகவே கருதப்பட வேண்டியுள்ளது. இலவசக் கல்வியின் முழுப் பயனையும் அடைந்துகொள்ள வேண்டுமென்பதற்காக வழங்கப்படுகின்ற அனுகூலங்களை முறையாக நிறைவேற்ற ஒரு சில ஆசிரியர்களும், அதிபர்களும் தயங்குவது அங்கீகரிக்கப்பட முடியாதவை.

அக்கால அதிபர்களும், ஆசிரியர்களும் கல்வியையும். கற்பித்தலையும் பணம் தேடும் தொழிலாகக் கருதவில்லை. ஒரு புனித பணியாகவே கருதினர். அவ்வாறான ஆசிரியர்கள் இன்றும் கௌரவத்துக்குரியவர்களாகவே பேசப்படுகின்றனர். ஆனால் இன்றைய அதிபர் ஆசிரியர்கள் சமூகத்தால் போற்றும் படி இல்லை என்பது கல்விச் சமூகத்துக்கு கவலை தரும் விடயமாகும்.

ஒரு வகுப்பில் மாணவர் எண்ணிக்கையானது 35 என வரையறை செய்யப்பட்டுள்ள போதிலும், பல மேலதிக வகுப்புக்களில் 45க்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரே நேரத்தில் கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இக்கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகள் எத்தகைய அடைவுகளை ஏற்படுத்தும் என்பதும் சாதாரணமாக ஊகித்துக்கொள்ள முடியும்.

யாழில் பிரபல பாடசாலை அதிபர் ஒருவர் கோடிக்கணக்கில் வட்டிக்கு பணம் வாங்கி பாடசாலையில் சேரும் பிள்ளைகளிடம் இருந்து பெறப்படும் பணத்தில் இருந்து மீளுகிறாராம் என்றால் பாருங்களேன்.

இவர் ஒன்றரைக் கோடி பணத்தை கடனாக ஒருவரிடம் வட்டிக்கு வாங்கியுள்ளார். அந்தப் பணத்தில் ஒரு கோடியை திருப்பி கொடுத்துவிட "மீதிப் பணத்தை எப்ப தருவியள்" என்று கேட்டுள்ளார். அடுத்த வருடம் பாடசாலை சேரும் பிள்ளைகளிடம் இருந்து பெற்றுத் தருவதாக அதிபர் தெரிவித்துள்ளாராம். இந்த பாடசாலை இந்த அதிபர் இருக்கும் வரை உருப்பட்டதாக வரலாறு இருக்காது.

இந்த அதிபர் இந்தப் பாடசாலையில் இடமாற்றமின்றி பல வருடங்களாக உப அதிபராக பணியாற்றி அதிபராக பதவியுயர்வு பெற்று பணியாற்றுகிறார் என்றால் இந்தப் பாடசாலையின் நிலைமை என்னவாகும்?

இந்தப் பாடசாலை ஆசிரியர்கள் ஒரு தடவை பாடசாலை முறைகேடு தொடர்பாக எல்லோரும் சேர்ந்து கையெழுத்திட்டு மத்திய கல்வி அமைச்சுக்கு கடிதம் அனுப்பியும் இதுவரை இவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பாருங்களேன் இவர் பவரை!

இவரால் இந்தப் பாடசாலை பின்நோக்கிப் போகிறது என்று தெரிந்தும் ஆசிரியர்களால் இவர் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இதனால் கல்வியில் முன்னின்ற இந்தப் பிரபல பாடசாலை இன்று கல்வி பின்னுக்குப் போய் பிரபல்யம் குறைந்து வருகிறது.

இதற்கு என்ன காரணம் என்றால் திறமையுள்ள பிள்ளைகளை இந்தப் பாடசாலையில் சேர்க்க முடியாமல் இருப்பதற்கு அதிபரினால் அறவிடப்படும் பணம் தடையாக இருக்கிறதாம்.

# ஆத்மாவின் பாடல்



எனது ஆத்மாவின் அடியாழத்தில்
சொற்களற்ற ஒரு பாடல் இருக்கிறது
அது என் இதயத்தின் விதைக்குள்
இருக்கின்ற பாடல்.

மை கொண்டு எழுதுகையில்
அது உருக மறுக்கிறது.
அது என் பாசத்தை
ஒளி ஊருடுவும் போர்வையால்
போர்த்தி விடுகின்றது:
அப்புறம் பாய்ந்து ஒழுகிச்செல்கின்றது:
ஆனால் என் உதடுகளிலிருந்தல்ல.

நான் எவ்வாறு அதை ஒரு
பெருமூச்சாக வெளியேற்றுவேன்?
அது பூமியின் ஈதருடன்
கலந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்.
யாருக்காக நான் பாடுவது?
அது என் ஆன்ம வீட்டில் குடியிருக்கிறது.
கொடுமையான செவிகளுக்குப் பயந்து.

நான் என் மனக்கண் வழியே பார்த்தபோது
அதன் நிழலின் நிழலைக் கண்டேன்.
நான் என் விரல் நுனிகளைத் தொட்டபோது
அதன் அதிர்வுகளை உணர்ந்தேன்.

ஓர் ஏரி, விண்மீன்களைப் பிரதிபலிப்பது போல
செயல்கள் செய்கையில், என்கைகள் அதை
உணர்ந்தன.
என் கண்ணீர் அதை உணர்த்தியது.
ஒளிமயமான பனித்துளிகள்
உதிரும் ரோஜாவின் இரகசியத்தை
வெளிப்படுத்துவது போல.

மன ஒருமைப்பாடு உருவாக்கிய பாடல் அது.
மௌனம், அதை வெளியிட்டது
கூச்சல், அதனை ஒதுக்கியது
உண்மை, அதை மடித்து வைத்தது
கனவுகள், அதை திருப்ப திருப்ப வெளியிட்டன.
காதல், அதைப் புரிந்து கொண்டது
விழிப்புணர்வு அதை ஒளித்து வைத்தது
ஆத்மா, அதை பாடி மகிழ்ந்தது.

அது அன்பின் கீதம்.
காயீனும், ஈசாவும் அதை பாட முடியுமா?

அது மல்லிகையை விட மணம் மிக்க பாடல்
எந்தக்குரல் அதை அடிமை கொள்ள முடியும்?

ஒரு கன்னியின் இரகசியம் போல
அது இதயத்திற்குள் இருப்பது.

ஏந்த நரம்புகள் அதை இசைக்க முடியும்?

கடலின் குமுறலையும் வானம்பாடியின்
பாடலையும்
யாரால் இணைக்க முடியும்?
சீறிப்பாயும் புயலோடு குழந்தையின் பெருமூச்சை
யாரால் ஒப்பிட முடியும்?

இதயத்தின் சொற்களை யாரால்
வாய்விட்டுச் சொல்ல முடியும்?
கடவுளின் கீதத்தை எந்த மனிதனால்
துணிவாகக் குரலெடுத்துப் பாட முடியும்?

- கலீல் ஜிப்ரான்
தமிழில் : புவியரசு

# தயவுசெய்து படியுங்கள்




"உனக்கு வாசிக்கும் பழக்கம் உண்டா?" என்று ஒரு பள்ளிக் கூடச் சிறுவனிடம் கேட்டேன். "ஆம் புத்தகங்களை வாசிக்கிறேன்" என்று பதில் தந்தான்.

"என்ன விதமான புத்தகங்களைப் படிக்கிறாய்?" என்று கேட்டதற்குப் பாடப் புத்தகங்களை என்று பதில் சொன்னானே பார்க்கலாம்.

பாடப் புத்தகங்கள் தவிர்ந்த ஏனைய புத்தகங்களை நீ படிப்பதில்லையா? என்று தொடர்ந்து கேட்டதற்கு, அவற்றை ஏன் படிக்க வேண்டும்? அவற்றால் என்ன பலன்? அதிலிருந்து சோதனைக்கு ஏதாவது வருமா? என்று பல விடயங்களை அவன் என்னிடம் வினாவினான்.

"அது அவன் தவறா?" என்று நான் அவன் ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் தான் கேட்க விரும்புகிறேன்.

சோதனைக்காக மட்டும் படிக்கின்ற கல்வி முறைமையைத்தான் நாம் பின்பற்றி வருகிறோம். இது மட்டும் தான் எமக்குப் பலன் தரக் கூடியதென்ற ஒரு அறிவையும் எம்மிடையே வளர்த்துக் கொண்டு வருகிறோம். பண்பட்ட மனிதனாக வாழ்வில் உயர்வதற்குப் பள்ளிக் கல்வியையும் தாண்டியதொரு பெரு வெளிக்குள் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை நாம் இளையதலைமுறையினரிடையே ஏற்படுத்தவில்லை என்று சொல்வதைவிட, ஏற்படுத்தத் தவறிவிட்ட தொரு சமூகமாக நாம் காணப்படுகிறோம் என்பதுதான் உண்மை.

ஒரு சமூகம் உயர்ச்சியுற்றதாகக் கணக்கிடப்பட வேண்டுமெனில் அச் சமூகத்தில் உள்ளவர்கள் புத்தகக் கல்வியுடன் விட அனுபவக் கல்வியிலும் மேம்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஒருவன் தான் சார்ந்த சமூகத்தில் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளக் கல்வி உதவுகிறது. ஆனால் அந்தச் சமூகத்தை வழி நடத்துபவனாக அவன் மாறுவதற்கு அவனுக்குப் பல தரப்பட்ட அறிவு அவசியமாகிறது. அந்த வகையில் அவன் அனுபவம் சார் கல்வி அறிவைத் தேடிப் போக வேண்டியவனாகவும் இருக்கிறான்.

அதிக வாசிப்பினாலும் அனுபவம்சார் கல்வி அறிவைப் பெறமுடியும். வளர்ச்சியுற்ற நாடுகளில் பெரும்பாலும் ஆரம்பக் கல்வியாகப் பாடப் புத்தகக் கல்வியை மாணவர்களுக்கு புகட்டுவதில்லை. பண்பட்ட மனிதனாக அவன் சமூகத்தில் வலம் வர வேண்டும் என்ற தோரணையிலேதான் கல்வி முறை திட்டமிடப்படுகிறது. முதலில் மனித நேயத்தைத்தான் அவர்கள் மாணவர்களுக்குப் புகட்டுகிறார்கள். மனிதர்களை நேசிக்கப் பழக்கப்படும் ஒருவன் பண்பட்ட மனிதனாக வளர்வான், அவன் வீட்டையும் நாட்டையும் சமமாக நேசிப்பான் என்று அவர்கள் பூரணமாக நம்புகிறார்கள். மானிட நேயத்தைத் தமது குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து தற்போது முதுமையடைந்த பலரிடம் கேட்டால் "நல்ல புத்தகங்களை வாசித்தேன்" என்று பதிலளிக்கிறார்கள். நல்ல வாசிப்புக்கள் என்று சொல்லும்போது அவர்கள் நல்ல எழுத்தாளர்களின் புத்தகங்களைக் குறிப்பிடுகிறார்கள்.

சோவியத் - ரஸ்யா வாக இருந்தபோது அவர்கள் தமது கொள்ளை விளக்கங்களை உலகமெல்லாம் பரப்ப அந்தந்த நாட்டு மொழிகளில் பல பிரசுரங்களைக் கொண்டு வந்திருந்தனர். அப்போது இலங்கையிலும் - 1970 களில் சோவியத் நாட்டுப் பிரசுரங்கள் தமிழில் வெளிவந்து கொண்டிருந்தன. நல்ல தமிழ் பிரயோகத்தை அவற்றில்தான் கற்றுக் கொண்டோம் என்கின்றனர் பலர். அந்தப் பிரசுரங்களைப் படிக்கும் தோறும் சோவியத்துக்குச் சென்று ஒரு முறைப் பார்க்க வேண்டும் போல் இருக்கும். அப்படிப்பட்ட தொரு ஆவலைத் தூண்டும் விதமாகத் தமிழில் எழுதி இருப்பார்கள்.தமது நாட்டின் அபிவிருத்தி பற்றி மட்டுமல்ல பல விடயங்களையும் அவர்கள் எழுதுவார்கள். அந்தக் காலத்தில் அநேகமாக எல்லோருமே இலக்கிய ஆர்வலர்களாக இருந்தனர். நிறைய வாசித்தனர்.இக்காலத்து இளவயதினருக்கு சாண்டில்யனின் 'மன்னன் மகள்', 'யவன ராணி.' மு.வரதராசனின் 'அகல் விளக்கு', 'கள்ளோ காவியமோ', 'கரித்துண்டு'என்ற எழுத்துக்கள் பற்றி ஏதாவது தெரியுமா? என்று கேட்டுப் பாருங்கள்.

யுத்த காலத்தில் சமூகப் பிறழ்வு என்று ஒன்று நடைபெற்றதை நாம் முற்றாக மறுப்பதற்கில்லை. ஆனால் அந்தச் சமயத்திலும் புத்தகங்கள் பற்றிய எண்ணங்கள் மனிதர்களிடையே காணப்பட்டதையும் மறுப்பதற்கில்லை. விடுதலைப் புலிகள் சிங்கள இராணுவத்தோடு யுத்தத்தைச் செய்த அந்தக் காலகட்டத்தில் ,எமது கலாசார பண்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் பல போராட்டங்களை நடத்தினர். அவற்றைச் செம்மைப்படுத்தப் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். அதற்குப் பலவிடயங்கள் சான்றாக உண்டு.

எனவே சமூகத்தில் தூர்ந்து போயிருக்கின்ற வாசிப்பை நீங்களும் மீளமைக்கலாம். அதனை உங்கள் அன்றாட நடவடிக்கைகளிலிருந்தே தொடங்கலாம். உங்கள் உறவுகளில் நடைபெறும் விழாக்களுக்குச் சொல்லும்போது மற்றைய பரிசுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்குப் பதிலாகப் புத்தகங்களை எடுத்துச் சென்று அவர்களுக்குப் பரிசாகக் கொடுங்கள். அவர்கள் உடனடியாக அதனைப் புரட்டிப் பார்க்காவிட்டாலும் எப்போதாவது அதன் பக்கங் களைப் புரட்டக் கூடும். அதன் பலனை அனுபவிக்கக் கூடும்.

அத்தகைய புத்தகங்களைத் தெரிவு செய்யும் போது அவரவர் தேவைக்கும், தகுதிக்கும் ஏற்றவாறு புத்தகங்களைத் தேர்வு செய்வதுதான் இந்த முயற்சியிலே நீங்கள் வெற்றியடையக் காரணமாயிருக்கும். உதாரணமாகத் திருமணப் பரிசாகக் கொடுக்கின்ற புத்தகம் "நல்ல வாழ்க்கை" பற்றிய வழிகாட்டியாக இருக்கட்டும். சிறுவர் பிறந்த நாள் பரிசாகக் கொடுக்கின்ற புத்தகம் ஒரு இலட்சியச் சிறுவன் பற்றியதாக இருக்கட்டும். உங்கள் தேர்வும் அவர்கள் தேவையும் ஒன்றிணையும் போதுதான் உங்கள் நோக்கம் ஒரு பூரண பலனைத் தரும்.

அவ் வகையில் நல்ல புத்தகங்களைத் தெரிவு செய்து வாங்கக்கூடிய சந்தர்ப்பமொன்று வட பகுதி மக்களுக்கு அமையவிருக்கிறது. எதிர்வரும் ஒகஸ்ட் 27 தொடக்கம் 01 செப்ரெம்பர் வரை யாழ்.வீரசிங்க மண்டபத்தில் யாழ். புத்தகத் திருவிழா 2019 என்ற ஒரு நிகழ்வு நடைபெற உள்ளது. அதனை இலங்கை புத்தக விற்பனையாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்துடன் , வட மாகாண ஆளுநர் காரியாலயமும் இணைந்து ஏற்பாடு செய்திருக்கிறது. அதில் பல வர்த்தக நிறுவனங்கள் உதவி அனுசரணையாளர்களாகப் பங்கு பெறுகிறார்கள்.அனுமதி இலவசம். எனவே நிகழ்வு நடைபெறும் நாட்களில் ஒரு நாளாவது உங்கள் குடும்பத்தினரோடு சென்று இத்தகைய பெறுமதிமிக்க நிகழ்வுகள் தொடர்ந்து எம்மண்ணில் நடைபெறுவதற்கு ஆதரவு நல்குங்கள்.

**- கணபதி சர்வானந்தா.**


# பத்தும் பலதும் - அறிய வேண்டியவை

- தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்ய உதவும் மூச்சு கருவியின் பெயர் ஸ்கியூபா ஆகும். (SCUBA - self Cointained Underwater Breathing Apparatus)
- முதன் முதலில் அமெரிக்காவே 1893 ம் ஆண்டு நினைவு தபால் தலையை வெளியிட்டது.
- தொலைக்காட்சியில் மூன்று அடிப்படை நிறங் களாகப் பச்சை, நீலம், சிகப்பு பயன்படுத்தப்படும்
- பிளாஸ்டிக்குகளை எரிக்கும் பொழுது வெளியேறும் நச்சுப்புகையின் பெயர் டையாக்சின்
- சுப்பர் கணனியின் வேகம் வினாடிக்கு ஃலாப்ஸ் (Flops) என்ற அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.
- பாம்பு நாக்கின் மூலமே வாசனையை உணர்கிறது.
- காண்டா மிருகத்தின் கொம்புகள் உண்மையில் எலும்புகள் அல்ல.அவை மிகக் கடினமான மயிரி ழைகளால் உருவானவை.
- அனப்லெப்ஸ் என்ற மீனுக்கு இரண்டு கண்களில் நான்கு விழித்திரைகள் உண்டு.
- கடுமையான வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள நீர் யானையின் தோலில் ஒரு வித இளஞ்சிவப்பு நிறத்தாலான திரவம் சுரந்து, குளிர்ச்சியைக் கொடுக்கிறது.
- உண்ணி எனப்படும் தெள்ளுப்பூச்சி, ஓராண்டு வரையிலும் கூட பனிக்கட்டியினுள் உயிருடன் இருந்து, ஐஸ் கரைந்தபின் வெளிவரும் ஆற்றல் கொண்டது.
- உலகிலேயே உயரமான சிகரம் எவரெஸ்ட், இதன் உயரம் 8848 மீட்டர்கள்.
- திரை அரங்குகளே இல்லாத நாடு பூட்டான்.
- உலகிலேயே மிகப் பெரிய நூலகம் மாஸ்கோவில் உள்ள லெனின் நூலகம்.
- உலகிலேயே துணியில் செய்திதாள் வெளியிடும் நாடு ஸ்பெயின்.
- அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு ஐக்கிய இராஜ்ஜியம்.




- உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம் முதலை. இவை 300 ஆண்டுகள் வரை வாழுகின்றன.
- இரண்டு பிரதமர்களைக் கொண்ட நாடு சான்மரீனோ.
- உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு சுவீட்சர்லாந்து.
- முதல் டிரக்டர் 1900 ஹால்ட் என்பவரால் செய்யப் பட்டது.
- முதன் முதலில் காகிதத்தினால் ரூபாய் நோட்டை அச்சிட்டு வெளியிட்ட நாடு சீனா.
- ஐக்கிய நாடுகள் சபை 1945, அக்டோபர் 24ல் தொடங்கப்பட்டது.
- உலகிலேயே வெப்பமான இடம் அசீசியா (லிபியா).
- உலகிலேயே குளிர்ந்த இடம் சைபீரியா (ரஷ்யா).
- விமானம் பறக்கும் உயரத்தை அளக்க உதவும் கருவியின் பெயர் ஆல்ரி மீற்றர்.
- உலகிலேயே அதிக வயதில் பிரதமர் ஆனவர், மொகராஜி தேசாய். இவர் 1977ல் மார்ச் 24இல் பதவி ஏற்றபோது வயது 81.
- பூனையின் கண்பார்வை மனிதனைவிட எட்டு மடங்கு கூர்மையானது.
- ஒட்டகம் 1 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள தண்ணீரை எளிதாக கண்டுபிடித்துவிடும்.
- கறையான் ஒரு நாளைக்கு முப்பதாயிரம் முட்டை இடும்.
- நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை நித்திரை கொள்ள முடியும்.
- மனிதனுடைய காதுகளால் 130 டெசிபல் அளவு தான் சத்தத்தைப் பொறுத்துக்கொள்ள முடியும்.

# இலங்கை இனப்பிரச்சினையும் கார்ட்டூன் ஓவியமும்




இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின் அரசியல் போக்கில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராச்சியம் உருக்குலைந்தது. சுதேச விடுதலை இயக்கங்கள் ஆங்காங்கே முகிழ ஆரம்பித்தன. பின்விளைவுகளை விளங்காது அரசியல் சித்தாந்தங்கள் நாகரிக உலகில் பீறிட்ட காலத்தில் இந்துமா சமுத்திர இந்திய உபகண்டத்தின் தென்கோடியில் அமைதியில் திழைத்த இலங்கைத் தீவில் சிறுபான்மையினரின் உரிமைகள் மறுக்கப்பட்டதால் இனமுரண்பாடுகள் பூதாகாரமாக வெளிக்கிளம்பிற்று.

முன்பு கத்தோலிக்கர்களுக்கு எதிராக மேற்கொண்ட வன்செயல்கள் 1983ஆம் ஆண்டு ஜூலையில் இனவெறித் தீச்சுவாலை பீறிட அது தமிழர்களுக்கெதிராகத் திரும்பியது. இதன் பின் தமிழர்கள் பரபட்சமாக நடத்தப்பட்டு அவர்களது நிலங்களும் அபகரிக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின் சிங்களம் மட்டும் அரச கரும மொழியானது. தவிரவும், மலைநாட்டுத் தமிழர்கள் நாடற்றவர்களாகியதும், கல்வியில் பாரபட்சம், தொழில் வாய்ப்பில் பாரபட்சம் ஆகியவையெலலாம் திரண்டு இனப்பிரச்சனையை இலங்கையில் உருவாக்கிற்று எனலாம். நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து சிங்கள அரசினால் தமிழ் மக்கள் அநியாயமாகவும், கொரூரமாகவும் ஒடுக்கப்பட்டதன் வரலாறு அனைத்துலக மனிதநேய அமைப்புக்களினால் செம்மையாக ஆவணப்படுத்தப் பட்டிருக்கிறது. நீடித்துச் செல்லும் இன நெருக்கடிக்குத் தீர்வு காணத் தமிழ் சிங்கள இனங்களின் தலைவர்கள் செய்துகொண்ட அரசியல் ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் செயலிழந்து செத்துப்போயின. இதனால் இரண்டு இனங்களுக்கிடையேயும் பகைமையும், நம்பிக்கையீனமும் ஆழமாகியது. கண்மூடித்தனமான கைது, கொடுமையான சித்திரவதை, காணாமல்போதல், சட்டம் மீறிய கொலைகள் ஆகியவை சிங்கள அரச படைகளின் நடவடிக்கைகளில் ஓர் அங்கமாயின.

மேலும், தமிழ்ப் பகுதிகள் மீது அரச படைகள் நிகழ்த்திய இன ஆக்கிரமிப்பும், அடக்குமுறைகளும் அரசினால் கோலமிடப்பட்டுச் சிங்களக் காடையரால் நிறைவேற்றப்பட்ட காட்டுமிராண்டித்தனமான இனக்கலவரங்களும் ஆயிரமாயிரம் தமிழ் மக்களைக் கொன்றொழித்தன. தீவிரமடைந்த அரச ஒடுக்குமுறையும், சிங்கள இனவாத அரசியல் தலைமை மீதும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையீனமும், விரக்தியும் பிரிந்து சென்று தனியான தமிழரசை நிறுவுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கே தமிழ் மக்களைத் தள்ளியதுடன் இற்றைவரை இவ் இன முரண்பாட்டிற்கான தீர்வுகள் எதுவுமே இன்றி தமிழர்கள் துன்பச் சுமைகளைத் தோள்களில் தாங்கி முள் வேலிகளின் மத்தியில் ஏதிலிகளாய் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான இனப்பிரச்சனையை மையப்படுத்தியதாக அதன் வன்மத்தினை எளிய சில கோடுகள் மூலம் விபரிக்கும் ஊடகமாக கார்டூன்கள் காணப்படுகின்றன. இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து நடந்தேறிய இனவன்முறைகளின் நினைவுப்பெட்டகமாக வெளிக்கிளம்பிய இலங்கையின் வெளிப்பாட்டுக் கலைகளின் அங்கமான இதழியல்களில் வெளியாகிய அரசியல் காட்டூன்கள் தன்னிச்சையான படங்களல்ல. ஆனால் இவற்றை உருவாக்கிய சமூகத்தைப் பாதித்த வரலாறு, மற்றும் அரசியலில் இருந்து அர்த்தத்தையும், தமக்குரிய அர்த்தத்தையும் பெற்றுக்கொண்டவை. இந்த வரலாறும், அரசியலும் சமூக மற்றும் அரசியல் ஞாபகங்களை மாத்திரம் உள்வாங்கவில்லை. மாறாக ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞர்களின் உறவுகள் மற்றும் நண்பர்கள் ஆகிய சகலரதும் சமூக அசைவியக்கத்தின் அனுபவங்களையும், நினைவுகளையும் உள்ளீர்த்துக்கொண்டுள்ளன.

குறிப்பாகக் காட்டூன் என்றால் 'விகடமும் விமர்சனமும் கலந்த வரைபுகள்'என வரையறுக்கலாம். இன்று தமிழில் காட்டூனை 'கேலிச்சித்திரம்' , 'கருத்தோவியம்', 'நகையகம்', 'கருத்துப்படம்' எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றது

ஆனால் காட்டூன்களை அது பிரயோகிக்கப்படும் மெய்யான அர்த்தத்தில் கூறுவதானால் அது கேலிச் சித்திரமுமல்ல, கருத்தோவியமுமல்ல. காட்டூனைக் கேலிச் சித்திரம் என்போர் அதன் விகடச்சுவையை மட்டுமே கருத்தில் கொள்கின்றனர். அதன் விமர்சனப் பண்பை அல்ல. மாறாகக் கருத்தோவியம் என்போர் அதில் தரப்படும் செய்தி அல்லது விமர்சனத்தைத்தான் கருதுகின்றனர். அதன் விகடச்சுவையை அல்ல. ஆனால் காட்டூன்கள் என்பது 'விகடத்தனத்தில் செய்யப்படும் ஒரு விமர்சனமாகும். எனவே அதனை 'விகட விமர்சன ஓவியம் என அழைப்பது அனேக பொருத்தமானதாக அமையும்.

காட்டூன்களின் தந்தை என அழைக்கப்படுவர் பீட்டர்ரார்னோ (Peterarno) எனபடவராவார். பொதுவில் மூன்றுவகைக் காட்டூன்கள் உள்ளன.

1. தனிக் கேலிச்சித்திரம்
   அ) பொழுதுபோக்குக் காட்டூன் (Gag Cartoon)
   ஆ) அரசியல் காட்டூன் (political or Editorial Cartoon)
2. நகைச்சித்திர வரிசை (Comic strip)
3. உயிருள்ள கேலிச்சித்திரம்

காட்டூன்களின் தன்மையை நோக்கின்

I. Gag Cartoon :- ஒற்றைக்கோட்டுரகக் காட்டூன்களை Gag என அழைப்பர்
II. Editorial Cartoon:- பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வரையப்படும் காட்டூன்கள் Editorial Cartoon எனப்படும்.பத்திரிகைத் தலைப்பிற்கு வரையப்படும் காட்டூன்களில் பலூன் வடிவ அமைப்பிற்குள் பேசுவர். சிலவேளை பல பட்டியல் அமைப்பை உள்ளடக்கியிருக்கும்.
III. ஊடகக் காட்டூன்கள் (Movie Cartoons) :- குழந்தைகளைக் கவரும் காட்டூன்களாக வெளி வருகின்றன. 'மிக்கி மவுஸ்' எனும் நகைச் சுவை movie cartoonsy வரும். இதன் ஆரம்பம் 1928 ஆகும். குழந்தைகள் மத்தியில் இது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தவிரவும், சிறுசிறு கதைக் கருப்பொருளைக் கதை வடிவத்துடன் சேர்த்துக் காட்டூன்கள் மூலமாகவும் எடுத்துக்காட்டப்படுகிறது.

உதாரணமாகத் தெனாலிராமன் கதைகளினூடாகச் சிரிக்கவும், சிந்திக்கவும் செய்வதுடன் மனதில் ஆழமாகப் பதிகின்றன. (ரவிராஜ்-1994:3)

இவ்வகைப்பாடுகள் மத்தியில் இவ் ஆய்வானது 'Political Cartoons' ஐ மையப்படுத்தியதாகவுள்ளது. இங்கு அரசியல் கருத்தை ஒரு புது வகையில் வெளியிடும் முறையாகக் காட்டூன்கள் தொழிற்படுகின்றன. காட்டூன்களின் சமூகப் பெறுமதி அரசியலிலேயே உச்சம் பெறுகின்றது. ஏனெனில் அரசியலில் தான்சமூகத்தின் சகல கூறுகளும் மையங்கொள்கின்றன. இலங்கை அரசியலில் மிகப் பூதாகாரமாக முகிழ்ந்து, முகிழ்ந்துகொண்டிருக்கின்ற, முகிழப்போகின்ற பிரச்சனை இனப்பிரச்சனையே. இலங்கையில் சுதந்திரத்தின் பின்னரான வரலாற்றுக் காலத்துடன் இப்பிரச்சனையின் விஸ்தீரணம் இன்று வரை சுருக்கப்படாத, இன்னும் அதழ வேகமாக, தீவிரமாக வியாபித்துள்ளமையை நோக்கமுடியும். இந்த இன மோதல்களின் விலை இந்நாட்டு மக்களது உயிரும், உடமைகளுமே. தற்கால உலகம் பல்லினப் பண்பாடு கொண்ட சமூகத்தினை வேண்டி நிற்கும் இந்நிலையில் இனங்களுக்கிடையிலான பிணக்குகள் நாட்டை அதளபாதாளத்தினுள் தள்ளிவிடும் என்ற உண்மை எம் கண் முன்னே நிகழ்ந்தேறியுள்ளது. இக்கொரூர ரணத்தின் காலப்பதிவுகளாகிய இதழியல்களில் வெளியாகிய அரசியல் காட்டூன்களைத் தெரிந்தெடுத்து நாளைய தலைமுறையினருக்காகப் பாதுகாக்காவிடின் எமது கலாசாரத்தைப் பற்றிய அவர்களது அறிலும், அனுபவமும் வறுமைப்பட்டுப் போய்விடும்.

- தர்மதாஸ்.

# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்



இனி வருங் காலத்திலை வாத்தியார் சமூக ஒழுக்கங்களைப் பற்றித்தான் அதிகம் பேசப் போகிறேன். ஏனென்றால் வீட்டை விட்டு வெளிக்கிட்டால் தலை இடிக்கத் துவங்கிவிடுகிறது. ஆண்களானாலும் சரி, பெண்களானாலும் சரி சுய ஒழுக்கத்திலும், சமூக ஒழுக்கத்திலும் மேலுயர்ந்தவர்களாக இல்லை. எல்லோரும் அழகாக உடை உடுத்து, புறத்தோற்றத்தை மெருகூட்டியவர்களாகத்தான் காணப்படுகிறீர்கள். ஆனால் நடத்தை தலை கீழாக அல்லவா இருக்கிறது.

விலை உயர்ந்த மோட்டார் சைக்கிளை வைத்திருக்கிறீர்கள். ஆனால் அதனை ஓடும்போது சாலை விதிகளைச் சரிவர மதிக்கிறீர்களா? போவதும், வருவதும் உங்கள் இடது பக்கமாக இருக்க வேண்டும். ஆனால் பெரியவர்களும் சரி, சிறுவர்களும் சரி கண்டபடி ஒரு ஒழுக்கமற்றுப் போவதைக் காண மனம் கொதிக்கிறது. அதனால் ஏற்படப்போகும் அபகடம் அவர்களுக்கு மட்டுமல்ல அந்தச் சூழலில் பயணிக்கின்ற எல்லோரையும் பாதிக்குமல்லவா?

சரி பெரியவர்கள்தான் இப்படி என்றால் சிறுவர்கள், அதைவிட மிகவும் மோசமாகத் துவிச்சக்கரவண்டியில் நட மாடுகிறார்கள். தற்போது காணப்படும் ரியூசன் வகுப்புகள் சமூகத்தில் கல்வி அறிவைப் புகுத்துவதைவிட கெட்ட கெட்ட பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ளும் மையமாக அல்லவா காணப்படுகிறது.

இவ்வளவு பணத்தை வாங்கும் ரியூசன் முதலாளிகள் எப்போதாவது சிறுவர்களுக்குப் பொது அறிவை அல்லது சமூகப் பொறுப்பைப் பற்றி ஏதாவது சொல்லிக் கொடுத்திருப்பார்களா? வகுப்புகள் முடிவடைந்து மடை திறந்த வெள்ளம் போல வரும் அந்த மாணவர் கூட்டம் தெருக்களை மறித்து வீதிப்போக்குக்கு இடைஞ்சல் விளைவிக்கின்ற காட்சிகளை எங்கும் காணலாம். ரியூசன் முதலாளிகளும் அப்படி போவது பிழை எனச் சொல்லிக் கொடுப்பதில்லை. அந்த மாணவர்களை அழைத்துச் செல்ல வந்திருக்கும் பெற்றோர்களும் அதனைச் சொல்லிக் கொடுப்பதில்லை. "மந்தைகளாகவா சமூகத்தை உருவாக்கப் போகிறோம்?" ஏன் நல்ல விடயங்களை உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கத் தயங்குகிறீர்கள்?

அடுத்த விடயம் பொதுப் போக்குவரத்துகளில், குறிப்பாக மினி பஸ்களில் பார்த்தால் வயது முதிர்ந்தவர்கள் கால்கடுக்க நின்று கொண்டு தொங்கிக் கொண்டு போகிறபோது இளவயதினர்கள் சொகுசாக இருக்கைகளில் அமர்ந்து செல்லுகின்றனர். பார்க்க சமூகத்தின் மீது அருவெறுப்பு வருகிறது. இப்படிப் பட்ட ஒரு மனிதாபிமான சமூகத்திலா நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.தொலைக் காட்சி நாடகங்களில் தலையைப் புதைத்திருக்கும் நேரத்திலாவது அதை நிறுத்தி இப்படியான விடயங்களை உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாமே?

# அந்த ஒரு நிமிடம்

எஸ். கணபதி

**சனி,** ஞாயிறு விடுமுறைக்குப் பின்னர் திங்கள் பள்ளிக் கூடம். புத்தகப் பையை எடுத்து மறுநாளுக்குரிய புத்தகங்களையும், கொப்பிகளையும் நேர சூசிகையின் படி அடுக்கத் தொடங்கிய பின் அந்தப் புத்தகப் பையை ஒரு முறை தூக்கிப் பார்த்தாள். "கொஞ்சம் பாரமாத்தான் கிடக்கு". அதனை மேசை மீது வைத்த பின் "டீச்சர் என்னத்தையோ கொண்டுவரச் சொன்னவ" முகட்டை அண்ணாந்து பார்த்துக்கொண்டு உதட்டில் கை வைத்தபடி ஒரு முறை சிந்தித்துக் கொண்டாள் ரம்மியா.

ரம்மியாவுக்கு வயது பத்து. வயதுக்கு அதிகமான வளர்ச்சி. அவள் பெரிசாவதைப் அவள் அம்மாவும்,ஆச்சியும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். "சாமத்தியச் சடங்கை கொஞ்சப் பேருக்குச் சொல்லியாவது செய்ய வேணும்" அது அம்மாவின் ஆசை. "சும்மா இரு. தண்ணியை வாத்துப் போட்டு விடுவம். பிறகு அவளின்ரை கலியாண வீட்டண்டு சடங்கு செய்யத்தானே வேணும்?" ஆச்சியின் விருப்பமது.

"ஆச்சிக்கு எப்பவும் அமளி துமளி பிடிக்காது. வீட்டை சும்மா கொஞ்சப் பேர் வந்து போயிட்டால் போதும். அந்தண்டு கூத்துத்தான். உள்ள செத்தல் மிளகாயெல்லாத்தையும் எடுத்து, உப்பைக் கவிட்டுக் கொட்டி முத்தத்திலை ஒரு சொக்கப்பானையே நடக்கும். நாவூறுக்கு அவ சரியான பயம். செத்தல் எரிச்சதோடை நிக்கமாட்டா. வீட்டைச் சுற்றி இருக்கிற எல்லா கோயிலுக்கும் உடனை நேர்த்திக் கடன் வைச்சிடுவா. எண்டாலும் ஆச்சி வீட்டிலை எங்களோடை இருக்கிறது எங்களுக்கு ஒரு பலம். நல்லது பொல்லாததைச் சொல்ல ஒராள் இருக்கே" என்று ரம்மியாவின் தாயார் எண்ணியபடி முற்றத்தில் காயப்போட்ட செத்தலை வாரி எடுத்துக் கொண்டிருந்தாள்.

ரம்மியாவின் மூளை பல மைல் பயணத்தின் பின் ஒரு நிலைக்கு வந்தது. "ஓ! கடவுளே. ரீச்சர் கொஞ்சம் பாசி கொண்டுவரச் சொன்னவ. பாசியைப் பற்றிப் படிப்பிச்சுப் போட்டு உங்கடை வீட்டுக் கிணற்றிலை பாசி இருக்கோ எண்டு பாருங்கோ. அப்பிடிக் கிடந்தால் உங்கடை வீட்டிலை உள்ள பெரியாக்களிட்டைச் சொல்லிக் கொஞ்சம் எடுத்துக் கொண்டு வாங்கோ. நீங்கள் வாளி எடுத்துப் பாசியை எடுக்க முயற்சி செய்யப்பிடாது.என்ன?" ரீச்சர் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. ஓடிச் சென்று மிதியில் நின்றபடி கிணற்றை எட்டிப் பார்த்தாள் ரம்மியா.

நேரம் செக்கல் ஆகியிருந்தது. பாதி வெளிச்சத்தில் ஒரு கருந்தகடு மிதப்பதைப்போல பாசிப் படலம் தெரிந்தது. ரம்மியாவுக்குச் சந்தோஷம். "எப்பிடியும்



கொண்டு போக வேணும்" ரம்மியா மனதுக்குள் முடிவெடுத்துக் கொண்டாள்.

"இப்ப அம்மாட்டைப் பாசிக் கதையைச் சொன்னால் அடிதான் விழும். இத்தினை நேரமும் எங்கை போனனீ. இரண்டு நாளா வீட்டிலை தானே நிண்டனி. அப்ப அப்பாட்டைச் சொல்லி எடுத்திருக்கலாம் தானே? போ..போய் ரீச்சரிட்டை அடியை வாங்கு எண்டு கத்துவா." ரம்மியாவின் அனுபவம் அது.

ரம்மியா வெளியே எட்டிப் பார்த்தாள். அப்பாவின் சைக்கிளைக் காணவில்லை. அம்மாவும் கோடிப்பக்கம் நின்று ஆட்டோடு சமர் செய்து கொண்டிருந்தாள். ஆச்சி எப்பவும் மாலை நேரம் தோட்டப் பக்கம் போயிடுவா. வரும்போது சும்மா வரமாட்டா. ஒரு கடகம் நிறையப் புல்லு. அதுக்கு மேல் சுள்ளித் தடி ஒரு கட்டு. மறு நாள் மத்தியானச் சாப்பாட்டுக்குத் தேவையான பலகீரைப் பிடி. இவைஎல்லாவற்றோடுந்தான் அவ வருவா. வெய்யிலோ, மழையோ இது தான் ஆச்சியினுடைய மாலை நேரசூசிகை.

இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் தம்பியின் பிறந்த நாள். சிறியதாகக் கொண்டாட்டம் ஒன்று நடைபெற்றது. அன்று மாமா வந்திருந்தார். அவர் எப்பொழுதும் சும்மா வருவதில்லை. பெரியதாக ஒரு சொக்கிலேட் பை ஒன்றோடுதான் வருவார். அப்படி அன்றும் ஒரு சொக்கிலேட் பை கொண்டு வந்திருந்தார். அதில் சிலவற்றை ரம்மியா தனது வகுப்புத் தோழிகளுக்காக எடுத்துச் சேமித்து வைத்திருந்தாள். அதையும் எடுத்துப் புத்தகப் பையினுள் திணித்து வைத்தாள். "தம்பி கண்டா அழுவன். தனக்கும் பாதி தரச் சொல்லி" ரம்மியா வின் கண்கள் தம்பியைத் தேடின. அவன் முற்றத்தில் குரும்பட்டிகளோடு நின்றதை அவள் கண்டாள். "அவனுக்குத் தேர் கட்டிற பைத்தியம். எப்ப பார்த்தாலும் குரும்பட்டியளைக் கண்டால் விடான். உடனை எடுத்து ஒழிச்சு வைச்சிட்டுக் கூட்டுமாறிலை இருக்கிற ஈக்கை அம்மாக்குத் தெரியாமல் பிடுங்கி எடுப்பன். கொஞ்ச நேரத்திலை தேர் முத்தத்திலை ஓடும்" ரம்மியாவுக்குத் தம்பியின் குறும்பு நன்றாகப் பிடிக்கும். சின்னச் சின்னதாகச் சண்டை வந்தாலும் விட்டுக் கொடுப்பது ரம்மியாவாகத் தானிருக்கும். தேய்ந்த அழி றேசர், குட்டையான பென்சில், அரைகுறையாக இருக்கும் போல்ட் பெயின்ற் பேனா எனத் தம்பியை வசீகரிக்கவென அவள் அப்பப்போ சில பொருட்களை எடுத்து வைத்திருப்பாள். என்ன நடந்தாலும் இரவு தம்பிக்குப் பக்கமாக அவள் படுக்காவிட்டால் அவளுக்கு உறக்கம் வராது.

**மாலை 5. மணி 45 நிமி. 00 செக்.**


ரம்மியாவின் மனதில் பாசி அடிக்கடி வந்து போயிற்று. "அப்பா வந்திட்டாரோ?" எட்டி எட்டிப் பார்த்தாள். மனம் அந்தரத்தில் நின்று ஆடியது. "தம்பி! ரீச்சர் பாசி கொண்டு வரச் சொன்னவ. கிணற்றிலை இருக்குது. அள்ளி எடுக்க வேணும். அப்பாவையும் காணேல்லை. என்ன செய்வம்?" அவள் தம்பியைப் பார்த்துக் கேட்டாள்.

"பொறு அப்பா வந்திடுவர். அவர் வராட்டி" தம்பி இடை நிறுத்தினான்.

"அவர் வராட்டி" ரம்மியா அவனைப் பார்த்தாள்.

"நான் அள்ளித் தாறன்." தம்பி பதில் சொன்னான்.

"உனக்கென்ன விசரே? எனக்கு அடி வாங்கித்



தர. சும்மா இரும்" அவள் தம்பியைக் கழிந்து கொண்டாள்.

**மாலை 5. மணி 48 நிமி. 43 செக்.**

"ரம்மியா முகம் கழுவிப் போட்டு விளக்கை வை. தம்பியிட்டையும் சொல்லு. நாளைக்குப் பள்ளிக்கூடம் எண்டு" அம்மா குரல் கொடுத்தாள்.

"தம்பி போய் கால் முகத்தைக் கழுவிப் போட்டு வாரும், கும்பிட.." ரம்மியா கத்தினாள். அவன் இருந்த இடத்தில் அவனைக் காணவில்லை. "அவன் பைப்படிக்குப் போயிருப்பன்" ரம்மியா நினைத்துக் கொண்டாள்.

**மாலை 5. மணி 53 நிமி. 32 செக்.**

சுவாமி அறையில் விளக் கேற்றியபடி வாசல் வழியாக ரம்மியா எட்டிப் பார்த்தாள். தம்பி இன்னும் வரவில்லை. அவள் அவனோடு சேர்ந்துதான் தேவராத் தைப் பாட வேண்டும். தேவாரத்தைப் பெலமாகப் பாடா விட்டால் அம்மாவுக்குத் திருப்தி வராது. அதற்காக அவள் தம்பி வரும்வரை காத்திருந்தாள். அவள் கையில் இருந்த ஊதுவத்திக் குச்சின் வாசனை மூக்கைத் துளைத்தது. "எங்கை அவனைக் காணேல்லை" மீண்டும் ரம்மியா எட்டிப்பார்த்தாள்.

**மாலை 5. மணி 55 நிமி. 30 செக்.**

"ரம்மியா என்ன சத்தத்தைக் காணேல்லை" அம்மா பக்கத்து அறையில் காய்ந்த உடுப்புகளை மடித்தபடி கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அம்மா தம்பி இன்னும் வரேல்லை. அது தான் பாத்துக் கொண்டிருக்கிறன்" ரம்மியாவின் பதில் அது.

**மாலை 6 மணி 11 நிமி. 00 செக்.**

நீண்ட நேரம் வராததால் ரம்மியா தம்பியைத் தேடினாள். "அம்மா தம்பியைக் காணேல்லை" ரம்மியாவுக்கு பயமாக இருந்தது.

அவளும் அம்மாவோடு சேர்ந்து தேடினாள். தோட்டத்தால் வந்த ஆச்சியோடு சேர்ந்தும் மூவரும் தேடினர். அதற்கிடையில் அக்கம் பக்கமுள்ள வீடுகளுக்கும் போய்விட்டு வந்துவிட்டாள் ரம்மியா.

அவனது நண்பன் வீட்டுக்கும் போய் வந்தாயிற்று. அம்மா தலையில் கைவைத்தபடி வாயிற் கதவருகில் இருந்துவிட்டா. ஆச்சி முனகத் தொடங்கிவிட்டா.

"எனக்குப் பாசி அள்ளித் தாறன் எண்டவன்." ரம்மியாவுக்கு மனதில் அது தைக்க ஓடிச் சென்று கிணற்றை எட்டிப் பார்த்தாள்.

"அம்மா தம்பி கிணத்துக்கை" ரம்மியா கத்தியது எல்லோருக்கும் கேட்டது.

# பாசிப் பயறை உணவில் சேர்ப்பதால் கிடைக்கும் நன்மைகள் !

பொதுவாக பருப்பு வகைகளில் நிறைய ஊட்டச்சத்துக் கள் நிறைந்திருப்பதால், அன்றாட உணவில் சிறிது பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொண்டால், உடலை ஆரோக்கியமாக பராமரிக்கலாம். அதிலும் பருப்புக்களில் ஒன்றான பாசிப் பயறு மற்றும் பாசிப் பருப்பை தவறாமல் வாரம் ஒருமுறை உட்கொண்டு வந்தால், அதில் நிறைந்துள்ள சத்துக்களால் எண்ணற்ற நன்மைகளைப் பெறலாம்.

மேலும் ஒரு கப் வேக வைத்த பச்சை பயறில் 100 கலோரிகளுக்கு மேல் இருக்காது. மேலும் பாசிப் பயறு உடலில் நோய்கள் தாக்குவதைத் தடுப்பதோடு மட்டுமன்றி, கூந்தல் மற்றும் சருமத்திற்கும் மிகவும் நல்லது. சரி, இப்போது பாசிப் பயறு அல்லது பச்சைப் பருப்பை அவ்வப்போது உணவில் சேர்த்து வந்தால் கிடைக்கும் நன்மைகள் பற்றிப் பார்ப்போமா!

**எடையைக் குறைக்கும்**


பெரும்பாலானோர் அவஸ்தைப்படும் ஒரு விஷயம் தான் உடல் பருமன். இத்தகைய உடல் பருமனைக் குறைக்கவும், உடல் எடையை சீராக பராமரிக்கவும், பச்சை பயறு பெரிதும் உதவியாக இருக்கும். அதற்கு காரணம் பச்சை பயறு நீண்ட நேரம் வயிற்றை நிறைவாக வைத்திருப்பது தான். எனவே உடல் எடையை குறைக்க முயற்சிப்போர், சப்பாத்தி சாப்பிடும் போது, அத்துடன் ஒரு கப் பச்சை பயறை சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் உட லுக்கு ஒரு நாளைக்கு வேண்டிய சத்துக்கள் கிடைப்பது டன், உடல் எடையும் கட்டுப்பாட்டுடன் இருக்கும்.

**இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும்**

இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுடன் வைக்கவும், கொழுப்பின் அளவைக் குறைக்கவும் பச்சை பயறு பெரிதும் உதவியாக இருக்கும். எனவே அன்றாடம் பச்சை பயறு அல்லது பாசிப் பருப்பை உணவில் சேர்த்து வாருங்கள்.

**இரும்புச்சத்து அதிகம் உள்ளது**

நீங்கள் இரும்புச்சத்து குறைபாட்டினால் அவஸ்தைப்பட்டால், அன்றாட உணவில் பச்சை பயறை சேர்த்து வாருங்கள். இதனால் உடலுக்கு வேண்டிய இரும்புச்சத்து கிடைத்து, இரத்த சோகை ஏற்படும் வாய்ப்பில் இருந்து தப்பிக்கலாம்.



**சரும புற்றுநோய்**


பச்சை பயறு சரும புற்றுநோயில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் என்பது தெரியுமா? ஆம், அன்றாடம் வெயிலில் அதிகம் சுற்றுவோர், உணவில் பாசிப்பருப்பு அல்லது பச்சை பயறை உணவில் சேர்த்து வந்தால், சரும புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்.



# உதட்டு வெடிப்பு நீங்க...

நமது உடலில் நீர் பற்றாக்குறையே உதட்டு வெடிப்புக்கு முக்கிய காரணமாகும். எனவே தேவையான அளவு தண்ணீர் பருகி உடலை ஆரோகியமாக வைத்துக் கொள்ள வேண்டும். இதை போக்க சில தகவல்கள்,

- வெண்ணெய் அல்லது நெய்யை உதட்டில் தடவினால், வறட்சி ஏற்படாமல் தடுக்கலாம். மேலும் வெடிப்புகள் இருந்தால் அவை சரியாகிவிடும்.
- ஆமணக்கெண்ணெயை உதட்டில் தடவி வந் தால், வறட்சி நீங்கி, உதடு பொலிவோடு காணப்படும்.
- கற்றாழையின் ஜெல்லை உதட்டில் தடவினால், உதட்டில் வெடிப்புகள் ஏற்படுவது குணமாகும்.
- ரோஜாவின் இதழ்களை பச்சை பாலில் ஒரு மணிநேரம் ஊற வைக்க வேண்டும். பின் அதனை பேஸ்ட் செய்து, உதட்டில் தடவி வந்தால், உதடு நன்கு பிங்க் நிறத்தில் இருப்பதோடு, வெடிப்புகள் ஏற்படாமலும் இருக்கும்.
- வேப்பிலையை நன்கு அரைத்து சாறு எடுத்து, அதனை உதட்டில் தடவினால், உதட்டில் இருக்கும் வெடிப்புகள் போய்விடும்.
- உதட்டு வெடிப்புக்கு கரும்பு சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவி வர உதட்டு வெடிப்பு குணமாகும்.



# கை வைத்தியம்

- வயிற்றுக் கடுப்பு

வயிற்றுக் கடுப்பு ஏற் பட்டால் புழுங்கல் அரிசி வடித்த தண்ணீரில் சிறிதளவு உப்பையும், வெண்ணெயையும் கலந்து குடித்துவிடுங்கள். சிறிது நேரத்திலேயே குணம் தெரியும்.

- பற் கூச்சம்

புதினா விதையை வாயில் போட்டு மென்றுக்கொண் டிருந்தால் பல்லில் ஏற்படும் கூச்சம் மறையும். அல்லது புதினா இலையை நிழலில் காய வைத்து தூள் உப்பு சேர்த்து பல் துலக்கினால் ஒரிரு நாளில் குணமாகும்.

- வாய்ப் புண்

வாய்ப் புண்ணுக்கு கொப்பரைத் தேங்காயை கசகசாவு டன் சேர்த்துச் சாப்பிட்டால் குணமாகும். அல்லது கடுக் காயை வாயில் ஒதுக்கி வைத்தால் வாய்ப்புண் ஆறும்.

- தலைவலி


பச்சை கொத்துமல்லித் தழைகளை மிக்ஸில் அரைத்து தினமும் காலையில் எழுந்தவுடன் குடித்துவர தலைவலி நீங்கும்.

- வயிற்றுப் பொருமல்

வசம்பை எடுத்துச் சுட்டுக் கரியாக்கி அதனுடன் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக் கெண்ணெய் ஆகிய மூன்றையும் கலந்து அடிவயிற்றில் பூசினால் வயிற்றுப் பொருமல் நீங்கும்.

# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் முருங்கை இலை

முருங்கைக் கீரையில் விற்றமின் ஏ அதிகம் இருப்பதால், பார்வை பிரச்சினை உள்ளவர்கள் அதை சாப்பிட்டால் தெளிவான கண் பார்வையை கிடைக்கும். முருங்கைக்கீரையை வாரந்தோறும் உணவில் சேர்த்து வந்தால், அது உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். இதனால் எளிதில் உடலைத் தொற்றும் சளி, காய்ச்சல் போன்றவற்றில் இருந்து விலகி இருக்கலாம்.



முருங்கைக்கீரை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம். குறிப்பாக ஆண்கள் முருங்கைக்கீரையை தவறாமல் சாப்பிட்டு வந்தால், அவர்களை எளிதில் தாக்கும் மாரடைப்பு மற்றும் இதர இதய நோய்களின் அபாயத்தைத் தடுக்கும்.

முருங்கைக்கீரையில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட் மற்றும் அத்தியாவசிய அமினோ அமிலங்கள் இருப்பதால், இவை புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுத்து, புற்றுநோய் வராமல் தடுக்கும்.

முருங்கைக்கீரையில் உள்ள கல்சியம், எலும்புகள் மற்றும் பற்களின் வலுவினை அதிகரிக்கும். முருங்கைக்கீரையில் இரும்புச்சத்து அதிகம் இருப்பதால், அது இரத்த அணுக்களின் அளவை அதிகரித்து, இரத்த சோகையில் இருந்து விடுபட உதவுகிறது.

பிரசவம் முடிந்த பெண்கள் தாய்ப்பாலின் சுரப்பை அதிகரிக்க, முருங்கைக்கீரையை சாப்பிடுவது நல்லது. பெண்களுக்கு பிரசவத்தின் போது இரத்தம் அதிகம் வெளியேறும். ஆகவே பிரசவத்திற்கு பின் அவர்களின் உடலில் இரத்தத்தின் அளவானது அதிகரிக்க வேண்டுமானால், முருங்கைக்கீரையை நெய் சேர்த்து வதக்கி சாப்பிட வேண்டும்.

குழந்தைகளுக்கு ஞாபக சக்தியை அதிகரிக்க வேண்டுமானால், முருங்கைப் பூவை நன்கு வெயிலில் உலர வைத்து, பொடி செய்து, பின் அந்த பொடியை பாலில் சேர்த்து கலந்து குடிக்க கொடுக்க வேண்டும். இதனால் கண்கள் நன்கு குளிர்ச்சியுடன் இருக்கும்.

முருங்கைக்கீரையை ஆண்கள் சாப்பிட்டு வந்தால், ஆண்மை அதிகரிப்பதுடன், விந்தணுவானது கெட்டிப்படும். வாரம் இரண்டு முறை முருங்கைக்கீரையை சாப்பிட்டு வந்தால், சிறுநீரக மண்டலம் சீராக செயல்பட்டு, சிறுநீர் சிறுநீர் அதிகமாக வெளியேறி, உடலில் தங்கியுள்ள நச்சுக்கள் வெளியேறிவிடும்.



# அங்கதன் பதில்கள்

■ **கோத்தாபய ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டமை பற்றி...?**

எம்.சரவணபவன் – கோப்பாய்

● முள்ளிவாய்க்கால் அவலம் மீண்டும் ஏற்பட்டு விடுமோ என்ற அபாய உணர்வு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாமல் உள்ளது.

■ **கதைப்புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் அருகி வருகிறதே!?**

புவிவேந்தன் , மீசாலை

● முகப்புத்தகம் பார்க்கும் பழக்கம் பெருகி வருகிறதே !

■ **தமிழ் மக்கள் மத்தியில் இளவயது விவாகரத்துகள் அதிகரிப்பதற்கு என்ன காரணம்?**

T.ராஜமோகன் , நீர்வேலி

● மன இணைவு இறுக்கமானதாக இல்லா விட்டால் மணமுறிவு ஏற்படுவது தவிர்க்க முடியாததே !

■ **சிறுபான்மையினரின் வாக்குகளே நாட்டின் தலைவரைத் தீர்மானிக்கும் என எஸ்.பி.திஸநாயக்காவே சொல்லியிருக்கிறாரே அதுபற்றி...?**

பரதன், சுதுமலை.

● கூடவே அவர் இதையும் சொல்லியிருக் கலாம். அதாவது அந்தத் தலைவரே சிறுபான்மையினரின் தலைவிதியைத் தீர்மானிப்பார் என்று!

■ **கழிவுப் பொருட்களை நாட்டிற்குள் இறக்குமதி செய்தோர் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்?**

ரேவதி, மணற்காடு.

● மதிகெட்ட கழிவுகள் என்பதை விட வேறு என்ன சொல்வதாம்?

■ **ஞானத்தினால் கல்வி பெறப்படுகிறதா? கல்வியினால் ஞானம் கிட்டுகிறதா?**

கிட்டினன் – பண்டாரிக்குளம்

● கல்வி ஞானத்தை தூண்டுகிறது. ஞானம் கல்வியை ஊக்குவிக்கிறது. கல்வியின் தளம் ஞானம், ஞானத்தின் பலம் கல்வி.

■ **வேலை நேரம் போக ரியூசன் வகுப்புகளோடு காலம் கடத்தும் பெற்றோர்கள் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?**

சங்கர் – பண்டத்தரிப்பு

● இழந்துவிட்ட பாடசாலைக் கால மலரும் நினைவுகளை காதல்களில் ரியூட்டரி வாசல்களில் மீட்டெடுத்து பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

■ **எல்லா வகையிலும் அரசியல்வாதி கள் நாக்கைப் புரட்டத் தொடங்கியிருப் பது என்னத்தைக் காட்டுகிறது?**

சின்னவன் – கோண்டாவில்

● நாடும் மக்களும் இந்தப் பொய் நாப்புரவலர்களால் சந்திக்கப் போகும் ஆபத்தைக் காட்டுகிறது. எல்லா வகையிலும் இந்த வாதிகளுக்கு பதிலளிக்கக் கூடிய பிரதிவாதிகள் சமூகத்தில் இல்லையே..!

■ **நக்குண்டார்...?**

ரூபன் – பருத்தித்துறை

● நாவிழந்தார் மட்டுமல்ல நாடிழந்தவரும் ஆவர். இது நமது தமிழ்த் தலைவர்களுக்கு சேரவேண்டிய செய்தி.

■ **சமூகத்தில், நடைபெறும் குடும்பச்சண்டைகள். அதிகரிக்கும் விவாகரத்து. இவை என்னத்தைக் காட்டுகிறது?**

சுமணா – முழங்காவில்

● பற்றற்ற குடும்ப உறவுகளையும் பற்றுக்கோடற்ற வாழ்க்கை முறையையும் காட்டுகிறது.

■ **வட மாகாணத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக் கிட்டியிருக்கிறது. சந்தோஷம்தானே?**

கார்த்திகேசு – மண்டைதீவு

● தேர்தல் சூழலை ஒட்டி ஆறுதலாக கிடைத்திருக்கும் இந்த வேலை வாய்ப்பு கள் அவர்கள் வாழ்வில் ஏதாவது நல்ல மாறுதலை ஏற்படுத்தினால் சந்தோஷமே.

■ **ஆடியில் மழை தூறுகிறது. ஐப்பசியில் வெய்யில் எறிக்குமென் கிறார்கள். உண்மையா?**

விமல்ராஜ் – மண்கும்பான்

● இப்படியானவற்றுக்கு எதிர்வுகூறலைக் கூறும் அறிவுள்ளவர்கள் வானிலை ஆராய்ச்சி மையத்தில் இருக்கிறார்கள் கேட்டுப் பாருங்கள்.

■ **பொதுப் போக்குவரத்து வண்டிகளில் வயது வந்தவர்களுக்கு ஆசனம் கொடுக்காத இளைஞர் பற்றி என்ன?**

ஹனீபா – மருதமுனை

● அவர்கள் தமது இருக்கைகளைத் தக்க வைப்பதில் குறியாக இருக்கும் அரசியல்வாதிகளை பின்பற்றுகிறவர் கள். விட்டுக்கொடுக்கும் அறிவற்ற வர்கள்.

■ **வாழ்வே மாயம். உங்கள் அனுபவம் என்ன?**

சுபைர் – சிலாபம்

● காயமே பொய் என்றான பின் வாழ்வே மாயம் என்பது உண்மைதான்.

■ **பலர் இப்போது சிரிப்பதற்குத் தயங்குகிறார்கள். ஏன்?**

நீலன் – திருநெல்வேலி

● வெறும் உதட்டால் சிரிப்பவர்கள் தயங்குகிறார்கள். உள்ளத்தால் சிரிப்பவர்கள் தயங்குவதேயில்லை.

■ **சாரதிப் பயிற்சிப் பள்ளிகளில் கூட்டம் அதிகரித்திருப்பது, என்னத்தைக் காட்டுகிறது?**

தாமரை – வாகரை

● நாட்டில் விபத்துகள் அதிகரிக்கப் போகிறது என்பதைக் காட்டுகிறது.

■ **தமிழ் பிரதேசங்களில் அதிகரித்திருக்கும் நிதி நிறுவனங்களால் எமது சமூகத்துக்கு நன்மை என்ன?**

புகழேந்தி – கட்டுவன்

● நிதிநிறுவனங்கள் உள்நோக்கத்துடன் வகுத்து வைத்திருக்கும் விதிமுறைகளில் சமூகத்துக்கு அநீதியிழைக்கப்படும் தீமையைத் தவிர நன்மை ஏதும் இல்லை.

■ **திருவள்ளுவர் இன்றிருந்தால்..? கல்வி பற்றிய குறளை எப்படி எழுதி இருப்பார்?**

கமலா – சாவகச்சேரி

● கற்றதனால் ஆய பயன் என்கொல் ஆட்சியாளர் பொற்தாள் தொழார் எனின் என்று குறளை மாற்றி எழுதியிருப்பார்.

■ **இரவிரவாகக் கேட்கும் கொத்து ரொட்டி கொத்தும் சத்தம், சங்கீதமா? சாபக்கேடா?**

பசீர் – யாழ்ப்பாணம்

தமிழ் சினிமாக்களின் குத்துப் பாட்டு பேரிரைச்சலுடன் ஒப்பிடும்போது தாள லயம் மாறாத சங்கீதமே..!



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தூரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :..........................................

முகவரி :..........................................

:..........................................

தொலைபேசி இல. ..............................

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

■ **தமிழர்களின் பிரச்சினை எனது ஆட்சியில் தீர்ப்பேன். - இது ஜனாதிபதி வேட்பாளர் கோத்தா பய ராஜபக்ஷ தனது கொள்கை விளக்க உரையில் தெரிவித்துள்ள வாக்குறுதிகளில் ஒன்று.**

● காணி அதிகாரம் இல்லை, மட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ் அதிகாரம் பற்றி யோசிக்கலாம் என இரு தினங்களுக்கு முன்னர் திட்டவட்டமாகக் கூறிய அவர், இப்போது தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப்போகிறாராம்.

ஒரு காலத்தில தமிழருக்கு பிரச்சினை எதுவு மில்லை. இலங்கையில் பயங்கரவாதிகள் பிரச்சினை மட்டும்தான் இருக்கென்று கூறியவர் இவரது சகோதரர் மஹிந்தராஜபக்ஷ. இப்போது இவர் தமிழர் பிரச்சினையை தீர்க்கப்போகிறாராம்...

முள்ளிவாய்க்காலில் தமிழரை முழுமையாகத் தீர்த்துக்கட்ட முயன்றவர் கூறும் வார்த்தைகள் ஆறுதல் தருவதாக இல்லை. அச்சமூட்டுவதாகவே இருக்கிறது...

■ **ஜனாதிபதி வேட்பாளராக கோத்தாபய தெரிவு செய்தது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது என சந்திரிகா அம்மையார் கூறியுள்ளார்.**

● அம்மையாருக்கும் அவரது சிங்கள மக்களுக்குமே இச்செய்தி அச்சத்தை ஏற்படுத்துகிறதென்றால் தமிழ் மக்கள் அச்சப்படுவது ஆச்சரியமிக்கவைதானே...

■ **ஐ.தே.கட்சி தனி ஆட்சி அமைத்தவுடன் இலங்கை மக்கள் அனைவருக்கும் சமமாகவே மதிக்கப்படுவர். இப்படிச் சொல்லியிருப்பவர் ஜனாதிபதி பதவியை குறிவைத்து நகர்வுகளை மேற்கொள்ளும் சஜித் பிரேமதாஸ.**

● தமிழ்மக்களுக்கு தெரியாதா ஐ.தே.க.வின் வண்டவாளம் தமிழ் மக்களைப் பார்த்து சண்டையா, சமாதானமா? என சவால் விட்ட கட்சியல்லவா? பண்டா செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து பாதயாத்திரை மேற்கொண்ட புண்ணிய வான்களின் வழி வந்தவர்களல்லவா நீங்கள்... தயவு செய்து தமிழ் மக்கள் இப்பவும் காதிலை பூ வைத்து கடுக்கண் போட்டவர்களாக இருப்பார்கள் என நீங்கள் நினைப்பது பலவிதமாக உள்ளது உங்களையே உங்கள் கட்சிக்குள் தங்களுக்குச் சமமாக மதிக்காது நடக்கும் சுபாவம் கொண்டவர்களாக இருக்கும்போது... எங்களை அதுவும் தமிழரை சமமாக மதிப்போம் என்று கூறுவது நல்ல நகைச்சுவை.


■ **கோத்தபாயவை சந்தித்ததற்காக த.தே.கூட்டமைப்பிலிருந்து வெளியேறமாட்டம் என்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார் ஐயா தர்மலிங்கம் சித்தார்த்தன்.**

● ஐயா, கேட்பதும் நியாயம்தான். கூட்டமைப்பைச் சேர்ந்த சம்பந்தர், சுமந்திரன் உட்பட பலர் ரணிலை மைத்திரிபாலவை அண்மைக்காலங்களில் அடிக்கடி பகிரங்கமாகவும் அந்தரங்கமா கவும் சென்று சந்தித்து வரும்போது சித்தார்த்தார்தன் ஐயா, கோத்தாவை சந்தித்ததில் என்ன பிழை.. அதுவும் தேர்தல் முக்கியத்துவம் மிக்க காலத்தில்... சித்தார்த்தன் ஐயாவுக்கும் ராஜபக்ஷக்களும் உள்ள நம்பிக்கைபூர்வமான நெருங்கிய தொடர்பு யுத்த காலத்தில எப்படி இருந்தது என்பது தெரியாதா? முள்ளிவாய்க்கால் யுத்தம் மௌனிக்கப்பட்டபோது சித்தார்த்தன் ஐயா முந்திக் கொண்டு மகிந்தருக்கு வாழ்த்துத் தெரிவித்த வரலாறு ஐயா எந்தப் பக்க ஆள் என்றதை உறுதிப்படுத்தி விடுமே...








# வருகிறது...! ஸ்மார்ட் பந்து

கிரிக்கெட்டில் இப்போதெல்லாம் தொழில்நுட்பத்தின் ஆட்சிதான் நடக்கிறது. ஆனாலும், சர்ச்சையான ஆட்டமிழப்புகளை முடிவுக்குக் கொண்டுவர டி.ஆர்.எஸ். தொழில்நுட்பம் உதவினாலும், அதுவே இப்போது சர்ச்சையாகி உள்ளது. இந்நிலையில் இந்தப் பிரச்சினைக்கு முடிவுகட்ட "ஸ்மார்ட் பந்து" அறிமுகமாகிறது.

அவுஸ்ரேலியாவின் பிரபல நிறுவனமான 'கொக்கப்புரா' நிறுவனம்தான் இந்த ஸ்மார்ட் பந்தை அறிமுகபடுத்துகிறது. முதன்முறையாக அவுஸ்ரேலியாவில் நடக்கும் பிக்பாஸ் ருவென்ரி -20 தொடரில் இந்தப் பந்தை பயன்படுத்தப்போகிறார்கள்.


சரி இந்த ஸ்மார்ட் பந்தால் எப்படி ஆட்டமிழப்பு சர்ச்சைகளுக்கு முடிவு கட்டப்படும் என்று யோசிக்கிறீர்களா?

இந்த ஸ்மார்ட் பந்தில் "சிப்" ஒன்று பொருத்தப்படும். அது பந்தின் அதிர்வுகளை தாங்கக்கூடியவாறும் விழுந்துவிடாதவாறும் இருக்கும். பந்து, விக்கெட்டில் உரசியதா அல்லது வீரரின் துடுப்பில் பட்டுகால்காப்பில் பட்டதா அல்லது கால்காப்பில் பட்டு துடுப்பில் பட்டதா என்ற சந்தேகங்களுக்கு எல்லாம் இலகுவாக விடை தந்துவிடும்.

இதேபோன்று, சர்ச்சை பிடியெடுப்பு களின்போது என்ன நேரம் பந்து பிடியெடுக்கப்பட்டது. அது தரையில் பட்டதா? அவ்வாறு தரையில் பட்டதானால் என்ன நேரம் பட்டது என்பதை எல்லாம் துல்லியமாக தகவல் தந்துவிடும்.

இதுதவிர, பந்து செல்லும் வேகம், பவுண்ஸர் ஆகும் வேகம், சுழற்பந்தின் போது அது செல்லப் போகும் திசை என்பவற்றுக்கெல்லாம் பந்தே பதில் தந்துவிடும்.

பிக்பாஸ் தொடரில் இந்தப் பந்து வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டால் சர்வதேச போட்டிகளிலும் பயன்படுத்தத் தகுதி பெற்று விடும்.




# புயலுக்கு ஏது ஓய்வு...!

இந்திய - மேற்கிந்தியத்தீவுகள் தொடரின் இறுதியாட்டத்தில் கிறிஸ் கெய்லின் ஆட்டம் உச்சத்தை வெளிப்படுத்தியிருந்தது. அவரின் ஆவேச ஆட்டம் இதுதான் முதல் தடவையுமல்ல. எப்போதும் அதிரடிக்குப் பெயர் போன கிறிஸ்கெய்ல் 14 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகிறார் என வதந்தி கிளம்பியுள்ளது.

தொடரின் இறுதியாட்டத்தில் பங்கேற்ற கிறிஸ்கெய்ல் 301 என்ற இலக்கம் கொண்ட ஜேர்சியை அணிந்திருந்தார். இந்த இலக்கம் அவரின் ஒட்டுமொத்த ஒருநாள் போட்டிகளைக் குறிப்பதாக அமைந்தது. இதை அடிப்படையாகக் கொண்டே கெய்ல் ஓய்வு பெறுகிறார் என வதந்தி கிளம்பியது.

ஆனால் ஓய்வைப் பற்றி இப்போது நினைக்கவே இல்லை. ஆனால் எனது வாழ்வில் பெரும் திருப்புமுனையாக இந்தப் போட்டி அமையும் என்று தெரிவித்திருக்கிறார் கெயல். அவரின் இந்தக் கருத்து ஓய்வு என்ற செய்தியால் துடித்துப் போன ரசிகர்களுக்கு ஆறுதல்தான்.

அதுசரி எதற்காக அந்த 301 இலக்க ஜேர்சியை அணிந்தார் என்று யோசிக்கிறீர்களா...?

மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்களில் அதிக ஒருநாள் போட்டிகளில் விளையாடியவர் என்ற சாதனைக்காகத்தான் அந்த இலக்கத்தை தனது ஜேர்சியில் பதித்தாராம்.

தவிர, மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்களில் அதிக ஓட்டங்களைக் குவித்த (10,480) வீரர், ஒருநாள் உலகக்கிண்ணத்தில் இரட்டைச் சதம், மேற்கிந்திய வீரர்களில் இரட்டை சதம் அடித்த ஒரே வீரர், அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் (331 சிக்ஸர்), ஒரு போட்டியில் அதிக சிக்ஸர் அடித்த இரண்டாவது வீரர் (16 சிக்ஸர்), ஒருநாள் போட்டியில் அதிக சதமடித்த (25 சதங்கள்) மேற்கிந்திய வீரர், டெஸ்ட், ஒருநாள், ருவென்ரி - 20 என மூன்றுவிதமான போட்டிகளிலும் சதமடித்த முதல் வீரர் என இவரின் சாதனைப் பட்டியல்கள் நீளமானவை.



# தலைவனின் சவால்!

உலக அதிபார குத்துச் சண்டையின் கோடைக் கொண்டாட்டத்தின் 205 ஆவது நேரடி ஒளிபரப்பு போட்டி கடந்த 13 ஆம் திகதி நடந்தது.

இந்தப் போட்டியில் ட்ரியு குலொக், ஒனி லோர்கன் ஆகியோர் மோதிக் கொண்டனர். இறுதிக் கட்டத்தில் லோர்கனின் கால், தலை, கை என்பவை அசையாதவாறு தனது உடல், சக்தி எல்லாவற்றையும் பயன்படுத்தி பூட்டுப் போட்டார் குலொக்.

இந்தப் பூட்டை கழற்ற பெரும் சிக்கல்பட்ட, அவர் தோல்வியைத் தழுவினார். இந்நிலையில் இவர்கள் இருவரும் அறையில் வாக்குவாதப்பட்டார்கள். முறுகல் முற்றிய நிலையில் சண்டைக்கு சென்றவர்களை அதிகாரிகள் தடுத்தார்கள்.

அறையில் நிகழவிருந்த சண்டையை களத்துக்கு கொண்டுவந்தார்கள் அதிகாரிகள். இதனால் அடுத்தவாரம் விருந்தினர்களுக்கு பெரும் மகிழ்ச்சி வாரமாக அமையவுள்ளது. கோதாவில் இறங்கும் குலொக் - லோர்கன் ஆகியோர் தங்களின் அணிகளுக்கு நான்கு சுப்பர்ஸ்ரார்களைத் தெரிவு செய்வார்கள். இவர்கள் ஐவரும் சேர்ந்து போட்டியில் மோதுவார்கள்.

"தலைவனின் சவால்" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் போட்டியில் மோத இருவரும் யாரைத் தங்களின் அணிகளுக்கு உள்வாங்கப் போகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். போட்டி நாளன்று அணிகள் அறிமுகப்படுத்தப்படும்.

தனிச் சண்டையை களச் சண்டையாகக்கி கல்லா கட்டுகிறது நிர்வாகம். எது எப்படி இருந்தாலும் ரசிகர்களுக்குக் கொண்டாட்டம்தான்.

# சச்சினை விரட்டும் கோலி

கிரிக்கெட்டின் கடவுள் என ரசிகர்களால் புகழப்படுபவர் சச்சின் டெண்டுல்கர். சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து அவர் ஓய்வு பெற்று 7 ஆண்டுகள் கடக்கின்றன. ஆனாலும் அவரின் சாதனைகள் பல முறியடிக்கப்பட முடியாதவை என எதிர்பார்க்கப்பட்டன.


சாதனைகள் என்பதே முறியடிக்கப்படுவதற்கே என்பது போல இப்போது விராட் கோலி அவரின் சாதனைகளை மெல்ல மெல்ல தகர்த்து வருகிறார்.

இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான தொடர் இப்போது நடந்து வருகிறது. இதில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக கோலி 8 சதங்களை அடித்துள்ளார். சச்சின் டெண்டுல்கர் 9 சதங்களை அடித்து முன்னிலை வகிக்கிறார். இந்த சாதனையை அவர் விரைவில் சமன் செய்வார் எனலாம்.

ஓர் அணிக்கு எதிராக குறைந்த இனிங்ஸ்களில் 2 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சச்சின் 1, 573 ஓட்டங்களை மட்டுமே குவித்துள்ளார்.

சர்வதேச ஒருநாள் போட்டியில் 11,406 ஓட்டங்களை குவித்துள்ள கோலி, கங்குலியை பின்னுக்குத் தள்ளியுள்ளார். சச்சின் டெண்டுல்கர் 18,426 ஓட்டங்களை குவித்து முதலிடத்தில் உள்ளார். கோலி இன்னமும் துடிப்புடன் சில ஆண்டுகள் விளையாடுவார் என்பதால், சச்சினின் இந்த சாதனையைத்தான் விரட்டி வருகிறார்.















தீபம் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விளம்பர முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 077 198 9445

இந்தப் பத்திரிகை இல. 10, வில்வம் தெரு, கொழும்புத்துறை என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிரைவேற்) லிமிடெட்
நிறுவனத்தால் 18.08.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.